# நாவலன்

சைவாசிரிய கலாசாலை மாணவர் சங்கம்
யாழ்ப்பாணம்

of Jaffna
73
I
; MAIN)

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

ARCHIVES

370.13
CAI
UNIVERSITY OF JAFFNA
LIBRARY

உ

சிவமயம்

# நாவலன்

சைவாசிரிய கலாசாலை

## மாணவர் சங்க வெளியீடு

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

ஈசுவர ஹூ ஆனி மீ

University of Jaffna
250043
Library

250043

250043

ARCHIVES

# விஷய சூசிகை
## CONTENTS


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | நாவலன் திருப்பள்ளியெழுச்சி .... Awake! Navalan | i – ii |
| 2. | நாவலன் .... .... .... Ourselves | 1 |
| 3. | ஏக நிகழ்ச்சி .... .... .... Synchronism | 3 |
| 4. | தமிழ்த் தலைவர்களின் செய்தி .... .... News from Tamil Leaders | 5 |
| 5. | மதி அளவு .... .... .... Measurement of Intelligence | 8 |
| 6. | சித்திரக் கலையின் சிறப்பு .... .... Of Painting | 22 |
| 7. | பாலர்பகுதி எண்பாடமும் உபகரணங்களும் The use of the Concrete in Kindergarten Number | 25 |
| 8. | மனத்தை ஒருவழிப்படுத்துவதெப்படி? How to Concentrate? | 30 |
| 9. | இசைத் தமிழின் இன்றியமையாமை .... The Indispensability of Music | 33 |
| 10. | கணித நொடி .... .... .... An Arithmetical Puzzle | 37 |
| 11. | காதலூக்கமும் பராதீனமும் .... .... Sex & Dependence | 38 |
| 12. | கற்பனைச்செல்வியின் காமருதோற்றங்கள் .... Phases of Imagination: A Poem | 43 |

பக்கம்

13. ஒருவர் தேர்ந்தெடுக்கும் இலக்கத்தைக் கண்டுபிடிக்கும் விதம் .... .... 44
Ways of finding out a Number selected by one

14. அவதான பூமிசாஸ்திரம் .... .. 46
Observational Geography

15. மோரோஒ மோர் .... .... 51
"Oh! Butter milk?"

16. ஊக்கமும் பழக்கமும் .... .... 54
Instinct & Habit

17. சுந்தரம்பிள்ளையவர்கள் மொழிபெயர்ப்பின் சிறப்பு .... .... .... 60
The Excellence of Prof. Sunderampillai's Translation

18. டோல்ரன் முறை .... .... 64
The Dalton Plan

19. இது பொருந்துமா? (சிலப்பதிகார ஆராய்ச்சி) 72
A misrendering in the Kannaki Story

20. நிரை கோடல் .... .... ... 74
Cattle lifting in Ancient Indian Warfare

21. காதலின் கோலம் .... ... 78
How Lovers met: A Poem

22. நாவலன் வருகை .... .... 82
Hail! Navalan

23. பத்திரிகாசிரியர் குறிப்புக்கள் .... .... 84
Editorial Notes

24. மாணவர் சங்க அறிக்கை .... .... 87
The Report of the School Literary Association

25. கற்றுத்தேர்ந்த மாணவர்கள் ... ... 88

பக்கம்

## படங்கள்

## ILLUSTRATIONS

1. கௌரவ சேர் வைத்தியலிங்கம் - துரைசுவாமி முகப்பு
Hon'able Sir Wythialingam Duraiswamy

2. Dr. சி. சுப்பிரமணியம் ஜே. பி. .... 5
Dr. S. Subramaniam J. P.

3. சாதனுபாடசாலை .... .... 25
The Practising School

4. மலாய்நாட்டுச் சகோதரர் கட்டி உபகரித்த கட்டடம் .... .... .... 84
The Building gifted by our brothren in Malaya

5. ஆசிரியரும் ஆசிரிய (விடுகைவகுப்பு) மாணவரும் 87
The Principal, Staff & the Final Students.

உ

# தோத்திரம்

"சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமௌலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்தவிநாயகன்றாள்வணங்கிவாழ்வாம்"

—ஆறுமுகநாவலர்

சை. வி. வி. சங்க போஷகர்



கௌரவ சேர். வைத்தியலிங்கம் - துரைசுவாமி
அவர்கள்

# நாவலன் திருப்பள்ளியெழுச்சி

(ச. வேலுப்பிள்ளை)

1. சென்னிறக் கதிர்பல திசைதொறும் பரப்பிச்
செறியிருள் நீக்கிடத் தினகரன் எழுந்தான்
மன்னிய கலைபயில் மாணவ ரெல்லாம்
மாண்புறு திருமுறை கரமிசைக் கொண்டார்
சென்னியில் நதியணி சிவபிரா னடியார்
திருந்திய முறையொடுந் திருத்தளி புக்கார்
நன்னிலை யுய்த்திடு ஞானநூல் விரிக்கும்
நாவல னேபள்ளி யெழுந்தரு ளாயே.

2. ஆங்கிலஞ் செந்தமிழ் ஆரிய முதலா
அருமொழி நூல்பல ஆய்ந்திடு புலவர்
ஓங்கிய பொறையருள் ஆதிய சீலம்
உற்றிடு மோசரின் உறுதுணை கொண்டே
பாங்குறு மாணவர் பரிவுடன் வளர்த்துப்
பாரினில் உலாவரப் பண்ணுபே றுடையாய்
வீங்கிய புகழுறு நாவலன் எனுமெய்
வித்தக னேபள்ளி யெழுந்தரு ளாயே.

3. கண்ணினை நிகர்த்திடு கணிதசாத் திரமே
கவிகளின் நுண்மதி காட்டிலக் கியமே
நுண்ணிய கலையென நுவலுறு திறத்தாய்
நூதனப் பொருள்பல காட்டுவிஞ் ஞானம்
நண்ணரு வானிடை நல்லொளி பரப்பும்
ஞாயிறு மதியுடு நலம்புகல் வானூற்
றிண்ணிய கட்டுரை செறியுநா வலனும்
தேசிக னேபள்ளி யெழுந்தரு ளாயே.

4. திருந்திய முறையினிற் செழுங்கலை பயிற்றல்
சிறாருளங் கொளற்கெளி தாமெனச் செப்பிப்
பொருந்திய நீதிசேர் புரவலர் சரிதை
புலத்தியல் தெரித்திடு பூமிசாத் திரமே
கருந்தன மாமுடல் காப்பதற் கிசைந்த
கருதுபேர் உடற்கலை யாதியாங் கலைகள்
விருந்தெனப் பயின்றிட விளக்குநன் முறைகள்
விரித்திடு வாய்பள்ளி யெழுந்தரு ளாயே.

5. மெய்ம்மையாஞ் சிவநெறி விளங்கவைத் திடலால்
விழையுசெந் தமிழ்நயம் விரித்துரைத் திடலால்
பொய்ம்மையா முலகுசேர் பொங்கிரு ளகற்றும்
புனிதனா மறுமுக நாவல னொப்பாய்
செம்மையாங் கலைபல செப்பிடு திறனாற்
சிறந்திடு நற்கலை வாணியை யொப்பாய்
நம்மைமே னிலையினை நண்ணிடச் செய்வோய்
நாவல னேபள்ளி யெழுந்தரு ளாயே.

# நாவலன்

எங்கள் கலாசாலையில் எமக்குப் புத்துணர்ச்சியளித்துப் பற்றுக் கோடாக விளங்குவது ஆசிரியமாணவர் சங்கமாகும். அதனை ஆக்கி வைத்த எங்கள் மூத்த சகோதரர்களின் கருணையையும், பெருமையையும் அன்புடன் பாராட்டுகின்றோம்.

ஆசிரிய மாணவர் சங்கத்தைத் தூயதாக்கிப் பிரகாசிக்கச் செய்பவன் நாவலன். அவனை ஒரு ஞானபானுவெனினும் மிகையாகாது. அவனது தோற்றமே நிம்மதியளிக்கும். நிலைபேறான நல்லுணர்ச்சிக்கு அதுவே அத்திபாரமாகும். ஆயின் நாவலன் சிறுவன்; ஒன்பதாட்டைப் பிராயத்தன். காண்போர் அவனைக் கண்ணியப்படுத்தாதிரார். 'வாழும் பிள்ளையை மண்விளையாட்டில் தெரியும்' என்னும் மெய்ம்மொழிக்கமைய, இச்சிறுபிராயத்திலேயே தனது வருங்கால இலட்சியங்களை வெளிப்படுத்துகின்றான். அவனது பெயரிலேயே பெரியாருக்கு நல்ல அன்பு உண்டு. ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமான் சைவமதத்திற்கும் தமிழ் நாட்டுக்கும் தமது உடல், பொருள், ஆவி மூன்றனையும் அர்ப்பணஞ் செய்தார். அஃது ஒவ்வொரு தமிழனதும், ஒவ்வொரு சைவசமயியினதும் மனத்திற் பசுமரத்தாணிபோற் பதிந்துள்ளது.

"நல்லைநக ராறுமுக நாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே—எல்லவரும்
ஏத்தும் புராணாகமங்கள் எங்கே"—

என்றெழுந்த மொழிகள் எவர் மனத்தினை உருக்கமாட்டா? அவை பொன் எழுத்துக்களிற் பொறிக்கத்தக்கவை. அத்தகைய பெரியாரது ஞாபகார்த்தமாகவே இவனுக்கு இப்பெயரிடப்பட்டது.

இனி, நாவலனது விளையாட்டுக்களைக் கவனிப்போம். நாவலன் சென்ற வருடங்களில் இயன்றவரை தன் சாமர்த்தியத்தைக் காண்பித்தான். ஆசிரியரது க்ஷேமமே அவனது க்ஷேமம். ஆசிரியர்களது இன்பமே அவனது இன்பம். இன்பதுன்பங்கள் எக்காலத்தும் நிலைத்திரா. ஆசிரியர்களின் மனத்தை வருத்தும் சில படி வகுப்புத் (Grade) திட்டங்கள் வித்தியா பகுதியாரால் வெளியிடப்பட்டன. இவற்றால் ஆசிரியர்களும் ஆசிரிய மாணவர்களும் சிறிது தளர்ச்சியடைந்தனர். நாவலனுக்கும் ஒருவித கசப்பு—மனவருத்தம். அகத்தின் அழகு முகத்தில் தெரியுமல்லவா? நாவலன் தன்னை

நன்றாக அலங்கரிக்க விரும்பினானல்லன். எனினும் புதுவருடக் கொண்டாட்டத்திற்கு ஒருவாறு புறப்பட்டிருக்கிறான். சுற்றமித்திரரைத் தரிசித்துத் தனது சிறுமனநோயை மாற்றிக்கொள்வான்போலும். அவனை வழக்கம்போல் வரவேற்று வேண்டிய உபசரணைகள் புரிதல் நல்லோர் கடனாகும்.

"அன்பர்பணி செய்யவெனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே."

என்பதுதான் நாவலனின் கனவு. நாவலன் புறப்பட்டகாலம் வசந்தகாலம். வசந்தகாலத்துக் களியாட்டுக்களிலும் நாவலன் பங்குபற்றுவான். சைவக்குயில் கூவுகின்றது. யாழ்ப்பாணத்துக் கண்டனக் கூட்டங்களில் நாவலன் ஒரு கண்ணை வைத்துவிட்டான். சமயத்தொண்டு புரியச் சமயம் சமயம்! இது நல்ல சமயம்!! என்னும் ஆரவாரத்தோடு புறப்பட விரும்புகிறான். தன் தோழர்களைக் கைகொட்டி அழைக்கிறான். தாதாக்களுக்கு முதுகிலே தட்டிக்கொடுத்து 'உஷார்' சொல்ல விரும்புகிறான். சைவாசிரியர்களை எச்சரிக்கை செய்கிறான். சைவப் பெற்றாருக்கும் பிள்ளைகளுக்கும் தேனூறும் மொழிவிருந்து செய்ய ஆவல்கொள்ளுகிறான். சைவ ஆசிரியர்களே! சைவப் பெரியோர்களே! நாவலனது விருப்பத்தை நிறைவேற்றுவது உங்களது ஒன்றுபட்ட மனப்பான்மையேயாம்.

நாவலன் தமிழாசிரியர்மேல் அன்புடையன். அவன் அவர்களுக்காகவே இரங்குகிறான். உயர்வாகிய இலக்கண இலக்கியங்களையும் சமய சாஸ்திரங்களையும் தமிழாசிரியர் நன்கு கற்கின்றனர் என்பதைக் கேட்டாற்கூட ஒரு முழம் வளர்ந்துவிடுவான் நாவலன். அவன் சிறுவன் என்பது முன்னமே குறிப்பிடப்பட்டது. அவனது அன்பான வீரம் தொனிக்கின்ற மழலை வார்த்தைகளை அமிர்தமாகப் போற்றுவீர்களாக.

சைவமுந் தமிழும் தழைக்குமாறு தேசத்திலே தொண்டுசெய்யத் தலைப்பட்ட நாவலன் — சிறிய குழந்தை—வளர்ச்சியடையுமாறு ஆனந்த வள்ளலும், அடியார்க் கெளியனுமாகிய சிற்றம்பலவனைத் திரிகரணசுத்தியோடும் வழிபடுகின்றாம். நாவலன் வாழ்க! அவன் எண்ணங்கள் வாழிய!! சைவமக்கள் வாழிய!!!

"பத்திரிகாசிரியர்"

# ஏக நிகழ்ச்சி

—(மு. பொன்னம்பலம்)

ஒரே நேரத்தில் நடைபெறும் அநேக நிகழ்ச்சிகளுள. இவற்றுள் சிலவற்றைக் கண்ணுற் காணக்கூடும். சிலவற்றைக் காண்டலுமரிது. இவற்றை மற்றவர்கள் அறியும்பொருட்டு எழுத்திலமைப்பதென்றால் மகா கஷ்டம். இவ்வித கஷ்டங்கள் புலவர்களுக்கும் தோன்றாமலிரா. இருந்தும் தங்கள் கவி வன்மையால் மிக எளிதில் நிவிர்த்திபண்ணிக்கொள்கிறார்கள்.

இப்பொழுது இரு புலவர்கள் ஏக நிகழ்ச்சியை யெவ்வாறு கூறியிருக்கின்றார்கள் என்பதை நோக்குவோம்.

இராவணனாற் கவர்ந்து செல்லப்பட்ட சீதையைத் தேடிவரும்படி, பலரை இராமபிரான் அனுப்பியிருந்தார். தேடிச் சென்றவர்களில் அனுமான் சீதையைக் கண்டான். அவளுக்கு அபயங்கூறி, இராமபிரான் கொடுத்த மோதிரத்தை அவளிடங் கொடுத்தான். அப்பொழுது ஒரு பெரும் விநோதம் நடந்தது. அனுமானிடம் மோதிரத்தைப் பெற்ற சீதை அதைத் தன் மார்போடணைத்தாள். இராமபிரானைப் பிரிந்தது முதல் சீதையின் மனத்தில் விரகாக்கினி யெரிந்து கொண்டிருந்தது. மார்பில் மோதிரம் வைத்தவுடன் இவ்வக்கினிபட வுருகியது. ஆனால், அப்பொழுதுதானே மோதிர பரிசத்தினால் எரிந்து கொண்டிருந்த மனம் குளிர்ந்தது. குளிரவே உருகிய மோதிரம் வலித்தது. மோதிர முருகியவுடனே உரு மாறுந் தன்மையது. ஆனால் அம்மோதிரம் உரு மாறவில்லை. ஆகவே உருகியதில்லையென்றுதான் சொல்லவேண்டும். ஆனால் அந்த வெப்பத்தினால் மோதிரம் உருகாமலிராது. சீதையின் மனம் எப்பொழுதும் எரிந்துகொண்டே யிருந்தது. எனவே அதில் வைத்த மோதிரம் உருகியிருக்கத்தான் வேண்டும். உருகும்பொழுது நீரிற் போட்டுக் குளிரச்செய்தால் உரு மாறாமலிருக்கமுடியும். மோதிரம் பட்டதும் மனம் குளிர்ந்தது. ஆகவே மோதிரமுங் குளிர்ந்திருக்கும். எனவே உரு மாறாமலிருந்திருக்கும். ஆனால் உருகுதலும் குளிர்தலும் உடனே நிகழவேண்டும். இன்றேல் மாற்றங் காணப்பட்டிருக்கும். இவ்விரண்டு செயல்களும் ஒரு கணப்பொழுதில் நிகழ்ந்ததாகக் கம்பர் கூறியிருக்கின்றார். கண்ணுற் காணுவதன்றி, மனத்தாலும் நினைக்கவும் இயலாததொரு நிகழ்ச்சியை வெகு அழகாகக் கம்பர் கூறியிருக்கின்றார். பின்வருஞ் செய்யுள் சீதையின் நிலையை ஸ்ரீ ராமனுக்கு அனுமார் கூறியதாகக் கூறப்பட்டது.

"ஒருகணத் திரண்டு கண்டே னொளிமணி யாளி யான்ற
திருமுலைத் தடத்து வைத்தாள் வைத்தலுஞ் செல்வ நின்பால்
விரகமென் பதனின் வந்த வெங்கொழுந் தீயி னால்வெந்
துருகிய துடனே யாறி வலித்தது குளிர்ப்புள் ளூற."


இனி, மனோன்மணீயத்திலுள்ள சிவகாமி சரிதையில் ஒரு நிகழ்ச்சியைக் கவனிப்போம். சிவகாமியோடு கோபித்துக்கொண்ட சிதம்பரன் தவ வேடம் பூண்டு காட்டில் வசித்துவந்தான். சிதம்பரன் திரும்புவானென்று பலகாலமாகப் பார்த்திருந்த சிவகாமி மனமுடைந்து அவனைத் தேடிச் சென்றாள். காடு மலைகளெல்லாந் தாண்டி தவவேடத்தோடிருக்கும் சிதம்பரனைக் கண்டாள். அவளை இன்னாளென்று அவனுக்குத் தெரியாது. அவனை இன்னானென்று அவளுக்குந் தெரியாது. அவள் தன்னுடைய வரலாற்றை அவனுக்குக் கூறிவந்தாள். அவனுக்கு மனஞ் சகிக்கவில்லை. தன்னை வெளிப்படுத்தாமலிருக்க முடியவில்லை. உடம்பு பதறியது. அடக்கினான்; அடக்கிப்பார்த்தான்; இயலவில்லை. தன்னைச் சிதம்பரனென்றான்; இல்லை! என்று சொல்லவில்லை; சொல்லமுன்; சொல்லும்போது இருவரும் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டனர். யார் முந்தித் தழுவினாரென்பது இன்னுந் தெரியவில்லை. இதை மிக அழகாக ஆசிரியர் சுந்தரம்பிள்ளை படம்பிடிக்கின்றார்.

"சிவகாமி யானுனது சிதம்பரனே" யென்னச்
செப்புமுன மிருவருமற் றோருருவ மானார்!
எவர்தாமுன் னணைந்தனரென் றிதுகாறு மறியோம்
இருவருமொன் றாயினரென் றேயறையுஞ் சுருதி.

"திருவாரு நல்லைநகர்ச் செவ்வேற் பெருமானார்
இருவாலைக் குயத்தியரோ டின்பமுற்றா ரம்மானை
இருவாலைக் குயத்தியரோ டின்பமுற்றா ராமாயின்
தருவாரோ சட்டிகுடஞ் சாறுவைக்க வம்மானை
தருவார்காண் சட்டிகுடஞ் சாறுவைக்க வம்மானை."

—நல்லைக்குறவஞ்சி.

சை. வி. வி. சங்கத் தலைவர்



டக்டர் S. சுப்பிரமணியம் அவர்கள் J. P.

# தமிழ்த் தலைவர்களின் செய்தி

(க. அருணாசலம்)

தமிழ்மொழி தழைக்கவும், சைவநெறி புத்துயிர் பெறவும், தமிழரின் அந்தஸ்து சீர்பெறவும் உழைத்த ஈழநாட்டுப் பெரியார்களான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரதும், பொன்னம்பலம் இராமநாதனதும் இறந்ததின விழாக்கள் எம்நாட்டில் எங்கும் விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன. அவர்கள் இவ்வுலகவாழ்வை நீக்கும்பொழுது அவர்கள் மனசில் ஆழ்ந்த துயரம் வேரூன்றியிருந்தது.

இப்பெரியார்களை விண்ணுலகிற்கண்டு பலசெய்திகளை அறிவித்தற் பொருட்டும், அவர்களிடம் செய்திகளைப் பெறுதற் பொருட்டும் எமது அந்தரங்க நிருபரை அனுப்பினோம். எமது நிருபரை அவர்கள் வரவேற்றார்கள். அவர்களுடன் அகால வயதில் இவ்வுலக வாழ்வை நீத்த தேசிய வரகவி சுப்பிரமணிய பாரதியாரும் இருந்தனர். எல்லோரும் வாடிய முகத்துடன் காணப்பட்டனர். நிருபரை வரவேற்றது தான் தாமதம். அத் தமிழ்நாட்டுப் பிரமுகர்கள் மூவரும் பல சரமாரியான வினாக்களை வினாவினர். "சைவ மதத்தின் நிலைமை யாது? செந்தமிழ் வளர்ச்சிக்கு அறிகுறி யாதேனும் உண்டா? டொனமூர்த் திட்டம் இன்னும் உயிருடன் இருக்கின்றதா?" என்று பல கேள்விகள் தொடர்ந்தன.

நம் நிருபரும் சைவமுறையில் நமஸ்கரித்துவிட்டு விடையிறுக்கத் தொடங்கினார். "சைவ வித்தியா விருத்திச் சங்கம் என்றோர் ஸ்தாபனம் இருக்கின்றதல்லவா?" எனலும், அம்மூவருள் ஒருவர், "ஆமாம்" என்றனர். "அச்சைவ ஸ்தாபனத்தை நடாத்தும் பல சைவ மதியூகிகளால் சைவமதம் அழிவின்றிக் காப்பாற்றப்படுகின்றது. எங்கும் சைவ வித்தியாசாலைகளின் காட்சி. எங்கும் சைவ ஆசிரியர்களின் முழக்கம். எங்கும் சைவமாணவரின் ஆரவாரம்" என்று சொல்லி முடிக்கு முன் நாவலரது வாடிய முகம் மலர்ந்தது. "செந்தமிழ் வளர்ச்சி எப்படி! எப்படி"! என்று கடாவினர் நாவலர். "அதற்கும் குறைவா. அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மதுரைத் தமிழ்ச்சங்கம், திருவாவடுதுறை யாதீனம், யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் எல்லாம் தமிழை வளர்க்கின்றன. செந்தமிழ் புரக்கும் வள்ளல்களும் ஆங்காங்கு இருக்கின்றனர். இன்னும் எங்கள் நாட்

டிலே போதாததற்கு பரமேசுவர பண்டித பயிற்சிக் கழகம் என்று ஓர் கல்லூரியும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது" என்றார் நம் நிருபர்.

பின்பு நிருபர் சேர். இராமநாதனை விழித்து, "பெரும! நம் நாட்டு அரசியல் நிலை மோசமாகிவிட்டது. உங்களின் மறைவின்பின் டொனமூர்த்திட்டத்தைப் பற்றிய பேச்சும் மறைந்துவிட்டது. தமிழ்மொழி பேசத் தெரியாதவரும், தமிழரின் நிலையைச் செவ்வனே உணராதவரும் தமிழரின் தலைவர் பதவிக்கு வாதாடிப் போராடி, அரங்கத்திலே தோன்றி மறைகின்றனர். இத்தலைவர்கள் போலிப் பதவிகளைப் பெறுதற்கும், அற்ப இலட்சியங்களை நிறைவேற்றுவதற்கும் செய்யும் திருவிளையாடல்கள் கொஞ்சம் அல்ல. அந்நியருடன் நட்புக்கொண்டாடுகிறார்கள். புறமதத்தினருக்குச் சலுகை காட்டுகிறார்கள். ஒரு காலம் இவர்களின் பெருமுயற்சியினால் ஏழைத் தமிழரின் வறுமை நீங்கும்; தமிழ்மொழி சிறக்கும்; சைவமதம் ஓங்கும்" என நாம் எண்ணினோம். ஆனால் அவையெல்லாம் பகற்கனவாயின. கிராமங்களிலே தொண்டை நோவக் கஷ்டப்படும் தமிழ் ஆசிரியரின் சம்பளத்தைக் குறைக்கவேண்டுமெனச் சில தலைவர் தொடங்கிவிட்டனர். கீழ்தர நீதிமன்றங்களிலே சுதேசமொழியிற் காரியங்கள் நடாத்தப்பட வேண்டுமெனக் கொண்டுவரப்பட்ட பிரேரணையை ஒரு தமிழ்த் தலைவர் தீவிரமாக எதிர்த்தார். மேலும் சில தினங்களுக்குமுன் சம்பத்திரிசியார் கல்லூரியிலே கிறீஸ்தவரால் நடாத்தப்பட்ட கண்டனக் கூட்டத்தில் எங்கள் சைவத் தமிழ்த் தலைவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவுகளைப்பற்றி என்னென்று இயம்புவது. தமிழ்மொழி வளர்ச்சிக்கும், சைவசமய உணர்ச்சிக்கும் அரும்பாடுபட்ட குடும்பங்களிலே தோன்றிய இவர்கள் இவ்வாறு செய்ய முயல்வது கலிகாலத்தின் கொடுமைதான். நீங்கள் இவர்களுக்குக் கனவிலாவது தோன்றிப் புத்திபுகட்டுங்கள்" என்று கூறினார் நம் நிருபர்.

பின்பும் நம் நிருபர் சேர். இராமநாதனை நோக்கி, "அரும் பெருந் தலைவ! தாங்கள் விரும்பியதற்கு எதிராக, சர்வகலாசாலை கண்டியில் ஸ்தாபிக்கப்படப் போகின்றது," என்று சொல்லி முடிக்குமுன், "இந்தக் கலாசாலை எத்தனை பட்டதாரிகளை உற்பத்தி செய்யப் போகிறது பார்ப்போம். எல்லோருக்கும் ஒருவேளை ஆசிரிய கலாசாலைகள்தாம் புகலிடமாய் இருக்கலாம்," என்று தேசாபிமானி பாரதியார் கூறிவிட்டு, "எம்நாட்டு அரசியல்நிலை எப்படி? என்று ஆவலாக வினவினர். "உங்கள்நாட்டு அரசியல்மேகம் இருண்டவண்ண

மாகவே இருக்கின்றது. ஆயினும் உங்கள்நாட்டு வீரர்கள் ஈற்றில் வெற்றிமாலை சூடுவது நிச்சயம்," என்று நிருபர் விடையிறுத்து விட்டுப் பின்பும் தொடர்ந்து, "உங்கள் வேலைகளை இரு தென்னாட்டுக் கவிகளான தேசிகவிநாயகம்பிள்ளையும் இராமலிங்கபிள்ளையும் பூர்த்திசெய்து வருகின்றனர்," என்று கூறிமுடித்தார்.

அம்மூன்று பெரியார்களும் நிருபரை விளித்து, "அன்பனே! இச்செய்திகளை அறிவித்ததற்கு அதிக நமஸ்காரம். எவ்வித இடையூறு வரினும் ஊக்கம் குன்றாது தமிழும் சைவமும் ஓங்கும்படி தொண்டாற்றுமாறு நம்நாட்டு மக்களுக்கு அறிவியும்," என்று கூறினார்கள். விண்ணுலகத்தில் இருக்கும் தொண்டர்கள் கரகோஷம் செய்தனர். காந்தருவர் அமுதகீதம் பொழிந்தனர். இவ்வாரவாரங்கட்கிடையில், "சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்க," என்றார் நாவலர். "வீதிகள்தோறும் தமிழ் முழக்கம் செய்க," என்றார் பாரதியார். "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்," என்றார் நம்நாட்டுத் தலைவர் சேர். இராமநாதன். நிருபர் முப்பெரியோர்களிடமும் நமஸ்கரித்து விடைபெற்றுக்கொண்டு திரும்பினர்.

---

"அடிதாங்கு மளவின்றி யழலன்ன வெம்மையாற்
படியவே கனங்குழாஅய் காடென்ரு ரக்காட்டுட்
டுடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே;

இன்பத்தி னிகந்தொரீஇ யிலைதீந்த வுலவையாற்
றுன்புறூஉத் தகையவே காடென்ரு ரக்காட்டு
ளன்புகொண் மடப்பெடை யசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவு முரைத்தனரே;

கன்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலாற்
றுன்னரூஉந் தகையவே காடென்ரு ரக்காட்டு
ளின்னிழ லின்மையான் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்குங் கலையெனவு முரைத்தனரே"

—பாலைக்கலி

# மதி அளவு

## (MEASUREMENT OF INTELLIGENCE)

### (சி. சிதம்பரப்பிள்ளை)

ஐக்கியமாகாணங்களிலுள்ள நூற்றுக்கணக்கான நகரங்களிலிருந்து சேர்த்துக் கண்ட உண்மைகளிலிருந்து பள்ளிக்கூடப் பிள்ளைகளில் மூன்றிலொன்று தொடக்கம் அரைப்பங்குவரை கருதியிருந்த அளவுக்குப் படிப்பில் நயங்காட்டவில்லை என்பது பெறப்படும். பத்துத் தொடக்கம் பதினைந்து வீதமானோர் இரண்டுவருடம் அல்லது அதற்கு மேலும்; ஐந்து தொடக்கம் எட்டு வீதமானோர் மூன்று வருஷங்களுக்கும் தாமசப்பட்டனர். கற்பித்தும் பயன்படாமை கண்டு திரும்பவும் கற்பிப்பதற்காக அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில் வருஷா வருஷம் 40,00,00,000 டொலர் பணம் செலவழிகிறது. (ஒருடொலர் = சுமார் இரண்டேமுக்கால் ரூபா). இக்குறையை ஒவ்வொரு பிள்ளைக்கும் அதற்கேற்ற பயிற்சிகொடுத்தும், திருந்திய உயர்ச்சி முறைகளைக் கையாண்டும், பிள்ளைகளின் சுகாதாரத்தைக் கவனித்தும், பள்ளிக்கூட நடாத்துகையில் புதிய முறைகளைப் பிரயோகித்தும், இன்னோரன்ன முறைகளினால் நிவிர்த்திசெய்யக்கூடுமென்றெண்ணினர். இவ்வித திருத்தங்களினால் பொதுவாக நன்மைகள் வந்தபோதிலும், சிலவேளைகளில் ஏமாற்றமடைதலுமுண்டு.

வரிசைப்படுத்திய மதிப் பரீட்சைகளால் பள்ளிக்கூடப் பிள்ளைகளை மனத் தத்துவ முறைகள்மூலம் பரீட்சித்தபொழுது, பிள்ளைகள் "சராசரி", "உறுதியற்ற மனசுடையர்" என்னு மிருபிரிவுகளில் மாத்திரம் அடங்கார் என்பதும்; மதி, பேதைமை முதல் அதிவிவேகம் அல்ல தபூர்வவிவேகம் ஈறாகவுள்ள பல பிரிவுகளை உடைத்து என்பதும் அறியக்கிடக்கின்றது. இவ்வித்தியாசங்கள் பள்ளிக்கூடப் படிப்பால் நயமடைதற்கு வேண்டிய இயல்பைப் பாதிக்கின்றன. ஒரு சராசரியான பிள்ளையின் சராசரிக் கல்விநிலையளவிற்கு மானசிகக் குறைவுள்ள பிள்ளையின் நிலையைக் கொண்டுவருவதற்குச் செய்யும் முயற்சியிலும் பிள்ளைகளின் இயற்கைச் சக்தியிலுள்ள குறைகளை அறிந்து அவர்களது சராசரி நிலைக்கேற்க நயங்காட்டும் முறையில் அவர்களுக்குக் கற்பிப்பதே சிறந்ததெனலாம். பிள்ளைகள் ஒருமுறை அபஜெயமடைந்த பள்ளிக்கூட வேலையில் மறுமுறை அதிக ஆர்வத்துடன் ஏற்றொழுகமாட்டார் என்பது நன்கறிந்த உண்மையாம். அபஜெயம்,

சுய நம்பிக்கையைக் குறைத்து முயற்சியிலார்வத்தை முற்றா யொழிக்கிறது. பள்ளிக்கூடங்களில் பெரும்பான்மையான மாணவர் அபஜெய மடையும் பழக்கத்தை உழைக்கிறார்கள் என்ற உண்மை சஞ்சலத்துக் கிடமாகிறது. இதற்கு மாற்றாவது, ஒவ்வொரு பிள்ளைக்கு மதன் விவேகத்திற்கேற்றளவு வேலை கொடுப்பதேயாகும். ஒரு வியவகார சிற்பி ஒரு புகையிரதப் பாலத்தைக் கட்ட எத்தனிக்குமுன் அதற்குத் தேவையான பொருள்களைப்பற்றி ஆராய்வதுடன் அப்பொருள்களின் தன்மைக்கேற்பச் செய்யும் வேலையினளவையும் உண்மையான சாஸ்திரீயமான பரீட்சைகள்மூலம் கண்டறிகிறான். அவன் முன் யோசனையின்றிச் செய்து இறுதியில் வரும் கஷ்டங்களை அப்போதைக்கப்போது திருத்துவோமென்ற எண்ணம் கொள்ளான். அவ்வாறே ஓர் கல்விச் சிற்பியும் இம்முறையைப் பின்பற்றவேண்டும். அபஜெயத்தையும் பொத்துவேலையையும் கைவிட்டு, ஆராய்ச்சியையும் முன்யோசனையையும் ஏற்கவேண்டும். இக்காலமோவெனின் பிள்ளைகளின் புத்திநுட்பத்தை அநுமானித்தறியாமல், சாஸ்திர ஆராய்ச்சிமுறைகளினால் அறியக்கூடிய காலம். பள்ளிக்கூடத்தி லபசித்தியடையு மல்லதடையப் போகும் ஒவ்வொரு பிள்ளையினதும் மனப்பான்மையை அறியக்கூடிய பரீட்சைகள் நடாத்துதல் வேண்டும். இப் பரீட்சைக ளதிகநேரமெடாதபோதும், ஒரு பிள்ளையின் தன்மையை அறிதற்கு வேறுவகைகளிலும் மேம்பட்டவை. புத்தி நுட்ப ஆராய்ச்சிகளால் பல பள்ளிக்கூடங்களில் நூற்றுக்கு இரண்டுவீதமானோர் எவ்வயதடைந்தபோதிலும் ஒரு சராசரியான பதினொரு வயசுப் பிள்ளையின் புத்தி நுட்பத்திலும் கூட வடையமாட்டார்களென்பதேயாகும். இம் மாணவர்கள் கணித வாய்பாடுகளை அறிதலிலும் மனனம் செய்வதிலும் தகுதி வாய்ந்திருந்தபோதிலும், சராசரி புத்தி நுட்பமுள்ள மாணவர் நியாயித்தல்போலவும், மதித்தல்போலவு மவர்கள் செய்தலரிது. நூற்றுக்கு இருபத்தைந்து வீதமான அபராதிகள் மனப்பான்மையில் குறைந்தவர்களென்பது சாஸ்திர ஆராய்ச்சிகளால் கண்டறிந்த ஓர் உண்மை.

டாக்டர் கொட்டாட் என்பவரின் தலைமையின்கீழ் நியூஜேசியில் நூறு யௌவன அபராதிகளுக்கு பெனெற்றினுடைய ஆராய்ச்சிமுறைகள் உபயோகப்படுத்தப்பட்டன. அவர்களுள் ஏறக்குறைய ஐம்பது பேர் புத்திநுட்பம் குறைந்தவர்களாகக் காணப்பட்டனர்.

பதினேழுவயசுப் பையனொருவன், சராசரி புத்தி நுட்பமுள்ள ஒன்பது வயசுப் பிள்ளையின் விவேகத்தை யுள்ளவனாகக் காணப்பட்டான். வேறொரு பதினைந்தரைவயசுப் பையன், எட்டுவயசுடைய ஒருவனின் புத்தி நுட்பத்தை யுடையவனாயிருந்தான்.

பதினேழுக்கும் இருபதுக்கும் இடையில் வயசுள்ள பதினைந்து தவருன நடையுள்ள பெண்பிள்ளைகளை டாக்டர் கில் என்பவரும் டாக்டர் கொட்டாட் என்பவரும் பரீட்சித்து ஏறக்குறைய அரைவாசிப்பேர் ஒன்ப தல்லது பத்துவயசுடையவர்களின் புத்தி நுட்பத்தை உடையவர்களெனக் கண்டனர்.

ஐக்கியமாகாணத்திலுள்ள கைத்தொழில் பெண்பாடசாலையில் உள்ள 1186 பெண்பிள்ளைகளை ஸ்ரீமதி டோசன் பரீட்சித்து நூற்றுக்கு இருபத்தெட்டு விதமானேர் சராசரியில் குறைந்த புத்தி நுட்பமுடையோராகக் கண்டனர்.

கூர்ந்த விவேகமுள்ள பிள்ளைகளும் மதிநுட்பம் குறைந்த பிள்ளைகளைப்போலவே நூற்றுக்கு இரண்டுவிதமாயிருக்கிருர்கள். ஒரு ஊரின் முன்னேற்றம், ஆழ்ந்த யோசனையாளர், சாஸ்திர ஆராய்ச்சியாளர் முதலியோர்களைப் பொறுத்திருக்கின்றது. சாதாரண அறிவாளிகள் கூர்மையுள்ள அறிவாளிகளைப் பின்பற்றவும், அவர்களைப் போன்று நடிக்கவும் சக்தியுள்ளவர்களேயொழிய, அவர்களைப்போல வழிகாட்டிகளாயிருக்கமாட்டார்கள். உலகம் முழுவதையும் நோக்கின், பள்ளிக்கூடத்தால் தீமையடைகிறவர்கள், நன்மையடைகிறவர்களிலும் பார்க்கப் பத்துப்பங்கதிகமாயிருக்கிருர்கள். மனத்தத்துவ ஆராய்ச்சியால் அறியக்கிடப்ப தென்னவெனில், அதி விவேகமுள்ள பிள்ளைகளின் புத்தி நுட்பம் ஆசிரியர்களால் மட்டிடுவதற்கில்லை என்பதேயாகும்.

பத்தரைவயசுப்பிள்ளை ஒருவனை, ஆசிரியர் அளவுக்கு மிதமான புத்திக்கூர்மையில்லாதவனெனக் குறிப்பிட்டார். ஆனல் மனத்தத்துவ ஆராய்ச்சியின்படி, அவன் சராசரி பதினெட்டு வயசு மாணவனிலும் பார்க்கக் கூடிய புத்தி நுட்பமுடையோனுகக் காணப்பட்டான். பள்ளிக்கூடப் பாடங்களில் எளிதில் எப்பொழுதும் அதிகமான புள்ளிகள் பெறும் ஒவ்வொரு பிள்ளைக்கும் மனத்தத்துவ ஆராய்ச்சி நடாத்தப்படவேண்டும். அப்பிள்ளையினுடைய விவேகம், சராசரிக்குக் கூடுமாகில், அப்பிள்ளைக்கு வகுப்பேற்றம் செய்யவேண்டும். அவ்விதம் செய்யாவிடில், அப்பிள்ளை தன்னல் இயலக்கூடிய வல்லபத்தைப் பள்ளிக்கூடப் பாடங்களைப் படிப்பதில் உபயோகிக்காமல் இருக்கும் பழக்கத்தைக் கைக்கொண்டு தன் பிற்சீவியத்திலும் சோம்பற் குணத்தைக் காட்டும். மனேதத்துவ ஆராய்ச்சி முறைகள் புத்திநுட்பம் குறைந்தவர்களுக்கும் அதிகம் கூடினவர்களுக்கும் மாத்திரமன்று, ஏனைய மாணவர்களுக்குமே. அவர்களுடைய புத்தி நுட்பத்துக்குத் தகுந்தபடி வகுப்புகளாகப் பிரித்துவிடுவதற்குப் பயன்படக்கூடியதாயிருக்கின்றன.

வேலை ஆட்களைத் தெரிவதில் தற்போதைய முறைகளும், தகுதிக் குறைவுகண்டு சிறிய வேலைகளுக்கு மாற்றுவதும், வீண்செயல்களா கவும் தேவையற்ற செயல்களாகவு மூகிக்கப்படுகின்றன. இலகுவான தும் திருப்தியானதுமான முறை யாதெனில் கைக்கூலி வாங்குவதில் பிரீதியற்ற ஒரு மனத்தத்துவ சாஸ்திரியை நியமித்து, அவரைக் கொண்டு மனுச்செய்திருப்பவர்களைப் பரீட்சித்து தகுதியற்றவர்களை விலக்கிவிடுதலேயாகும்.

மதிநுட்பப் பரீட்சையில் வேறொரு பிரதான அம்சம் மனோசக் தியை விரிப்பதற்கு எவை அநுகூலப்படுகின்றனவென வறிதலாம். பிள்ளைகளின் மனோசக்தியை வளர்ப்பதில் தடைசெய்யு மம்சங்களை அறிந்து அவற்றை விலக்கல் வேண்டற்பாலதே. அவற்றைச் செவ்வனே ஆலோசித்து நன்மை தீமை யறியும்வரை எங்கள் பிரயத்தனங்களெல் லாம் போலியாய் நிற்கும். நற்குணத்துக்கடுத்தபடியாக மதி நுட்பத் தைப்போன்று வேறெதுவும் ஒரு பிள்ளையின் வருங்காலத்தை வரை யறுக்கமாட்டாது. மதிநுட்பத்தில் எவ்வகுப்பினரும் தங்கள் தங்கள் தகுதிக்கேற்ற தொழில்களில் விவேகத்தைச் செலுத்துவதால் ஆதாய மடைவர். மதிநுட்பப் பரீட்சைகள் எங்களுக்குக் கற்பிக்கவேண்டிய வற்றை நாங்கள் கற்றுவிட்டால், மனோசக்தியில் குறைவுற்ற வேலை யாட்களை வேலையில் நயமின்மைகண்டு நாம் வையேம்; மனோசக்தி யில் குறைந்த பிள்ளைகள் படிக்கவியலாமைகண்டு தண்டியேம்; அல் லது நல்வாழ்வின்தன்மை புலப்படாது மனோசக்தியில் குறைந்த அபராதிகளை மறியற்சாலையிலிட்டாவது தூக்குத்தண்டனை விதித்தாவது வருத்தேம்.

முதலாவதாக, நாம் எப்படி வெளிச்சத்தை அளப்பதற்கு பிர மாணமாக ஒரு சுக்கில மெழுகுவர்த்தியை உபயோகிக்கிறோமோ, அப்படியே சராசரி மதிநுட்பத்தினளவைப் பிரமாணமாக மனத்தில் பதித்தல் வேண்டும். ஒரு சராசரி மாணவனின் மதிநுட்பத்தை மிகை யாக மதித்தலே ஆசிரியரிலுள்ள ஒரு பொதுவான பிசகாகும். அதன் காரணம் ஆசிரியர் வயசு வித்தியாசத்தை அசட்டைபண்ணி மதிநுட் பத்தை மட்டிடுவது. கீழ்வரும் உதாரணம் கவனிக்கற்பாலது.

பையனின் வயசு பதினேழு. பாடசாலை வேலை "சராசரி." ஆசிரி யரின் மதிநுட்ப மதிப்பு "சராசரி." பரீட்சையின்மூலம் பிள்ளை குறைவெனக் காணப்பட்டான். ஆசிரியர் அப்பிள்ளையை வகுப்பு மாணவராகிய பன்னிரண்டு வயசுப் பிள்ளைகளுடன் ஒப்பிட்டார்.

அதியுந்த தகுதியை மதிப்பதிலும் பிசகுகளேற்படும். உந்த தகுதியையுடைய பிள்ளை வகுப்பிலுள்ள சராசரிப் பிள்ளையிலும் இரண்டொரு வருஷம் இளையவனுயிருப்பான். ஆனதுபற்றி அதியுயர்ந்த பிரமாணத்தால் அவன் மட்டிடப்பட்டிருப்பான். கீழ்க்காட்டியதோ ருதாரணமாகும்.

பிள்ளையின் வயசு பதினொன்று. ஆசிரியருடைய மதிநுட்ப மதிப்பு "சராசரி" உம் "எல்லாவகையிலும் தகுதி வாய்ந்தவனும்" என்பது. ஒரு வருஷம் மூப்பான ஒரு வகுப்புப் பிள்ளைகளுடன் ஆசிரியர் ஒப்பிட்டுள்ளார்.

பெனெற் என்னும் மனத்தத்துவ சாஸ்திரி கீழ்வரும் வினவுக்கு ஒரு தொகையான ஆசிரியரிடமிருந்து விடைகள் பெற்றூர். வினு: உமது மாணவரின் மதிநுட்பத்தை எதைக்கொண்டு நீர் மதித்தீர்? சிலர் (1) ஒரு பணிகாரத்தின் நாலிலொரு பங்கையா, அல்லது அரைப்பங்கிலரைப்பங்கையா நீர் பெற விரும்புவீர்? (2) நீர் இரு பது சதம் பணம் வைத்திருந்தால் அதைக்கொண்டு என்ன செய்வீர்? (3) நீரேன் உமது பெற்றூரை நேசிக்கிறீர்? என்பனபோன்ற வினக்கள் தகுந்தளவு மதியை அளக்கக்கூடுமென அபிப்பிராயப்பட் டனர். கண்ணின்பார்வை, தனியே, மதிநுட்பத்தை வெளிக்காட்டக் கூடும். ஒரு பிள்ளையின் கண்கள், கூர்மையுள்ளனவாயும் பிரதிவிம் பிக்கக்கூடியனவாயும் அல்லது விநோதப்பார்வை யுடையனவாயுமிருந் தால், அப்பிள்ளை மதிநுட்பத்தை யுடையதாயிருக்கும். அவைகள் கனத்தனவாயும் வெளிப்படுத்தும் தன்மையற்றனவாயுமிருந்தால், அப் பிள்ளை மதிநுட்பத்தில் குறைந்ததாயிருக்கும் என்றூ ரோராசிரியர். அப்போது பெனெற் என்பவர், கண்ணின் பார்வையை அல்லது விநோதப்பார்வையை ஒரு பிரமாணமாகக் கவனிக்கப் போகிறோமா? என்று கேட்டார். மதிநுட்பம் குறைந்தவர்களிலும், கவரும்தன்மை வாய்ந்தவர்களும் வசிகரமுள்ளவர்களு மனேகருண்டு. அப்படியான வர்களுடைய ஒரு புன்னகை, அவர்களில் புத்திநுட்பம் இருக்கிற தென்பதைக் காண்பிக்கக்கூடும். நகை, வசிகரமுள்ளதும் இரக்கமுள் ளதுமாயிருக்குமாயின் எவரையும் அணுப்பிவிடக்கூடும். மதிநுட்ப மென்பதியாது என்பதைப்பற்றி அநேக சந்தர்ப்பங்களில் ஆசிரியர்கள் திட்டமான அபிப்பிராயமற்றவர்களாகக் காணப்படுகிறூர்கள். அவர் கள், மனனம்செய்வதிலார்வம், வாசித்தலில் தகுதி அல்லது கணி தத்தில் நிபுணத்துவம் என வெவ்வேறு பான்மையினது "மதி" என அபிப்பிராயப்படுகின்றனர். ஆனல், சிலர் இவ்விதவபிப்பிராயங்கள்

பிசகானவை என்றறிந்தும், ஏனையோர் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களே சிறந்தவை என வெண்ணியுமுள்ளார். ஒரு நாள் பெனெற் என்னும் மனத்தத்துவசாஸ்திரி தனது பரிசோதனைச்சாலையில் மூன்று ஆசிரியரை முன்ஒருபோதும் காணுத சிலமாணவரின் மதிநுட்பத்தைப் பரீட்சிக்குமாறு கேட்டுக்கொண்டார். தான் குறிப்புகள் எடுப்பதாகப் பிரயத்தனப்பட்டார். இறுதியில், பெனெற்றின் குறிப்பின்படி வித்தியாசமான மனப்பான்மையுள்ள பிள்ளைகளுக்கு ஒரு குறித்த பரீட்சையை நடாத்தும்பொழுது, ஆசிரியர் ஏதாவதொரு திட்டமான விதியை அநுசரிக்கவில்லை. தாமறிந்தவற்றைப் பிள்ளைகட்குப் புகுத்துவதில் அதிகமானநேரம் வீணுகச் செலவழிந்தது. அவர்களின் பெறுபேறுகளிலிருந்து, அவர்களுக்கிடையில் எந்தவிதமான ஒற்றுமையும் காணப்படவில்லையெனத் தெரியவந்தது. அவர்களுடைய வினுக்கள் பொதுவாக "ஆம்" அல்லது "இல்லை" என்ற தனிச்சொற்களால் விடையளிக்கக்கூடியனவா யிருந்தன. இப்படியான சந்தர்ப்பங்களில் அநேகமாக நல்லதிருஷ்டத்தினுல் நூற்றுக்கைம்பது வீதமான விடைகள் சரிவரவுங்கூடும். சில வினுக்கள் பள்ளிக்கூட அறிவையே பரீட்சிக்க, மற்றையவை அந்தநேரத்திலே அப்பள்ளிக்கூடத்திற்கே உபயோகப்படக்கூடியனவாகக் காணப்படுகின்றன. ஆசிரியர், திறமைவாய்ந்த முறையை செம்மையற்ற தன்மையில் பிரயோகித்தாரென்பது வெள்ளிடை மலை. பெனெற் என்பவர் தம்மிடத்து முறைகளை அறியக் கருதி வருபவர்கள் ஏதோ பிரமாண்டமான முறைகளாகத்தானிருக்க வேண்டுமென் றெண்ணங்கொண்டு வருகிறுர்கள் என்றும், அவை சாதாரண முறைகளாயிருக்கக்கண்டு அதிருப்திப்பட்டும் செல்லாநின்றனரென்றும் சொல்லுகிறுர். அப்பரீட்சைகளைத் தாம் சாஸ்திர முறையில் செய்வதும், மற்றவர்கள் அல்லாத முறைகளில் செய்வதுமே வித்தியாசம் என்கிறுர். பெனெற்றுக்கு ஆசிரியர்மேல் பக்ஷபாதம் இல்லை; இங்கே கூறப்பட்ட ஆசிரியர்கள், அவரது சினேகிதர்கள். ஒரு ஆசிரியரின் மதிநுட்ப மதிப்பு, பெற்றுரினதிலும் நம்பத்தக்கது; ஏனெனில், பெற்றுர் பெற்றுர்க்குரிய அன்பினுல் தாட்சண்யமின்றி மதிக்கமாட்டார்கள்.

## பேனெற் சைமன் முறையின் வரலாறு

மூன்று வயசுடைய ஒரு பிள்ளையிலிருந்து ஒரு யௌவனனீருக பரீட்சிக்கக்கூடிய முறைகளை பெனெற் என்பவர் தயாரித்துள்ளார். ஒருவகையான பரீட்சை, மதிநுட்பத்தை வெளிப்படையாகக் காட்டாதென்பதை நன்குணர்ந்துள்ளார். ஆகவே, அவர் பலவிதமான பரீட்

சைகளை ஆக்கினர்; அவற்றுட் சில ஞாபகப்படுத்தும் தன்மையையும், சில நியாயிக்குஞ் சக்தியையும், வேறு சில ஒப்பிடுஞ் சக்தியையும் வெளிப்படையாகக் காட்டக்கூடியன. பரீட்சைகளின் பிரமாணத்தைத் திட்டப்படுத்துவதற்கு அவற்றை அவர் பிரிவு பிரிவாக வகுத்தார். மூன்று வயசு தொடக்கம் பதினைந்து வயசு வரைக்குமுள்ள இருநூறு சராசரி சக்தியுள்ள பிள்ளைகளுக்கு அவ்வினுக்களைக் கொடுத்தார். உதாரணமாக, ஒரு குறிக்கப்பட்ட பரீட்சைப்பகுதியில் ஐந்துவயசுள்ளவர்களில் அறுபத்தைந்து தொடக்கம் எழுபத்தைந்து விதம் ஈறுகவுள்ளார் சித்தி அடைந்தால், அப்பகுதியை ஐந்துவயசுப் பிள்ளைக்குரிய பரீட்சை என்று முடிவுசெய்துவிட்டார். அவ்வாறே மற்றும் வயசுப் பிள்ளைகளுக்குரியவற்றையுஞ் சீர்செய்தார்.

### வயசு III.

1. மூக்கை, கண்களை, வாயை சுட்டிக்காட்டுதல்.
2. இரண்டிலக்கங்களைத் திரும்பச் சொல்லுதல்.
3. ஒரு படத்திலுள்ள பொருட்களின் பெயரைச் சொல்லுதல்.
4. குடும்பப் பெயரைச் சொல்லுதல்.
5. ஆறசைகளுள்ள ஓர் வசனத்தைத் திருப்பிச் சொல்லுதல்.

### வயசு IV.

1. தனது பாலைச் சொல்லுதல்.
2. திறப்பு, கத்தி, பைசா முதலிய பெயர்கள் சொல்லுதல்.
3. மூன்றிலக்கங்களைத் திரும்பச் சொல்லுதல்.
4. இரண்டு வரிகளை ஒப்பிடுதல்.

### வயசு V.

1. இரண்டு நிறைப்படிகளை ஒப்பிடுதல்.
2. ஒரு சதுரத்தைப் பார்த்தெழுதுதல்.
3. பத்தசைகளுள்ள ஒரு வசனத்தைத் திரும்பச் சொல்லுதல்.
4. நாலு பைசாக்களை எண்ணுதல்.
5. இரு துண்டுகளாக்கிய ஓர் நீள் சதுரத்தை ஒன்றாகப் பொருத்துதல்.

### வயசு VI.

1. காலையையும் மாலையையும் பிரித்துணருதல்.
2. வழக்கிலுள்ள அறிந்த சொற்களுக்கு வரைவிலக்கணம் கூறுதல்.
3. ஒரு வைரக்கல்லைப் பார்த்தெழுதுதல்.

4. பதின்மூன்று பைசாக்களை எண்ணுதல்.
5. படங்களி லழகுள்ள அழகற்ற முகங்களைப் பிரித்துணருதல்.

## வயசு VII.

1. வலக்கையையும் இடக்காதையும் காண்பித்தல்.
2. ஒரு படத்தின் வரலாற்றைக் கூறுதல்.
3. ஏககாலத்தில் மூன்று கட்டளைகளை யிடுதல்.
4. மூன்று அரைரூபாவும் மூன்று கால்ரூபாவுமாய் ஆறு நாணயங்களின் விலைகாணல்.
5. நாலு நிறங்களின் பெயர்களைச் சொல்லுதல்.

## வயசு VIII.

1. ஞாபகத்திலிருந்து இரண்டு பொருட்களை ஒப்பிடுதல்.
2. 20-ல் இருந்து 0 வரை எண்ணுதல்.
3. படங்களில் விடப்பட்டவைகளைக் கவனித்தல்.
4. நாளும் திகதியும் சொல்லுதல்.
5. இலக்கங்களைத் திரும்பச் சொல்லுதல்.

## வயசு IX.

1. இரண்டு அரைரூபாக்களை மாற்றிக்கொடுத்தல்.
2. அறிந்த சொற்களுக்கு நல்லமுறையில் வரைவிலக்கணம்சொல்லுதல்.
3. எல்லாக் காசுகளினதும் விலை சொல்லுதல்.
4. வருஷத்திலுள்ள மாசங்களின் பெயர் சொல்லுதல்.
5. அறியும் திறன் வேண்டிநிற்கும் இலகுவான வினுக்களுக்கு விடை பகருதல்.

## வயசு X.

1. நிறைக்குத் தக ஐந்து குற்றிகளை அடுக்குதல்.
2. ஞாபகத்திலிருந்து வரைந்த படங்களைப் பார்த்து வரைதல்.
3. பிழையான வாக்குமூலங்களைக் கண்டித்தல்.
4. அறியும் திறன் வேண்டிநிற்கும் கடினமான வினுக்களுக்கு விடை பகருதல்.
5. இரண்டுக்கு மேற்படாத வசனங்களில் மூன்று கொடுக்கப்பட்ட சொற்களைப் பிரயோகித்தல்.

## வயசு XII.

1. கவர்ச்சிக் குறிப்புகளில் எடுபடாமை.
2. மூன்று கொடுக்கப்பட்ட சொற்களை உபயோகித்து வசனமுண்டாக்குதல்.
3. மூன்று நிமிஷங்களில் அறுபது சொற்கள் சொல்லுதல்.
4. சில பண்புச் சொற்களுக்குச் சொல்லிலக்கணம் கூறுதல்.
5. ஒழுங்கீனமாக வகுக்கப்பட்ட ஒரு வசனத்தின் பொருளைக் கண்டு பிடித்தல்.

## வயசு XVI.

1. ஏழு இலக்கங்களைத் திரும்பச் சொல்லுதல்.
2. ஒரு கொடுக்கப்பட்ட சொல்லுக்கு மூன்று சந்தங்களைக் கண்டு பிடித்தல்.
3. இருபத்தாறு அசைகளுள்ள ஒரு வசனத்தைத் திரும்பச் சொல்லல்.
4. படங்களைப் பார்த்துக் கதை சொல்லல்.
5. கொடுக்கப்பட்ட உண்மைகளை வியாக்கியானம் செய்தல்.

## யௌவனர்

1. கடதாசி வெட்டும் பரீட்சையைக் கண்டுபிடித்தல்.
2. மனத்தில், ஒரு முக்கோணத்தை மாறிமாறி வகுத்தல்.
3. பண்புச் சொற் சோடுகளுள் வித்தியாசங்களைச் சொல்லல்.
4. அக்கிராசனருக்கும் அரசனுக்குமிடையிலுள்ள மூன்று பேதங்களை எடுத்துக்காட்டுதல்.
5. வாசிக்கக் கேட்டுக்கொண்டிருந்த பகுதியில், முக்கியமானவற்றைச் சொல்லுதல்.

X வயசுப் பிள்ளைகளுக்கெனவுள்ள பரீட்சையே XI வயசுப் பிள்ளைகளுக்கும் தகுந்ததாகும். XII வயசுப் பிள்ளைகளுக்குரியதே, XIII, XIV வயசுப் பிள்ளைகளுக்குமுரியதாகும். மேலே காட்டப்பட்டபடி பரீட்சைகளைச் சொல்வதிலிருந்து ஒருவிதமான கருத்தும் புரியாது. பரீட்சைகளை நுட்பமானமுறையில் கையாளவேண்டுமாயின் ஒவ்வொரு பரீட்சையினதும் நோக்கத்தை நன்குணருவதோடு, அவற்றை நன்கு கையாளும் முறையையும், விடைகளை மனத்தத்துவ முறைப்படி வியாக்கியானம் செய்யும் முறையையு மறிந்திருத்தல்வேண்டும். ஒரு பரீட்சிக்கப்பட்ட பிள்ளையின் வயசு ஒன்பதெனவைத்துக்கொள்

வேம்; எட்டுவயசுடைய பிள்ளையின் மதி சாதாரணமாகப் போகு மளவிற்கு முந்தியதனுடைய மதி நுட்பமும்போனால், அப்பிள்ளையின் மானசிக அல்லது மனதுக்குரிய வயசு எட்டெனலாம். அவ்வாறே, மதி நுட்பத்தில் குறைந்த ஒன்பது வயசுப் பிள்ளையின் மானசிக வயசு நாலாகவுமிருக்கலாம், அல்லது ஒன்பது வயசுள்ள ஓர் கூர்ந்த விவேகி யின் மானசிக வயசு பதினொன் றல்லது பன்னிரண்டாக விருக்கலாம்.

## பரீட்சைகளை எவ்வித முபயோகிக்கவேண்டுமென்பது

விரிக்கிற் பெருகுமென வஞ்சி அதி பிரதானமானவற்றுள் சில வற்றை மாத்திரமே இங்கெடுத்து விளக்குவாம்.

### வயசு III 1.

பிள்ளையைக் கவனிக்கச்செய்து சொல்லுவதாவது, "உம் மூக் கைக் காண்பியும்." "உமது விரலை மூக்கின்மேல் வையும்." அவ்வாறே கண்களும் வாயும்; இரண்டு மூன்று தடவை திரும்பத் திரும்பப் போதித்தபின்பும் விடை கிடையாவிடின், பிள்ளையின் தாடையை அல்லது காதைச் சுட்டிக்காட்டி இதுதானு உமது மூக்கு என்று வினவவேண்டும்; விடைபகர மறுத்தால் பிள்ளையை வருத்தாதுவிடுதல் நலம். சொற்பநேரத்தின்பின் ஆரம்பிக்கலாம். சாதாரண வழிமுறை களால் விடை பெற்றுக்கொள்ள இயலாத ஒரு அச்சம்மிகுந்த பெண் பிள்ளையிடத்தில், ஒரு பாவையைக் காண்பித்தபொழுது அப்பிள்ளை பிரியத்துடன் அதன் மூக்கு, வாய், கண்கள் முதலியவற்றைச் சுட்டிக் காட்டியது.

முடிவு:— மூன்று விடைகளில் இரண்டாவது சரியாயிருத்தல் வேண்டும். பிள்ளை தொட்டுக்காட்டுவதற்குப் பதிலாக கண்ணைச் சிமிட்டியாவது வாயைத் திறந்தாவது விடைகொடுத்தா லதுவு மேற் கக்கூடியதே.

### III 2.

ஆரம்பிக்கும்முறை:— கீழ்வரு மிலக்கங்களை உபயோகிக்கலாம். கவனி! 4—1, என்று சொல்லு, இப்போது சொல்லவேண்டியது 6—4; இப்போது 3—2. சுத்தமான தொனியில், இலக்கத்தை செக் கனுக்கு ஒன்றிலும்பார்க்கச் சிறிது கூடியகெதியில் உச்சரிக்கவேண்டும்.

முடிவு:— கொடுக்கப்பட்ட மூன்று தொடர்களில் ஒன்றையாவது ஒருமுறை சொல்லியபின் சொல்லிவிட்டால், பிள்ளை சித்தியெய்திய தெனலாம். சரியான இலக்கங்கள் மாத்திரமல்ல, முறையும் சரியாக இருத்தல்வேண்டும்.

## VII 1.

பிள்ளைக்குச் சொல்லவேண்டியது, "உமது வலக்கையைக் காட்டும்." இதன் மாறுத்தரம் பெற்றானவுடன் சொல்லவேண்டியது, "உமது இடக்காதைக் காட்டும்." இடம் என்ற பதத்தையும் காதென்ற பதத்தையும் சம பெலமாக உச்சரித்தல் வேண்டும். அவ்விதமே வலமும் கையும். ஒருபிழை ஏற்பட்டால், பரீட்சையை முதலிலிருந்து இடக்கையுடனும் வலக்காதுடனும் ஆரம்பிக்கவேண்டும். உவப்புக் குறிப் பார்வையாவது, உவப்பின்மைக் குறிப் பார்வையாவது துணைசெய்யாத விதமாயிருத்தல்வேண்டும்.

முடிவு :- இரண்டு வினாக்களுக்கும் சரியான விடை பகரப்பட்டால், பிள்ளை சித்தியடைந்ததெனலாம். ஆகையால் பிரமாணம் இரண்டுக்கு இரண்டு என்றபடி.

## IX 4.

பிள்ளையை வருடத்திலுள்ள எல்லா மாசங்களினதும் பெயர்களைச் சொல்லும்படி கேட்கவேண்டும். ஒரு மாசத்தின் பெயரைச் சொல்லி ஆரம்பித்தல் பிசகு. மாசங்களின் பெயர் சொல்லப்படும்பொழுது உவப்புக் குறிப் பார்வையாவது உவப்பின்மைக் குறிப் பார்வையாவது நிகழக்கூடாது. சித்திரைக்கு முன்வரும் மாசம் எது? ஆடிக்கு முன் உள்ள மாசம் எது? கார்த்திகைக்கு முன் உள்ள மாசமெது? என்று கேட்கவேண்டும்.

முடிவு :- பதினைந் தல்லது இருபது செக்கனுள் ஒரு பிழைக்கு மேற்படாமல் மாசங்களின் பெயர்கள் சொல்லி, மூன்று வினாக்களுள் இரண்டுக்காவது சரியான விடையுங்கொடுத்தால் பிள்ளை சித்தியடைந்ததெனலாம்.

## X 4.

கீழ்வரும் வினாக்களை வினவவேண்டும்:

1. உமது வீட்டில் நெருப்புப்பற்றிக்கொண்டால் என்னசெய்வீர்?
2. பள்ளிக்கூடத்திற்குப் புறப்படும்போது மழை வந்தால் என்ன செய்வீர்?
3. நீர் ஓரிடத்திற்குப் போவதற்காகப் புகைபிரத ஸ்தானத்தை அடையும் அந்த நேரத்திலே புகைரதம் புறப்பட்டுவிட்டால் என்ன செய்வீர்?

விடைகிட்டாதாயினும், பிள்ளை மலாரடிப்பட்டுவிட்டாலும் கேள்விகளைத் திரும்பவும் கேட்கலாம். வினாவின்நிலை மாறுதல் கூடாது.

முடிவு :- மூன்றில் இரண்டுக்குச் சரியானவிடை கிட்டவேண்டும்.

முதலாம் வினவிற்குச் சரியானவிடைகள் :- துணைபுரியும் பொருட்டுக் கூவுவேன். தண்ணீர் ஊற்றுவேன்.

பிழையான விடைகள் :- சாப்பாட்டுக் கடைக்குப் போவேன். வேறொரு வீடுகட்டுவேன். சிநேகருடனிருப்பேன்.

இரண்டாம் வினவுக்குச் சரியான விடைகள் :- குடையை எடுப்பேன். மேலங்கி தரிப்பேன். தகப்பனரை என்னைக் கூட்டிச்செல்லும்படி சொல்வேன்.

பிழையான விடைகள் :- வீட்டில் நின்றுவிடுவேன். வானவில்லைக் காண்பேன்.

மூன்றும் வினவுக்குச் சரியான விடைகள் :- அடுத்ததற்குக் காத்திருப்பேன். அடுத்த வண்டியில் பிரயாணஞ்செய்வேன்.

பிழையான விடைகள் :- அது திரும்ப வரும்வரை காத்திருப்பேன். நடந்துபோவேன். பைத்தியம் வந்துவிடும்.

மேற்காட்டிய பரீட்சைகளைப் பிரயோகிப்பதில், அனுபோகம் அதிகமாக வேண்டப்படுவதால் எல்லோராலு மிலகுவில் கையாள முடியாது. அளவுக்கு மிஞ்சிய ஒருசொல்லு, துப்பாக நின்று முழுப் பரீட்சையையும் கீழ் மேலாக்கி விடுமென்பது சாதாரண விவேகிக்கும் நன்கு புலப்படும். இப்பரீட்சை முறைகள் எல்லாம் பிள்ளைகளை ஒவ்வொருவராகப் பரீட்சிப்பதற்கே பயன்படும். ஒருகூட்டத்தினருக்கு ஒரேமுறையில் கொடுக்கக்கூடிய பரீட்சைமுறைகள் ஸ்ரான்போட், ரோமன் முதலிய கல்விமான்களால் இயற்றப்பட்டுள்ளன. இங்கே குறிக்கப்பட்டுள்ள பெனெற் முறைகளால் ஒரு பிள்ளையின் மானசிக வயசை மட்டிடலாம்.

III, V, VI, VII, VIII, IX, X வயசுகளுக்குரிய பரீட்சைத் தொகுதிகள் ஒவ்வொன்றிலும் ஐவைந்து வினக்களுளவாகையால், ஒவ்வொரு வினவுக்கும் சராசரி $12 \div 5$ அல்லது 2·4 மாசங்கள் வீதம் பகிரலாம். IV வயசுக்குரிய பரீட்சைத் தொகுதியில் நாலு வினக்கள் மாத்திர முள்ளனவாகையால் ஒரு வினவுக்கு $12 \div 4$ அல்லது மூன்று மாசங்கள்வீதம் பகிரலாம். XI வயசுக்குரியது விடப்பட்டு XII வயசுக்குரிய பரீட்சையில் ஐந்து வினக்கள் மாத்திரம் இருக்கின்றனவாகையால், ஒவ்வொரு வினவுக்கும் $24 \div 5$ அல்லது 4·8 மாசங்கள்

விதம் பகிரலாம். XIII, XIV வயசுக்குரியன விடப்பட்டு XV வயசுக்குரிய பரீட்சையில் ஐந்து விஞக்கள் மாத்திர மிருக்கின்றன வாகையால் ஒவ்வொரு விஞவுக்கும் 36 ÷ 5 அல்லது 7·2 மாசங்கள் விதம் பகிரலாம்.

## ஒரு பிள்ளையின் மானசிக வயசை மட்டிடும் விதம்

ஒரு பிள்ளையின் வயசைக் கணித்துக்கொண்டு, அவ்வயசுக்குரிய பரீட்சையைக் கொடுக்கவேண்டும். அதில் அப்பிள்ளை சித்தியடையத் தவறினல், அதற்குக் கீழ்ப்பட்ட வயசுக்குரிய பரீட்சையைக் கொடுத்தல்வேண்டும். இவ்வாருக, அப்பிள்ளை எந்த வயசுக்குரிய பரீட்சையில் முற்ருகச் சித்தி அடைகிறதெனக் கண்டுகொண்டு, அத்தனை வருடமும் மேல் மேல் வயசுப் பரீட்சைகளில் ஒவ்வொன்றுக்கும் மேற் கூறியபடி அத்தனை மாசங்களும் கணித்தல்வேண்டும்.

உதாரணம்:

பத்துவயசுள்ள ஒருபிள்ளை VI-ம் வயசுக்கேற்ற பரீட்சையில், எல்லா விஞக்களுக்கும் சரியான விடைகொடுத்தான் என வைத்துக் கொள்வேம். VII வயசுக்குரிய பரீட்சையிலுள்ள ஐந்து விஞக்களில் நான்கிற்கு விடையளித்தான். VIII வயசுக்குரிய பரீட்சையில் மூன் றுக்கு விடைபகர்ந்தான். IX வயசுக்குரிய பரீட்சையில் இரண்டுக்கு விடைகொடுத்தான். X வயசுக்குரிய பரீட்சையில் ஒன்றுக்கு விடை யளித்தான்.

எனவே,

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| VI | வயசுக்குரிய | பரீட்சையில் | அவனது | நயம் | 6 வரு. | 0 மாசம் |
| VII | ,, | ,, | ,, | ,, | ,, | 9·6 மா. |
| VIII | ,, | ,, | ,, | ,, | ,, | 7·2 ,, |
| IX | ,, | ,, | ,, | ,, | ,, | 4·8 ,, |
| X | ,, | ,, | ,, | ,, | ,, | 2·4 ,, |

ஆகையால் முழுவதுமாக நயம், 8 வரு.

ஆகையாலவனுடைய மானசிக வயசு 8 வரு.

$$\text{அகவே அவனது மதிநுட்பவிதம்} = \frac{\text{மானசிக வயசு} \times 100}{\text{ஜீவியத்தில் சென்ற வயசு}}$$

$$= \frac{8 \times 100}{10}$$

$$= 80\%$$

ஒருவனுடைய மதிநுட்ப% 140க்குமேற்படின் அபூர்வ விவேகி என்றும்

| | | | | |
|---|---|---|---|---|
| ,, | ,, | 120—140வரையாயின் | அதியுந்நதவிவேகி | ,, |
| ,, | ,, | 110—120 ,, | உந்நத ,, | ,, |
| ,, | ,, | 90—110 ,, | சராசரி ,, | ,, |
| ,, | ,, | 80—90 ,, | உறுதியற்றமனநிலையுடையவன் என்றும் | |
| ,, | ,, | 70—80 ,, | நிறைவின்மையின் வரம்பிலுள்ளவன் என்றும் | |
| ,, | ,, | 25—70 ,, | மனோபலமற்றவன் என்றும் | |
| ,, | ,, | கீழாயின் | பேதை அல்லது சிதடன் என்றும் | |

அவனைக் குறிப்பிடுதல் தகுதியென்று கொள்வர்.

---

"கன்னலெனுஞ் சிறுகுருவி ககனமழைக் காற்றுமல்
மின்னலெனும் புழுவெடுத்து விளக்கேற்றுங் கார்காலம்
மன்னவனுந் தென்மதுரை மாவலிவா ணனைப்பிரிந்திங்
கென்னபிழைப் பென்னவிருப் பென்னநகைப் பின்னமுமே."

—தனிப்பாடல்.

"உள்ள திருக்கை காணீரே யுறங்கா திருக்கை காணீரே
ஓசைக் கடலைப் பொருமலையே யொழியேன் விரகப் பொருமலையே
கள்ள ருதாங் குவளைக்ளே கழலும் கரந்தாங் குவளைகளே
கரையிற் படராத் துப்பீரே கலந்த துடலத் துப்பீரே
அள்ள லளையுங் களிக்கரையே யழைப்பார் மாதர்க ளிக்கரையே
ஆறு வகுப்புக் காற்றேனே யாழிபு டைப்புக் காற்றேனே
வெள்ள மூரும் பானத்தே விரும்பா திருந்தேன் பானத்தே
வெங்க டேசு டெட்டனையே மேவத் தடுக்கு மெட்டனையே."

—சமுத்திரவிலாசம்.

"ஞாயிறு போய்விழத் திங்கள்வந் தெய்திட நண்ணியசெவ்
வாயனல் வீசப் புதனம்பு தூவநல் வியாழன்வர
வேயுறு வெள்ளி வளைசோர நானுன்னை மேவுதற்குத்
தாய்சனி யாயின ளேரகு நாத தளசிங்கமே."

—தளசிங்கமாலை.

# சித்திரக்கலையின் சிறப்பு

(பொ. செல்வத்துரை)

புலவன் புலமையுடையவன். அவன் கண்கள், "எக்ஸ்" ஒளிக் கிரணங்கள் (X Ray) போன்று உலகின் இயற்கை செயற்கைப் பொருள்களை ஊடுருவிச்சென்று சாதாரண மக்களால் அறிதற்கரிய நுண்ணிய உறுப்புக்களையும் காண்கின்றன. என்னே! அரசியொருத் தியின் முகாரவிந்தத்தைமாத்திரம் நோக்கிய சித்திரப் புலவனொருவன் அவ்வரசியின் உருவத்தைப் படமாயெழுதிய ஞான்று அவன் பார்க் காத உறுப்பிலுள்ள மச்சமும் அப்படத்திற் காணப்பட்டது. அதனை நோக்கி அரசன் சந்தேகித்தகாலை, அவைப்புலவர், "செந்நாப்புலவ வனுக்கு நாவுணரும், செங்கைப் புலவனுக்குக் கையுணரும்", என்று கூறி அரசனின் சந்தேகத்தை நீக்கினனன்றோ!

புலவன் உள்ளம், கட்கருவியினுல் உலகத்தைத் தத்ரூபமாகப் படம்பிடிக்கின்றது. அப்படம் அப்புலவனின் செந்நாவினுலோ, செங் கையினுலோ வெளிவருகின்றது. ஆகவே புலவரில் இருவகையாருளர். ஒருவர் செந்நாப்புலவர்; மற்றவர் செங்கைப்புலவர். இவர்களிருவரும் ஒரு தாயின் புதல்வர்—இயற்கையன்னையின் புத்திரர். ஆனுல் மூத்தவர் யார்? இளையவர் யார்? இதனைக் கண்டறிய யாரால் முடியும்! நாம் இவர்களிருவரையும் ஒரேகாலத்துதித்த இரட்டைப் பிள்ளைகளென்றே சொல்வோம். இவர்கள் எண்ணம் ஒரேதன்மைத்து. இவர்கள் போக் கும் ஒரேதன்மைத்தே. வெளிச்செயல்மாத்திரம் வேறுபாடுடைத்து. செந்நாப்புலவன் தன் மன எண்ணத்தைச் செய்யுளாக்குகின்றுன். செங்கைப்புலவன் தன் உள்ளத்தெழும் உணர்வைக் கையாற் சித்திரிக் கின்றுன். செந்நாப்புலவன் செய்யுளுக்கும் செங்கைப்புலவன் சித்தி ரங்கட்கும் வேறுபாடு காண்பார் யாரே?

ஐம்பொறிகளுள் தலைசிறந்து விளங்கும் கட்பொறிக்கு விடய மாய பொருள்களைச் சித்திரித்துக் காட்டுதல் மாத்திரஞ் சித்திரமன்று. செந்நாப்புலவனின் கற்பனைகளும் செங்கைப்புலவனின் சித்திரத்திற் காணப்படும். புலவன் தன் கற்பனு சக்தியினுல் வீரம், அச்சம் முத லாய நவரசங்களைச் செய்யுளில் எப்படிக் காட்டுகின்றுனே, அவ்வாறே செங்கைப்புலவனும் தான் சித்திரித்த ஒவ்வோர் சித்திரத்திலும் நவரசங்களைக் காட்டுகின்றுன். இத்தகைய சித்திரக் கலையில் நமது

மூதாதைகளாகிய இந்தியர் காட்டிய திறமையை இன்று நாம் "அஜெந்தா", "சிகிரியா" போன்ற இடங்களிற் கண்டு பெருமித மடைகின்றோமன்றோ! கொழும்பு நூதனசாலையிலுள்ள சுந்தர மூர்த்தி சுவாமிகளின் விக்கிரகத்தின்கண் அமைந்திருக்கின்ற பரவச மாக்கும் இயல்பினைக்கண்டு பரவசமாகாதார் யாருளர்! அன்றியும் புத்தபிரானைப்போற் சமைத்த சிலா விக்கிரகங்களின் வதனங்களிற் பொழியும் கருணை வெள்ளத்தில் அமிழ்ந்தாதார் யாரே. இவற்றால் சூக்குமமாகிய உணர்ச்சிகளையும் தூலமாகப் படம்பிடித்துக் காட்டும் சிறப்பியல்பு சித்திரக் கலையிற் சிறந்து விளங்குதல் நோக்கற்பாலது.

சித்திரம் அழகுடையது என்ற பொருளைப் பெறும். அழகில் ஈடுபடாதார் யாருளர்? எல்லோருக்கும் இவ்வழகுக் கலை—சித்திரக் கலைமேல் இடையறுக் காதலுண்டு. இக்காதலினால் பண்டைத்தமிழர் சிற்பக்கலையையும் சித்திரக்கலையையும் போற்றியாதரித்தனர். (சிற்பம் சித்திரத்தின் வேறாயதொன்றன்று) அதுகாரணமாகப் பண்டைத் தமிழ்நாடு சித்திரக் கலையிலும், சிற்பக்கலையிலும் சிறந்து விளங்கியது. கிராமங்கள்தோறும் தேவாலயங்களும், மடாலயங்களும் சிற்பசாஸ்திர முறைப்படி அமைக்கப்பட்டன. மேற்படி ஆலயங்களின் சிற்பத்தில் சித்திரம் புகுந்து சிறப்புச் செய்தது.

புவியில் முதற்கட்டோன்றிய பூர்வீக மனிதரிடத்தும் இச் சித்திர உணர்ச்சி மலிந்து காணப்பட்டது. அப் பூர்வீக மனிதர்கள் தம் மனக்கருத்துக்களைச் சித்திர மூலமே வெளியிட்டனர். அப்பொழுது அவர்களுக்குப் பாஷை சித்திரமே. நாளடைவில் தாம் வசித்த குகை களைச் சித்திரங்களால் அழகு செய்தனர். அக்குகைகளில் தாங்கள் வேட்டையாடிய மிருகங்களின் உருவங்களையும், சப்திக்கின்ற கடல் களிலே பிடித்த மற்சங்களின் உருவங்களையும், ஒளியைப் பிரகாசியா நின்ற சந்திர சூரியர்களின் உருவங்களையும் வரைந்தனர். எழுத்து முறை இத்தகைய சித்திரங்களிலிருந்தே தோன்றியது. எழுத்து நாம் வழங்கும் ஓர் கற்பனா சித்திரமே.

சாதாரணமக்களுக்கு இரண்டேயிரண்டு கண்களுள. சித்திரப் புலவனுக்கோ கையிலுள்ள பத்து நகக்கண்களும் சேர்ந்து ஆறிரு நேத்திரங்களாகின்றன. சித்திரமுங் கைப்பழக்கமாகலின் சித்திரப் புலவனின் கைகள் பயிற்சியடையவடைய அவன் கையிலுள்ள நேத் திரங்கள் பொருள்களைக் கூர்மையாக உணரவும், நுட்பமாகச் சித்தி ரித்தற்குத் துணைபுரியவும் ஏற்றனவாகின்றன. ஆகவே கைதேர்ந்த

சித்திரப் புலவனுக்கு அவனுடைய முகக்கண்களினும் நகக்கண்களே விசேஷமானவை. முகக்கண்களில்லாத சித்திரப் புலவன் அந்தகன் என்னும் பெயருக்குரியனன்று. என்னே! சிற்பக்கலை வல்லோனொருவன் குருடனுக்கப்பட்ட காலத்தும் 'சித்திரம் திகழ ஓர் சிலை சமைத்தானும்' என்பராகலின்.

சித்திரத்தின் சிறப்பை மேற்போந்தன கொண்டு மாத்திரம் மட்டிடுத லாகாது. சித்திரமின்றேல் உலகமில்லை. உலகமே சித்திரம். சித்திரமாகிய உலகத்தில் நாம் இருத்தலினாற்போலும் அரூபியான உலகநாதனுக்கும் ரூபங்கற்பித்துச் சித்திரத்திற் காட்டுகின்றோம். எம் மதங்களிலும் காணப்படுகின்ற விக்கிரக ஆராதனைக்கு அஸ்திபாரமாயுள்ளது சித்திரமன்றோ! சித்திரமின்றேல் நாம் கடவுளை ரூபியாகக் காண்ப தெங்ஙனம்? விக்கிரக ஆராதனை வேண்டப்பெறாத யோகிகளும் தம் மனத்தின்கண் சித்திரமாக்கியே தியானிக்கின்றனர் என்பது மறுக்கொணா உண்மையன்றோ!

ஆகவே நாம் பிறந்தது சித்திரத்தில்; வளர்ந்தது சித்திரமாக; படித்தது சித்திரம்; விரும்பியவெல்லாம் அழகிய சித்திரங்களே; எம் தியானத்திற்குரிய கடவுளும் சித்திரமே.

---

"விரிகாஞ்சித் தாதாடி யிருங்குயில் விளிப்பவும்
பிரிவஞ்சா தவர்தீமை மறைப்பென்மன் மறைப்பவுங்
கரிபொய்த்தான் கீழிருந்த மரம்போலக் கவின்வாடி
யெரிபொத்தி யென்னெஞ்சஞ் சுடுமாயி னெவன்செய்கோ;

பொறைதளர் கொம்பின்மேற் சிதரின மிறைகொள
நிறைதளரா தவர்தீமை மறைப்பென்மன் மறைப்பவு
முறைதளர்ந்த மன்னவன்கீழ்க் குடிபோலக் கலங்குபு
பொறைதளர்பு பனிவாருங் கண்ணாயி னெவன்செய்கோ;

தளையவிழ்பூஞ் சினைச்சுரும் பியாழ்போல விசைப்பவுங்
கொளைதளரா தவர்தீமை மறைப்பென்மன் மறைப்பவுங்
கிளையழிய வாழ்பவ னாக்கம்போற் புல்லென்று
வளையானா நெகிழ்போடுந் தோளாயி னெவன்செய்கோ."

பாலைக்கலி.


PLATE

# பாலர் பகுதி எண்பாடமும் உபகரணங்களும் அவ்வுபகரணங்களைப் படிப்படியாக நீக்கும் முறையும்

[ த. பசுபதி ]

பாடசாலையில் எப்பாடமும் உபகரணத்தின் உதவியுடனே நடைபெறுவது சிறந்த முறையாகும். போதிய உபகரணமிருப்பின் படிப்பிப்பது மிக இலகு. இவைகளை யுபயோகிப்பதில் ஆசிரியர் மிகவுங் கவனமாக இருத்தல் வேண்டும். உண்மையான பொருளைக் காட்டிப் படிப்பிக்க வியலுமிடத்து அப்பொருளையே காண்பித்தல் வேண்டுமென்றும், பிள்ளைகள் அதனாற் பெறற்கரும் பலனைப் பெறுவரென்றும் ரூசோ கூறுவர். பொருள்கள் கிடையாவிடத்து மாதிரியுருவங்கள் முதலியன உபயோகிக்கப்படலாம். உபகரணங்களை உபயோகிப்பதில் எண்ணிறந்த பலன்களுண்டு.

(a) படிப்பிக்கும் விஷயத்தைப் பிள்ளைகள் ஐயந்திரிபற விளங்கிக் கொள்ளுதற்கும்,

(b) விஷயத்தை வாழ்க்கையோடு தொடர்புபடுத்தி நல்ல விளக்க முண்டாக்குதற்கும்,

(c) புதிய விஷயங்களை மாணவர் தாமேகண்டு பிடிப்பதற்கும்,

(d) விஷயங்களை மனத்தில் நன்கு பதியச் செய்தற்கும்,

(e) மாணவரின் ஆர்வத்தை இலகுவில் ஈர்த்தற்கும் உபகரணங்கள் உபயோகிக்கப்படும்.

ஆரம்ப வகுப்புகளில் உபகரணங்கள் மிகவு மதிகமாக உபயோகிக்கப்படவேண்டும். எண் பாடத்தில் எவ்வெவ் வுபகரணங்கள் எப்படி உபயோகித்தல் வேண்டுமென்பதையே ஈண்டு ஆராய்வாம்.

ஆரம்ப வகுப்பில் எண்பாடம் படிப்பிக்கும்போது உபகரணங்கள் பல விகற்பமுடையனவா யிருக்கவேண்டும். பிள்ளைகளின் எண்களைப் பற்றிய கருத்தையும், தொடர்ச்சியையும் அவர்கட்குத் தெரிந்த பல பொருள்கள்மூலம் மிக விசாலமாக்கவேண்டும். இவ்வாறு பல பொருட்களை யுபயோகிப்பதால் பிள்ளைகள் எண்கள் எவற்றைக் குறிக்கின்றன

என்பதையும் எண்களின் கருத்தையும் (தற்குறிப்பையும்) பூரணமாக விளங்கக்கூடும். பிள்ளைகள் பூரண தேர்ச்சியடைவதற்கு மேசை, கதிரை, புத்தகம், பென்சில், விதை, பழம், சோகி முதலிய பொருள்கள் மூலமும், மணிகளைக் கோத்தல், படங்கள் கீறுதல், ஆட்டம், விளையாட்டு முதலிய வெவ்வேறான செயல்கள் மூலமும் கணித சம்பந்தமான உண்மைகளை அறியவேண்டும்.

### (1) விகற்பம் வேண்டியதற்கு நியாயங்கள்:-

முதலாவதாக ஒரேவகையான பொருட்களையே மாணவர் உபயோகிப்பாரே ஆனுல் மனச்சோர்வடைந்து பாடத்திலீடுபடார்.

இரண்டாவதாக எண்களைப்பற்றிய பூரண விளக்கமும் உண்டாவதில்லை. உதாரணமாக, 6 சோகியும் 4 சோகியும் 10 சோகி என்று, என்றுஞ் சோகியுடன் பழகிய பிள்ளை, 6 மாம்பழமும் 4 மாம்பழமும் எத்தனை மாம்பழம் என்ற கேள்விக்கு விடையிறுக்கத் தவறுகிறான். உபகரணங்கள் விகற்பமடைவதினுல் பூரண விளக்கம்பெற்று, உற்சாகப்பட்டுத் தேர்ச்சி பெறுகின்றான்.

### (2) நேரான புலனுணர்ச்சியின் அவசியம் :-

எண்களைப்பற்றிய கருத்துக்கள் பிள்ளையின் மனத்தில் நன்கு பதிந்து வேரூன்றவேண்டுமேயானுல் அவன், பொருட்களைப்பார்த்தும், தொட்டும், எடுத்துபயோகித்தும் எண்களின் கருத்தையுந் தொடர்ச்சியையு மறியவேண்டும். பிள்ளை தன்முன்னே பொருட்களின்றி எண்களின் கருத்துக்களையாதல், தொடர்ச்சியையாதல், மனத்தில் உருவகிக்க முடியாது. பொருட்களின்றிப் பிள்ளைக்கு எண்களின் கருத்தைப் புகுத்த முயற்சிப்பது வீண். ஆசிரியர் சொல்வதைப் பின்பற்றிக் கருத்தற்ற, விளங்காத சொற்களை மீட்டுஞ் சொல்வானேயன்றி எள்ளளவும் பயனடையமாட்டான்; உதாரணமாக ஐந்தும் நாலும் = 9 என்று ஆசிரியர் சொல்லிக்கொடுப்பின், "சொன்னதைச் சொல்லுமாம் கிளி" என்பதுபோலப் பிள்ளை சொல்லுவான். சொல்லும்போது அவனுடைய புலனுணர்ச்சிக்கும் வாய் சொல்வதற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. பாத்திரத்திலுள்ள அமிர்தத்தின் சுவையைப் பாத்திர மறியாததுபோலவும், எதிரொலிபோலவும் தன் வாய் சொல்லுவதின் கருத்தை அறியாதவனுய்ச் சொல்லுவான். இவ்விதம் திருப்பிச் சொல்லுவதால் (Repetition) அவன் எண்களின் கருத்தையாதல் தொடர்ச்சியையாதல் வாழ்க்கையில் உபயோகிக்கமுடியாதவனுகின்றான். ஆகவே எண்களின் கருத்தைப் போதிய வுபகரணத்துடன் புலனுணர்ச்சிக்கெட்டுமாறும் பதியும்படியுஞ் செய்தல் முறையாம்.

370·73
CAI AR



### (3) மானத சித்திர மமைத்தல் [மனத்திற் படம்போடல்]

உபகரணங்களையே நெடுங்கால முபயோகித்து வரின் கணித அறிவு வளர்ச்சி தடைபெறும். பிள்ளைகள் காலாந்தரத்தில் உபகரணங்களின்றிப் பொருட்களை மானத சித்திரமமைத்துக் கணிக்கும்படி தூண்டப்படல் வேண்டும். இவ்விதமமைத்த படங்கள், பொருட்கள் நேரிற் செய்யும் பலனளவு செய்யாவெனினும் பெரும்பாலுமவை, பொருட்கள் நேரிற் செய்வன போன்ற பலன்களை யளித்தல் கூடும். உதாரணமாக, கந்தன் 5 புத்தகமும் அவன் தம்பி 3 புத்தகமும் வைத்திருக்கிறார்கள். இருவரிடமு மெத்தனை என்ற வினவை யெழுப்பின் பிள்ளை புத்தக ரூபத்தை மனத்திலமைத்து இது கூட்டப்படல் வேண்டு மென்பதை யறிந்து இருவகைப் படங்களையு மொருங்கு சேர்க்கிறான். இங்ஙனம் படமமைக்கும் பழக்கத்தால் பிள்ளை எண்களின் கருத்தைக் காணாத பொருட்களிலும் பிரயோகித்து எண்களின் பூரணகருத்தையும் தொடர்ச்சியையும் வளர்க்கிறான். ஆகவே எண்களின் கருத்தையுந் தொடர்ச்சியையும் வளர்த்தற்கு இருமுறைகள் கைக்கொள்ளப்பட வேண்டும்.

(a) உபகரணங்களின் மூலம் எண்களின் கருத்தையும் தொடர்ச்சியையும் எண்மானத்தையு முதிக்கச்செய்தல்.

(b) பிள்ளைகள் கண்டவைகளும், வகுப்பறைகளில் இல்லாதவைகளும், காணாதவைகளுமான பொருட்களிலும் எண்களின் கருத்தைப் பிரயோகிக்கத் தூண்டுதல்.

### (4) விளையாட்டுக்கம் பொருளுக்குப் பதிலாக வேறு பொருள் வைத்து வழங்கல் :-

ஆசிரியர் தமது இரண்டாவது நோக்கத்தை நிறைவேற்றுவதற்குப் பிள்ளைகளின் விளையாட்டுக்கத்தைப் பயன்படுத்தலாம். பிள்ளைக்கு ஒரு பொருளை இன்னொரு பொருளாகப் பாவிப்பதில் அதிக விருப்பமுண்டு. உதாரணமாக, மரக்குற்றியைத் தன் பிள்ளையெனச் சொல்லிச் சீலை யுடுத்தலும், சோறூட்டலும் பாலரிடத்தியற்கையாய் நிகழ்வன. இதுவே விளையாட்டுக்கமாகும். கந்தன் 5 அப்பம் வைத்திருக்கிறான். வேலன் 3 அப்பம் வைத்திருக்கிறான். இருவரும் வைத்திருப்பது எத்தனை யென்ற வினவை வினவிவிட்டு ஆசிரியர் கந்தனிடத்து 5 குச்சுகளைக் கொடுத்து இவைதான் நீ வைத்திருக்கும் 5 அப்பங்களென்றும் வேலனிடமுமவ்வாறே 3 குச்சுகள் கொடுத்து இவை என்னவென்று கேட்டு அப்பமென்று பாவிக்கும்படி தூண்டியும் விடை

250043

ARCHIVES

காணச் செய்தல். [ஆசிரியர் பிள்ளைகளைத் தொழிற்படச் செய்வதற்கு நீ வைத்திருக்கும் அப்பங்களில் இரண்டைத்தா பசிக்கிறது உண்போம் என்று கேட்டால் மாணவரின் விளையாட்டூக்கம் அதிகம் தொழிற்படும்] இவ்வாறே குச்சுக்களை, குதிரை, கல், மிட்டாய் போன்ற பல பொருட்களாகப் பாவிக்கத் தூண்டலாம். இம்முறைபற்றி எக்காலத்துங் கிடைக்கக்கூடிய பொருட்களைக் கொண்டு கிடையாதவற்றில் எண் படிப்பித்தல் சாலும். ஒரு பொருளுக்காக இன்னொரு பொருளைப் பாவிப்பதால் சிறிது கூடிய எண்களையும் படிப்பித்தல் இலகுவாகும். உதாரணமாக 18 குதிரையும் 8 குதிரையும் எத்தனை குதிரைகளென்று கேட்டால் 10 குதிரையைப் பத்துக் குச்சி கொண்ட ஒரு கட்டாகவும் தனிக் குதிரைகளைத் தனிக்குச்சியாகவும் பாவித்து விடை காணலாம்.

## (5) பிள்ளையைச் சுதந்தரமாக ஆலோசிக்கச் செய்வதற்கேற்ற பல படிமுறைகள் :-

பிள்ளையினுடைய எண்களைப்பற்றிய பூரணமான கருத்துதிக்கு மட்டும் பொருட்கள் மூலங் கற்பித்தலும் பின் அவையின்றிப் பிள்ளை தன் மனத்தில் எண்களை அமைத்து உபயோகிக்கும் வன்மையைப் பெறுமட்டும் மிகவும் சாவதானமாக, ஆசிரியர் வழி நடாத்தலும் வேண்டும். சுதந்தரமாக ஆலோசிக்கச் செய்வதற்குரிய படிகளைச் சாதாரணமாகப் பின்வருமாறு வகுக்கலாம்.

I. பொருட்களை நேரே பார்வையிடல்; உபயோகித்தல்.

II. குறித்த பொருட்களுக்குப் பதிலாக வேறு பொருட்களைப் பாவித்தல்.

III. குறித்த பொருட்களையேனும் அவற்றிற்காகப் பாவிக்கப்படும் பொருட்களையேனும் கீறுதல், குறிப்பிடுதல்.

IV. குறித்த பொருட்களையேனும் அவற்றிற்குப் பதிலாகப் பாவிக்கப்படும் பொருட்களையேனும் மனத்திற் படம்போட்டுக் கொள்ளல்.

ஒருவகுப்பிலுள்ள மாணவர்களுட் சிலர் விஷயத்தைக் கூடிய கெதியிலும் சிலர் குறைவாகவும் கிரகித்தல்கூடும். மேற்கூறப்பட்ட ஒருபடியிலிருந்து மற்றப்படிக்குப் போகுங்காலம் வரையறுக்கப்பட்டதன்று. அதுவுமன்றிச் சில படிகள் அவசியமில்லாமலிருக்கலாம். சிலருக்கு இன்னுங் கூடுதலாகவேண்டியுமிருக்கலாம். இவையெல்லாம் சந்தர்ப்பத்தைப் பொறுத்தனவேயன்றி வரையறுத்துக் கூறற்பாலன

வல்ல. மற்று ஆசிரியர் மாணவர் தேர்ச்சியின் அளவையறிந்து அதற்கேற்பக் கூட்டம் கூட்டமாகப் பிரித்து அவர்களின் நிலைக்கேற்ப முறையை அமைத்துக் கோடல் சாலச் சிறந்தது. உதாரணமாகக் கந்தன் 12 மாம்பழம் வைத்திருக்கிறான். அதில் ஆறைத் தின்றுவிட்டான். பின் தகப்பனிடம் 4 மாம்பழம் வாங்குகிறான். அவனிடமிப்போதுள்ள தெத்தனை யென்ற வினாவிற்கு வகுப்பிலுள்ள பிள்ளைகள் மேற்காட்டப்பெற்ற முறைகளுள் ஏதாவதொன்றைப் பின்பற்றி மறுமொழிகாண்டல் கூடும். சிலர் சித்திரமூலம் பன்னிரண்டு பழங்களைக் கீறி அதில் உண்ணப்பட்ட பழங்களைக் கோட்டாற் குறுக்கிட்டுப் பின் 4 பழங்களைச் சேர்ப்பர். சிலர் குச்சிகளைக் கையினாற் பாவித்து மறுமொழிகாண்பர். சிலர் (அதிகம் குறைவான பிள்ளைகள்) உண்மையான பழக்கங்களின்றி விடைகாண அசக்தராவர். சாதுரியமான மாணவன் மனத்திற் படம்போட்டே விடையிறுத்தல் சாலும். ஒருபடியிலிருந்து மற்றப்படிக்குப் போவதற்கு ஆசிரியர் உதவி செய்தல் வேண்டும்.

## (6) கடைசிப்பருவம் :-

மேற் கூறப்பட்ட நாலுபடிகளிலிருந்து நீங்கின நிலையில் மாணவனை ஒன்பதும் எட்டும் எத்தனையென வினவின் உடனே 17 என்ற விடையைக் கொடுப்பான். இவ்வித நிலையையடைந்த பின்பும் பிள்ளை சிலசமயத்தில் மானத சித்திரமமைத்தலிற் சிறிது தவறவுங் கூடும். இதைப்பற்றியவாராய்ச்சி, உளநூல் வல்லுநருக்கே யுரித்தாகும். இது ஆசிரியரைப் பாதிக்காது. அவர் செய்யவேண்டிய தென்னை யெனின், பொருட்கள் மூலமும், இன்றியும் பிள்ளைகள் எண்களின் கருத்தையுந் தொடர்ச்சியையுமறிந்து இலகுவிலவற்றை உபயோகிக்கும் வன்மையைப் பெறுதற்குச் சந்தர்ப்பம் கொடுத்து வழிகாட்டுதலே.

## (7) குறியீடுகள் :-

குறியீடுகள் மாணவனை யோசிக்கச் செய்யும் சக்தி வாய்ந்தன. இது வகுப்பின் பிற்கூற்றிலேயே நடக்குமென்பதை ஆசிரியர் மறந்துவிடக்கூடாது. இலகுவான எண்ணினங்களைக் கற்குமிடத்து இவை உதவுவனவல்ல. உதாரணமாக, $5+3$; $\frac{5}{3}$ என்றால் பிள்ளை குச்சிகள் மூலமோ, மானத சித்திரமமைத்தோ மறுமொழி காணல் வேண்டும். ஆனால் அடுத்த பருவத்தில் (2-ம் வகுப்பில்) 347 உடன் 258ஐக் கூட்டு என்றால் இக்குறியீடுகள் உதவிபுரிவனவா யிருக்கின்றன.



---

# மனத்தை ஒருவழிப்படுத்துவது எப்படி?

(ச. நாகநாதர்)

மனத்தை ஒருவழிப்படுத்தலென்பது கவனத்தை, விரும்பியவொரு பொருளில் நாட்டுவதே. அதாவது எல்லாப் பொருட்களையும் புறத்தே விடுத்து ஒரு பொருளில் மாத்திரங் கவனத்தை நிலைநாட்டுவதே. ஒரு காட்சியை மனத்திலமைப்பதும் உணர்வதும் மனத்தை ஒருவழிப்படுத்துதலைப் பொறுத்திருக்கிறது. மேலும் ஒருவழிப்படுத்துதல் விருத்தியடைய வடைய மூளை பெலமடைந்து விரைவாகவும், புத்தியாகவும் யோசிக்கப் பழகும். விரும்பிய நேரம் உபயோகிக்கப்படக்கூடிய மறைநிலைச் சக்தி (reserve power) என்பதன் ஆட்சியை அழிக்கும். கெட்டித்தனமாகக் கவனத்தை ஒருவழிப்படுத்தக்கூடிய வொருவன், ஒரு பாடத்தை அது என்ன பாடமாயினுஞ் சரி குறித்த நேரத்திலும் அரைவாசி நேரத்திற் படித்து முடிப்பான், மனத்தை ஒருவழிப்படுத்தலென்பது அதைப் பலதிசையிலுஞ் செலுத்துவதன்று. ஒரேதிசையிற் செலுத்துவதே. அதைப் பயிலுவது மிகவும் நன்று. ஒருவழிப்படுத்தக்கூடிய சில அப்பியாசங்களை மேலே காண்க. அவற்றைச் செவ்வனே அனுஷ்டித்தால் ஒருவனது மனத்தை ஒருவழிப்படுத்துந் திறமை, யாவராலு மதிசயிக்கக்கூடிய நிலைபரத்திற்கு வருமென்பது திண்ணம்.

யாவராலுங் குளப்பப்படக்கூடாத ஓர் தனியறைக்குப் போ. ஒரு சிறு கடிகாரத்தை ஓடச்செய்து மேசையில்வைத்து அதுபோடுஞ் சத்தத்தைக் கவனி. (மனத்தை ஒருவழிப்படுத்தும்போது கவனத்தை ஒரு பொருளிற் செலுத்துவதேயன்றி ஏனைய பொருட்களின் எண்ணங்கள் அறவே ஒழிபடல் வேண்டுமென்பது மறக்கவொண்ணாது.) கடிகாரத்திலே மனத்தை ஒருவழிப்படுத்தும்போது அணித்தாயுள்ள வறையிலிருந்துஞ் சிறு சத்தம் வருமாயின் அதில் சிறிதுங் கவனத்தைச் செலுத்துவதில்லையென உடனே தீர்மானிக்கவேண்டும். மூளையைச் சூனியமாக்கி மணிக்கூட்டின் சத்தத்தைக் கவனி. அப்படிச் செய்யும்போது, வேறு எது நடப்பினுங் கவனியாதே. தொடக்கத்தில் இது பரம சங்கடமாய்த்தான் தோற்றும். அதனல் ஊக்கத்தைக்

கைவிடேல். தொடக்கத்தில் ஐந்து நிமிஷத்திற்குச் செய்து படிப்படியாக நாளுக்குநாட் கூட்டி இருபது நிமிஷம் வரை போகலாம். இருபது நிமிஷம் திருப்திகரமானதென்றே கூறலாம்.

இவ்வப்பியாசம் மிக இலகுவானதொன்றே. இதைப்போன்ற இலகுவான வேறு அப்பியாசஞ்செய்ய முடியுமானாற் செய். இவ்வப்பியாசம் அவ்வளவு இலகுவாயும் நினைத்த காரியத்திற்குப் போதியதாயுமிருப்பதனால், இது மனத்தை ஒருவழிப்படுத்தத் தூண்டாநிற்கும். இருபது நிமிஷத்திற்குப் பிறிதொன்றையுங் கவனியாது ஒருபொருளிலே கவனத்தைச் செலுத்தக்கூடுமாயின் பெரிய செயல்களைச் செய்து முடிக்கலாமென்பதை மறக்கவொண்ணாது. மனத்தை ஒருவழிப்படுத்தத் தொடங்கும்போது நினைத்த பொருளைவிட வேறு அதனோடு சம்பந்தப்பட்ட வேறு ஆயிரக்கணக்கான பொருள்களின் எண்ணங்கள் மனத்தி லுதியாநிற்கும். இதன்பயனாகச் சிலசமயத்திற் சோம்பலும், நித்திரையும் வரவுங்கூடும். இப்படியான சமயங்களில் இதற்கிடங் கொடுப்பதில்லையெனத் தீர்மானித்து ஒருவழிப்படுத்தத் தொடங்கு. இது கஷ்டமாயும், ஊக்கத்தைக் குன்றச்செய்வதாயுமிருந்தால் அன்னேர மதைவிடுத்துப் பிறிதோர் நேரஞ் செய்யத்தொடங்கு. ஒருபொழுது செய்ய முடியாவிட்டால் அதைக் கைவிடக்கூடாது. ஒருமுறை செய்து சித்தியடையாவிடினும் இரண்டாம்முறை செய்யத் தொடங்கும்போது அது எவ்வளவு இலகுவாயிருக்குமென்பதை யறிய உனக்கே அதிசயமாயிருக்கும். இச்சிறு அப்பியாசம் மனத்தை உனது ஆட்சிக்குள்ளே வைக்கும். அவதானிக்குஞ் சக்தியை வளர்க்கும். ஞாபக சக்தியைத் திருத்தும். ஞாபகத்தை வளர்க்குஞ் சக்தி முன்பு மூளையில் விழுத்தப்பட்ட, படங்களைப் பொறுத்தது. இது அச்சம்பவம் நடக்கும்போது செலுத்தபட்ட கவனத்தைப் பொறுத்திருக்கின்றது.

நீ ஞாபகத்தில் வைத்திருக்க விரும்பும் பொருளிற் போதிய கிளர்ச்சியில்லாவிடின் உனது ஞாபகசக்தி, அதைத் தன்மாட்டே வைத்துக்கொள்ளப் போதிய கிளர்ச்சி கொள்ளாதென்பதை ஒருபொழுதும் மறக்கவொண்ணாது. ஞாபகத்திலிருந்து திருப்பி யோசிக்கும்போது ஞாபகம் செவ்வனே தன்தொழிலைச் செய்யவேண்டுமாயிற் கிளர்ச்சி (Interest); ஒருமைப்பாடு ஆகியவிரண்டும் இன்றியமையாதன. ஒரு பொருளை ஞாபகத்தில் வைக்க விரும்பின் அப்பொருளிற் கூடிய கிளர்ச்சியை வைத்து, அது மனதிற்பதியும்வரையும் அதிலே மனத்தை ஒருவழிப்படுத்து. ஒரு பார்வையிலே (Glance) அறியக்கூடிய

விபரங்களை அறிய உனது மூளையைப் பழக்கு. ஓர் கடைக்குப் பக்கத்தாலே விரைவாகப் போ. அப்போது அதற்குள் எவ்வளவு, என்ன என்ன சாமான்கள் இருக்கின்றனவென்பதைச் சாளரவாயிலாகப் பார். பின்பு திரும்பிச் சாளரத்தினண்டை வந்து நின்று நீ எவ்வளவு பொருட்களை அவதானியாது விடுத்தாயென்பதைக் கவனி. இவ்வாறு நாள்தோறுஞ் செய்துகொண்டுவர மன வொருவழிப்பாடு வளர்ந்து கொண்டேவரும். ஒரு படத்தைப் பார்க்கும்போது முதற் பரும்படி பார். பின்பு படங்கீறிய விதம், கோடு, வர்ணம் முதலியவற்றை மிகவும் விபரமாய்ப் பார்த்துப் படம் என்ன விஷயத்தை விளக்குகிறதென் பதை அறி. கீறியோன் அப்படத்தை, ஏன் அப்படிக் கீறினனென் பதை அறி. அதன்பின்பு என்ன விஷயம் அவனை அப்படி வரையச் செய்ததோ அதை மூளையின்கண் அமை. இப்படம் மூளையிலிருந்து வெகுகாலத்துக்கு அகலாமலிருக்கும். ஏன்? படிக்கும்போது இருந்த மன ஒருவழிப்பாடே. இப்படி இன்னுஞ் சில அப்பியாசங்கள் மூலம் மனத்தை ஒருவழிப்படுத்தப் பயிலலாம். அதனல் வெகு பிரயோசன முண்டு.

---

"பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதா மென்செய்யு
நினையுங்கால் நும்மக ளுமக்குமாங் கனையளே ;

சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினு நீர்க்கவைதா மென்செய்யுந்
தேருங்கா னும்மக ளுமக்குமாங் கனையளே ;

ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதா மென்செய்யுஞ்
சூழுங்கா னும்மக ளுமக்குமாங் கனையளே ;"

—பாலைக்கலி.

"தீம்பாற் பசியி னிருந்த செவ்வாய்ச் சிறுபைங் கிளித
னோம்பு தாய்நீர் குடைய வொழிக்கும் வண்ண நாடிப்
பாம்பா லென்ன வெருவிப் பைம்பொற் றேடு கழலக்
காம்பேர் தோளி நடுங்கிக் கரைசேர் பவளைக் காண்மின்."

"மின்னைப் புடைய பைம்பூ ணீருள் வீழக் காணு
ளன்னப் பெடையே தொழுதே னன்னை கொடியள் கண்டா
யென்னை யடிமை வேண்டி னுடித் தாவென் றிறைஞ்சிப்
பொன்னங் கொம்பி னின்றுள் பொலிவின் வண்ணங் காண்மின்."

—சீவகசிந்தாமணி.

# இசைத்தமிழின் இன்றியமையாமை

(சு. சரவணமுத்து)

இசைத்தமிழ் என்பது இராகம் தாளம் பாட்டு ஆகிய மூன்றும் வேறுபடாமல் இசைந்திருத்தலையுடையது. இதை, கலைமாதின் ஒரு தனமென்பர் பெரியோர். மற்றது இயற்றமிழ் இலக்கியமாகும். ஆகவே கலைமாதை வணங்குபவராகிய நாம் இரு தமிழையும் கற்க வேண்டியவராகின்றோம். இவைகளை முறைப்படி கற்கப்புகின் மூன்றாவதாகிய நாடகத்தமிழும் இவற்றோடியையபுடைத்தாதல் தெளியப்படும். முத்தமிழும் ஒன்றற்கொன்று இன்றியமையாதவைகள். பண்டைக்காலத்தில் நம் தமிழ்ப் புலவர்களில் பெரும்பாலோர் முத்தமிழிலும் பயிற்சி உள்ளவராய் இருந்தார்கள். அவர்களுட் சிலரை "முத்தமிழ்க் கவியின் முறைபோகிய — உத்தமக் கவிகள்" என்று கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் பாராட்டியிருக்கின்றார். இக்காலத்திலே இப்படிப்பட்டவர்களைக் காணுதல் அரிதினுமரிது. இதற்குக் காரணம் நம் தமிழ்மொழி தன்னிலைமையிற் குன்றியதே. தமிழ்மொழி இந்நிலைமைக்கு வந்ததற்குப் பல நியாயங்கள் உண்டு. ஆயினும் இப்போது சிறிது காலமாக நம் நாட்டிலுள்ள சில பெரியார்களின் முயற்சியினால், தமிழ்மொழி சிறிது தலையெடுக்கத் தொடங்கியிருக்கின்றது. இயற்றமிழ்க் கல்வி ஒருவாறு தலையெடுக்கவே இசைத்தமிழ்க் கல்வியிலும் ஒருவிதமான கிளர்ச்சி உண்டாய் வருகின்றது. இது மிகவும் போற்றத்தக்கது.

இசை சப்தத்தினாலுண்டாவது. இச் சப்தம் நாதம் என்றும் ஒலி என்றும் இருவகைப்படும். நாதத்திலிருந்தே இசை பிறக்கின்றது. இந்நாதமானது சில தொடர்புள்ள சப்தங்களால் இசைவாகத் தொடர்புபட்டுக் கேட்போர் மனசிற்கு மகிழ்வூட்டும் தன்மையுடையது. இந்துக்களாகிய நாம் கடவுளை நாதப்பிரம்மம் என்று சொல்லுகின்றோம். ஆகவே இசைத்தமிழானது கடவுட்டன்மையுமுடையது. மானிட வாழ்க்கைக்கு அது மிகவும் இன்றியமையாதது. மனிதரில் அமைதியையும் சாந்தத்தையும் உண்டுபண்ணி மனசைக் கடவுளில் லயிக்கச் செய்யும் தன்மையுடையது. ஒருவன் தன்னுடைய இருதயத்திலுதிக்கும் எண்ணங்களையும் உணர்வையும் வெளியிடுவதற்கு மிகவும் மேலான கருவியாயுள்ளது இசைத்தமிழ். இதுவும் ஓர்

பாஷை என்றே சொல்லல் வேண்டும். ஓர் உண்மையான இசை வல்லுனன் மனுஷர் கனவிலும் நினைக்கமுடியாத மேலான பேற்றை அடையமுடியும். உணவானது எப்படி உடம்பைப் போஷிக்கின்றதோ அதுபோலவே சங்கீதமும் எங்களுடைய ஜீவாத்துமாவைப் போஷிக்கும் தன்மையுடையது. அது எங்களுக்குண்டாகும் துன்பத்தை நீக்கிச் சந்தோஷத்தை அளிக்கும் தன்மையுடையது.

இத்தன்மைகளையுடைய சங்கீதத்தைக் கொண்டு நாம் கடவுளை அடையலாமென்பது ஆன்ற அறிவுடையார் கருத்து. எங்கள் முழுமுதற் கடவுளாகிய பரமசிவனே இசையில் மிகவும் பிரீதியுள்ளவரென்று பலநூல்களில் இருந்து அறியக்கிடக்கின்றது. இராவணன் தனது அகங்காரத்தினால் கைலைமலையைப் பெயர்த்தபொழுது சிவபெருமானாற் றுன்புறுத்தப்பெற்றான். அப்பொழுது இராவணன் பரமசிவனுக்குக் கருணை உண்டாகும்படி ஓர் பண்ணைப் பாடி உய்ந்தானென்று "விராய மலர்ப்பூங் குழலி பங்கன் மகிழ்வினோங்கும் வெள்ளி மலைக் கீழ்க்கிடந்து விளரிபாடும் இராவணன்" என்பதனால் அறியக்கிடக்கின்றது. இசையைப்பாடிக் கடவுளுடைய திருவடிகளை அடைந்தவர் பலர் நம் தாய்நாடாகிய இந்தியாவில் வசித்திருக்கின்றார்கள். சங்கீதவுலகுக்கெல்லாம் திலகம்போன்று விளங்கிய தியாகராச சுவாமிகள் எப்படிச் ஸ்ரீ இராமருடைய பாதாரவிந்தங்களை அடைந்தாரென்பது அவருடைய சரித்திரத்திலிருந்து விளங்கும். ஓர்முறை அவர் வைத்துப் பூசித்த ஸ்ரீ இராமருடைய விக்கிரகத்தை அவரது தமையனார் அவர்மீதுகொண்ட கோபத்தினால் எடுத்து ஆற்றில் எறிந்துவிட்டார். சுவாமிகள் போய்ப்பார்த்த பொழுது விக்கிரகத்தைக் காணமையினால் மிகவும் துக்கங்கொண்டு உள்ளம் உருக ஓர் கீர்த்தனத்தைப் பாடினார். பாடிமுடிந்ததும் அவ்விக்கிரகம் அவ்விடத்திலிருப்பதைக் கண்டு ஆனந்தபரவசமானா ரென்பது சரித்திரம். இவ்வளவு மகிமையை உடைய இசைத்தமிழைக் கல்லாதவன் வாழ்வென்ன வாழ்வு! இவ்வுலகமே சப்த மயமாக விருக்கின்றது. ஓடமோட்டியானவன் தன் தொழிலின் சிரமம் தொலைவதற்காகப் பாடுகிறான். அன்னையானவள் குழந்தையின் அழுகையை அடக்குவதற்குத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுகின்றாள். அக்குழந்தை அதைக் கேட்டு அழுகைநீங்கி அயர்ந்துபோகின்றது. பால்மணம் மாறாப் பச்சிளங்குழவியும் இசையின்பத்தை நுகருமாயின் அதன் மகிமைதானென்னே! பகுத்தறிவற்ற பாம்பானது சங்கீதத்தைக் கேட்டவுடன் தன்படத்தை விரித்து ஆடுவதை நாம் கண்கூடாகக் கண்டிருக்கின்றோம். இன்னும் இப்பகுத்தறிவற்ற பிராணிகள் சங்கீதத்தினால்

மயங்கி அசைவற்று நின்ற கதைகளை நாம் கற்றறியலாம். உதயணன் எப்படித் தனது கோடபதியாழை வாசித்து யானைகளை அடக்கி அவைகளை இன்புறச் செய்தான் என்பது பெருங்கதையிலிருந்து அறியக்கூடும்.

இவ்வளவு மேன்மையுள்ள இசைத்தமிழை எங்கள் நாட்டுப் பிள்ளைகளுக்குச் சிறுபராயந் தொடங்கி யூட்டல் வேண்டும். சங்கீதம், சித்திரம், நடனம் போன்ற கலைகளை யூட்டுவதற்குச் சிறுபராயமே தகுந்த காலம். பாடசாலைகளில் இதுவரையும் அனேகமாக—லௌகிக சம்பந்தமான பாடங்களையே மிகவும் ஊக்கமாகப் படிப்பித்து வந்தார்கள். இவை உலகவாழ்க்கைக் கவசியம் வேண்டப்படினும் இவற்ரோடு ஆத்மலாப மடையக்கூடிய வழிகளையும் கற்பித்தல் வேண்டும். நாகரீகமான முன்னேற்றமடைய எங்களுக்கு அதிகமான ஓய்வு நேரம் கிடைக்கின்றது. இந்நேரத்தைப் பயன்தரும் வழிகளில் கழிக்குமாறு கல்வியை யூட்டல்வேண்டும். கல்விப் பயிற்சியானது பிள்ளைகளினுடைய இயற்கை வளர்ச்சியோடு சம்பந்தப்பட்டதாய் இருக்கவேண்டும். பிள்ளைகள், சங்கீதம், சித்திரம் நடனம் முதலிய கலைகளைப் படிப்பதில் மிகவும் ஊக்கமுள்ளவர்களாய் இருப்பார்கள். இவற்றுட் சிறந்தது சங்கீதம். பிள்ளைகளும் இதை அதிகம் விரும்புவார்கள். இசையினுல், பிள்ளைகளுடைய மனம் எளிதில் ஓர் நிலையை அடையும். ஞாபகசக்தி வளரும். மற்றவர்களிடத்து அன்பும் அனுதாபமும் உண்டாகும். எந்தநேரத்திலாவது மனத்தளர்ச்சி உண்டான பொழுது அது பெருந்துணைபுரியும். மற்றப்பாடங்களையும் களையாமற் கற்பதற்கு இதுவோர் தூண்டுகோலாக விருக்கும்.

இவற்றையறிந்த வித்தியாபகுதியார் இக்கலையை நம்நாட்டில் விருத்தியாக்கவேண்டுமென்றெண்ணி மாணவர்க்கென அமைத்துள்ள பாடத்தில் சங்கீதத்தையும் ஓர் பாடமாக அமைத்திருக்கின்றூர்கள். ஆனுல் அதனைக் கற்பித்தற்கேற்ற ஆசிரியர்களின்மையால் அது எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கற்பிக்கப்படவில்லை. எல்லாப்பள்ளிக்கூடங்களிலும் இசைத்தமிழைப்படிப்பித்தற்கேற்ற முயற்சி செய்தல்வேண்டும். ஆசிரிய கலாசாலைகளில் உள்ள ஆசிரிய மாணவருக்கு இசைத்தமிழிலும் பயிற்சி கொடுத்தல் வேண்டும். அவர்களுக்குரியகாலத்தில் அவர்கள் சிறிது சங்கீதத்தைக் கற்றுவிடுவார்கள். அதன்பின் விசேஷ வல்லபமுடையவரைத் தெரிந்து அண்ணுமலைச் சர்வகலாசாலை முதலிய விடங்களுக்கனுப்பி இசைத் தமிழ்க் கல்வியைப் பயிற்றுவித்து, அவர்களைக்கொண்டு இங்கே உள்ள பாடசாலைகளில் இக்கல்வியைப் பயிற்றுதற்கேற்ற ஒழுங்குகள் எமது வித்தியாபகுதியார் செய்யின் நம்நாடும்

இக்கலையிற் சிறந்து விளங்குமென்பது திண்ணம். தற்பொழுது கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையில் இசைத் தமிழுக்கென ஓர் ஆசிரியரை நியமித்தது இத்துறையில் வித்தியாபகுதியாரின் பெரு முயற்சியை விளக்குகின்றது. இது மிகவும் பாராட்டத்தக்க காரியமாகும். மற்று மாசிரிய கலாசாலைகளிலும் ஒவ்வோர் உபாத்தியாயரை நியமித்தல் கலாசாலை அதிகாரிகளது கடமையாகும். இங்கே தகுந்த உபாத்தியாயர்களில்லாவிடில் அண்ணாமலைச் சர்வகலாசாலை முதலியவிடங்களில் பயின்றவர்களை வருவித்துக் கலையை விருத்திசெய்தல் அதிக பயனை அளிக்கும். தற்பொழுது நமது நாட்டிலிருந்துபோய் ஒருவர் பிடினும் இருவர் வாய்ப்பாட்டும் அண்ணாமலைச் சர்வகலாசாலையில் படிக்கின்றனர். இவர்களை ஆதரிப்பது தமிழராகிய எம்மனோர் கடனாகும். அவர்கள் எங்கள் நாட்டிற்கு அரும் பெரும் தொண்டாற்றுவாரென்பது திண்ணம்.

கலைகளில் சிறந்துள்ள நாடே நாகரிகமுடைய நாடாகும். நம்முடைய நாடும் ஓர் நாகரிகமுள்ள நாடாதற்கு இக்கலைகளைக் கற்பித்தல் வேண்டும். இசை, சிற்பம், ஓவியம், நாடகம் முதலியவற்றைக் கற்பித்தற்கென ஓர் கலாசாலை அமைத்தல்வேண்டும். பள்ளிக்கூடச் சீவிய முடிவில் சில பிள்ளைகள் சில சில கலைகளில் விசேட வல்லபம் காட்டுவார்கள். இவர்களைத் தெரிந்தெடுத்து அவரவர் பெற்றுள்ள துறைகளில் பயிற்றுதல்வேண்டும். இப்பொழுது வட இலங்கையில் கோடைகாலச் சங்கீத வகுப்பைத் தொடங்கி நடத்தி வருபவர்களாகிய பெரியார்கள் இசைத் தமிழ்க்கல்வி விருத்தியில் அதிகம் ஈடுபட்டிருக்கின்றனர். இவ்வகுப்புக்களினுல் தற்பொழுது அடையும் பலன் அற்பமாய் இருந்தாலும், அவை ஓர் பெரும்பயனை அடைதற்குத் துணையாய் இருக்கின்றன என்பதை நாம் உணரவேண்டும். இவையெல்லாவற்றிற்கும் பணமே யின்றியமையாதது. இந்தியாவில் அதிகமாகச் செல்வர்களே கலைகளை ஆதரித்து வருகின்றுர்கள். எங்கள் நாட்டிலோ செல்வர்கள் இல்லை. சிலர் இருந்தாலும் இவர்கள் மேலும் மேலும் பணப்பேய் பிடித்து அலைகின்றுர்களேயன்றி நல்வழியில் தங்கள் பணத்தைச் செலவிட முன்வருகின்றுர்களில்லை. இப்படியான நற்கருமங்களைச் செய்வதற்கு எங்களுடைய செல்வர்கள் எமது தாய்நாடாகிய இந்தியாவை ஒருமுறையாவது தரிசித்தல் வேண்டும். ஆசிரியராகிய நாமே இக்கலைகளை வளர்ப்பதில் அதிகம் ஊக்கமெடுத்தல் வேண்டும். நாமே அதிகம் பண உதவியும் புரிதல்வேண்டும். அரசினர் எங்களுடைய சம்பளத்தைக் குறைத்தாயினும் இக்கலைகளை வளர்ப்பதில் ஊக்கமெடுப்பாராயின் நம்முடைய நாடும் சிறப்புற்று விளங்குமென்பது ஒருதலை.

"இன்பத்து ளின்பம் இசையின்பம் அவ்வின்பம்
இன்பத்து ளெல்லாந் தலை."

# கணித நொடி

( சி. சிதம்பரப்பிள்ளை )

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | டி | ட் | க் | ர | டி |
| | | | | | ர் | கே | ட் | டி |
| | | | ர் | ர | கே | க் | க் | டி |
| | | ர் | ஒ | கா | ர | கா | ன் | |
| | ஒ | டி | ர் | நீ | கா | கே | | |
| நீ | ர | க் | ர் | கா | கா | | | |
| ஒ | ஒ | க் | ர் | ர | ன் | ர | க் | டி |

மேலே காட்டப்பட்டது ஓர் பெருக்கல் கணக்கு.

அதில் உள்ள ஒவ்வோர் அட்சரத்துக்கும், குறிக்கப்பட்ட ஒவ்வோர் எண் உண்டு.

உதாரணமாக, 'ர்' = 1, 'ன்' = 2, 'கா' = 3, 'ஒ' = 5 ஆனால் அப்போது 'ர்' உள்ள இடங்களிலெல்லாம் 1-உம், 'ன்' உள்ள இடங்களிலெல்லாம் 2-உம், 'கா' உள்ள இடங்களிலெல்லாம் 3-உம், மாறாது வருதல் வேண்டும்.

இப்படியாக இக்கணக்கில் வரும் எண்களை ஒழுங்காக வகுத்து, (உதாரணமாக 1, 2, 3, 4 என்றபடி) அவற்றின் கீழ், இசைந்த அட்சரங்களை இட்டால்,

உதாரணம்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| ர் | ன் | கா | | ஒ | |

உமக்கு முன்னிலையில் உள்ள ஓர் புகழுடையானைக் குறிக்கும் எண்களைக் கண்டுபிடிக்குக.

# காதலூக்கமும் பராதீனமும்

(மு. ஆறுமுகம்)

உலகம் அன்பிலும் பசியிலுமே சுழல்கின்றது. இவ்விரண்டும் மனித சீவியத்திற் பிரதானமானவையாயிருக்கின்றன. இதனால் நாங்கள் முழுநேரத்தையும், அல்லது அதிகமான நேரத்தை அவற்றிலே செலவிடுகின்றோமென்பதன்று. எங்கள் தேவைக்கேற்ற காரியங்களைச் செய்வதற்குத் திட்டமான ஒழுங்கு தயாரியாமல் இருப்பின் அதிகமான நேரத்தை வீணாக்கவேண்டியிருக்கும். எங்கள் வேலைகளைச் செவ்வனே செய்துவந்தால் உணவைப்பற்றி எங்களுக்கு அதிக கவலைபிராது. ஏனெனில், நாங்கள் ஈட்டிக்கொடுக்கும் பணத்திற்கு மற்றவர்கள் பயிரை உண்டாக்கி உணவு தயாரித்துத் தருவார்கள். உணவிற்கெனக் குறிக்கப்பட்ட நேரம் வரும்வரையில் நாங்கள் உணவைப்பற்றி நினைப்பதில்லை. உணவூக்கம் காதலூக்கம் என்பவற்றைப்பற்றி நாங்கள் கவலைப்படாவண்ணம் தகுந்த ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

பசியைப்பற்றியறிவதும் விளங்குவதும் மிகவும் இலகு. நாங்கள் சாப்பிடுவது பசியை நீக்கி உலகிற் சீவித்தற்பொருட்டு. ஆனால் காதல், இயற்கையாற்றல்கள் எங்கள் சீவியம் நிலைத்தற்குத் தேவையானவையல்ல, சந்ததியைக் காப்பாற்றுவதற்கே தேவையானவை. காட்டுமிராண்டிச் சாதியாருக்கு உணவின் பகுதிகளாகிய, தார்க்கீயகாரவகை, இருந்தைச் சலப் பதார்த்தவகை, கொழுப்புவகை, உப்புவகை யென்பன தெரியாது. மத்திய அவுஸ்திரேலியாவிலுள்ள சுதேசிகளுக்கு ஆண் பெண் புணர்வதினாலேயே கரு உண்டாகிறதென்பது தெரியாது. கரு உண்டாதற்கும் ஆண், பெண் புணர்வதற்கும் ஒரு சம்பந்தமுமில்லை என்ற நம்பிக்கை உண்டு. ஒரு இயற்கையாற்றலைத் தீர்க்க முயல்வது அதனாற் றூண்டப்படுவதினாலேதான். ஒரு இயற்கையாற்றல் தூண்டிக்கொண்டிருக்கும்போது ஒருவன் தான் ஆறுதலில்லாதவனாகவும் சந்தோஷமில்லாதவனாகவும் இருப்பதை உணர்கிறான். அதன் எண்ணப்படியே செய்யும்போது சந்தோஷத்தை அனுபவிக்கிறான். அவ்வியற்கையாற்றல்களால் தனக்கும் பிறருக்கும் வரும் நன்மை தீமைகளை உணரும்போது அவைகளைக் கட்டுப்பாட்டிற்குள் அமைக்கிறான். அதனால் அவைகளை அடக்கும் வன்மையைப் பெறுகிறான்.

இயற்கையாற்றல்களைக் கட்டுப்படுத்தலாம். சில காரியங்களைச் செய்யும்படி ஒருவன் தூண்டப்படுகிறான். அவன் மற்றவர்களின்

நன்மையைக்குறித்தோ, பயத்தினலோ, நியாயத்தையும் நீதியையும் அறிந்தோ அதைச் செய்யாமல் விடுகிறன். எவ்வகையில் விட்டாலும் அத்தூண்டுதலுக்கும் அதையடக்கும் வன்மைக்குமிடையில் ஒரு சண்டை உள்ளேநடக்கும். அப்பொழுது அவன் தனக்கெதிரே பிரிகிறன். இயற்கையி ெனுருபகுதி மற்றெரு பகுதியுடன் சண்டை பிடிக்கிறது. இயற்கை யாற்றல்கள் அதிகம் வலிமையுடையனவாயிருந்தும் ஒன்றுஞ் செய்யாமல் விடுகின்றன.

ஒரு கூட்டத்தில் தீமைபயக்குமொரு காரியத்தைச் செய்வதிலும் செய்யாமல் விடுதல் நன்று. பசியால் வரும் இயற்கையாற்றல் சாப்பாட்டு ஒழுங்குகளாற் றடைப்படுத்தப்படுகிறது. நேரங்குறிக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களுடன் கலந்து சாப்பிடும் ஒழுங்கு செய்யப்படுகிறது. பசியைமாத்திரந் தனியே தீர்ப்பதல்லாது மற்றவர்களுடன் கலந்து பழகுவதையும் சாப்பாட்டிற் பெறுகிறேம். இதே மாதிரி, காதல் இயற்கை யாற்றல்களிலும் தடைகள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. காதல் இயற்கையாற்றலின் வேலை, உலகசரித்திரத்தின் எப்பகுதியிலும் மனுஷனுக்கு ஒருகூட்டத்திலுஞ்சரி தனியாகிலுஞ்சரி தொந்தரவைக் கொடுத்து வந்தது. இத்தொந்தரவு சரித்திரம் தொடங்குமுன் இருந்ததென்பதை நாம் நம்பவேண்டும். ஏனெனில் மிருகங்களும் பட்சிகளும் சோடிகளைப் பிடிப்பதிற் படுங்கஷ்டங்களைக்கொண்டு அறியலாம்.

எங்கள் சீவியத்திற் காதற்சீவியம் தடைப்படுத்தப்பட்டதுபோல் காட்டுமிராண்டிகளிடமும் தடைப்படுத்தப் பட்டிருக்கிறது. ஆனல், எங்கள் தடையைப் போன்றதன்று. அவைகள் வேறு. அதனற் பிரமாணத்திற்கு எதிராய் நடப்பவர்கள் எங்கள் முறையிலும் பார்க்கக் கூடின தண்டனையைப் பெறுவர்.

மத்தியாபிரிக்காச் சுதேசிகள் விரும்பியபடி கலியாணஞ் செய்ய முடியாது. அங்கே ஒருவன் ஒருபெண்ணை மாத்திரம் விவாகஞ் செய்யலாம். சிலவிடங்களில் சாதிபேதம், சீதனக்குறைவு என்பனவைகள் கலியாணத்திற்குத் தடைகளாகின்றன. தனி விவாகக் கட்டளையும் ஓர் தடை. காதல் இயற்கையாற்றல்களைச் சிறு தடைசெய்து கட்டளையை மீறுபவர்களுக்குக் கடுந்தண்டனை விதிப்பதே ஒழுங்கான சமூக சீவியத்திற்கேற்ற முறை.

காதலைப்பற்றிக் கதைத்தல் கூடாதென ஒரு தடை உண்டாக்கப்பட்டிருக்கிறது. அதனல் அதை மறைவாகப் பேசத் தூண்டப்படுவர்.

இது ஓர் பிசகு. பிள்ளைப்பராய மடையும்போதே காதல் இயற்கையாற்றல்கள் உண்டாகின்றன எனச் சாதாரண மனுஷர் விளங்குகின்றனர். சீவியத்தின்முழுப்பருவத்திலும் இது இருக்கின்றது. இவ்வுணர்ச்சி பிறகு உண்டானதா? சீவியத்தின் இப் பிற்பகுதியில் இப்படியான இயற்கையாற்றல்கள் வேலைசெய்யத் தொடங்குகின்றனவா? பிறந்தநாட்டொடக்கம் காதல் உணர்ச்சி உண்டெனவே மானத சாஸ்திரிகள் கூறுகின்றனர். ஆனாற் றேகவளர்ச்சியில் சிலபகுதிகள் தேவைப்படுவதாலே அது முனைத்து எழுகிறதில்லை எனக் கூறுகின்றனர்.

ஒரு மனிதனின் அல்லது மனுஷியின் சீவியம் தனித்துப் பூரணமானதன்று. ஆண் பெண் பாகுபாடு என்னத்தைக் காட்டுவதென்றால், ஒவ்வொருவருக்கும் சிலகாரியம் தேவைப்படுகின்றன என்றும், ஒருவர் தேவைப்படுவது மற்றவரில் உண்டென்றும் காட்டுகிறது. ஒன்றை முடிவுபெறச்செய்ய மற்றையது தேவை. ஆகவே முடிவையடைவதற்கு ஒருசாதியில் மற்றையது தங்கி இருக்கிறது.

பள்ளிக்கூடப்பிள்ளைகள் பொதுவாகக் காணும் கனவில் தாங்கள் ஓர் அபாயத்தில் இருப்பதாகவும் அல்லது சாவச் சுடப்போவதாகவும் கடைசி நேரத்தில் யாரோ ஒருவராலே தப்ப நேரிடுவதாகவுமிருக்கும். பதினொரு வயதுள்ள பெண்பிள்ளை தான் ஒரு பெரிய கடலில் மாழ்வதாகவும், பயத்திற் காலைக் கையை யடித்தும் பிரயோசனமில்லாது போவதாகவும், தூரத்தில் ஓர் வள்ளத்தில் "மனுஷன்" என்று சொல்லப்படுபவனாற் காப்பாற்றப்படுவதாகவுமே அதிகமாகக் கனாக் காணுவாள்.

அதேமாதிரிப் பள்ளிப்பிள்ளை உபாத்தியாயரிலே தங்கி இருக்கிறது. அப்படித் தங்குந் தன்மையை நீக்கவேண்டும். காலஞ் செல்லச் செல்ல மற்றவரிலே தங்குந்தன்மை குறையவேண்டும். பிள்ளை பள்ளிக்கு வரும்போது ஆசிரியரிலே தங்கினாலும் பின்பு தன்னிலே தான் தங்குவதைப் பழகவேண்டும். சுயாதீனத்தையே ஒவ்வொருவரும் நாடவேண்டும். சரியான சுயாதீனம்பெற முடியாது. ஏனெனில் மனுஷன் முடிவு பொருளாய் நிற்பதற்கு மனுஷி தேவைப்படுவதாலும், மனுஷிக்கு மனுஷன் தேவைப்படுவதாலும் ஓர் ஆணும் ஓர் பெண்ணும் கூடுவது சுயாதீனமடைவதாகும். இதையே பள்ளிப் படிப்பெல்லாம் நோக்கவேண்டும். மனுஷனைக் கணவனாகவும் தந்தையாகவும், மனுஷியை மனைவியாகவும் தாயாகவும் கல்வி ஆக்கவேண்டும். பிள்ளை இப்படியாக வளருவதே கல்வியின் இலக்கு.

இவ்வளர்ச்சியில் அநேக பருவங்களுண்டு. குழந்தைப் பருவத்திற் பிள்ளை தாயிற்றங்கி இருக்கிறது. தேவையெல்லாம் தாயே பார்க்க வேண்டும். அடுத்த பருவத்தில் காதல் இயற்கையாற்றல்கள் தொடங்குகின்றன. ஆண்பிள்ளை தாயையும் பெண்பிள்ளை தந்தையையும் தங்களுக்கே முழுவதும் உரியவர்களென நினைக்கின்றனர். பெருமையும் விருத்தியடைகிறது. தன்னையே தாய் கரிசனையாக வளர்க்கவேண்டுமென ஒரு பிள்ளை விரும்புகிறது.

அடுத்த பருவத்திற் பிள்ளை தன் சரீரத்திற் பற்றுவைக்கிறது. இதனாலேதான் பிள்ளை தன் கெட்டித்தனங்களை மற்றவர்களுக்குக் காட்ட விரும்புகிறது. தான் குளிக்கும்பொழுதும் மற்று நேரங்களிலும் உடம்பை மற்றவர்களுக்குக் காட்ட விரும்புகின்றது. பெற்றார் இதைத் தடுப்பதனால் பிள்ளைகளுக்குத் தீங்கு விளைக்கின்றனர். பிள்ளை தானாக எதையும் கண்டுபிடிக்க விடவேண்டும். எல்லாநேரமும் உபாத்தியாயர் மேற்பார்வையிடவேண்டும்.

ஓர் பருவத்திற் பிள்ளை கேள்விகேட்கத் தொடங்குகிறது. இதே நூதனப் பிரியம் எனப்படும். சரீரத்தின் சில பகுதிகளைப்பற்றிக் கதைக்கக்கூடாதெனத் தடைப்படுத்துகின்றனர். அப்பகுதிகள் மற்றப் பகுதிகளிலும் என்ன வித்தியாசம். இப்பகுதிகளைப்பற்றி வளர்ந்தவர்களுடன் தான் கதைக்கக்கூடாதென அறிகிறது. இரகசியமாகக் கதைக்கவேண்டுமென்றும் தன்னையொத்தவர்களுடனே கதைக்கலாமெனவும் அறிந்து இரகசியமாகக் கதைப்பான். பிள்ளைக்குத் தேவையில்லாத விஷயத்தை மற்றவர்கள் தடைசெய்வதால் அவன் படித்தறிகிறான். பிள்ளையின் வயதும் அறிவும் எவ்வளவைக் கிரகிக்குமோ அவ்வளவுக்கேற்ற அளவுக்குப் பிள்ளையின் எக்கேள்விக்காயினும் விடையளிக்கவேண்டும். அதற்குமிஞ்சிச் சொல்லத் தேவையில்லை. பிள்ளையின் கேள்விக்குத் தகுந்த விடையிறுப்பது பெற்றோரினதும் உபாத்தியாயரினதுங் கடமை.

இப்பருவத்தின்பின் தன்னிற் பற்றுவைப்பதுடன் தன் நண்பரிற் பற்றுவைப்பான். இக்காலத்தில் நண்பர்களுக்குள் இருக்கும் பற்றைப்போல் வேறு ஒரு பருவத்திலும் வரமாட்டாது. இது பிள்ளை பராயமடையும் பருவத்திலுண்டாகிறது. தன்னைப்பற்றி வெளிப்படையாகத் தன் நண்பருக்குச் சொல்லுகிறது. இப்பருவத்தில் எதிர்ப்பாலாரிலும் பற்றுவருகிறது. ஆனாற் சிநேகிதரில் இருக்கும் பற்றைப்போல் அவ்வளவு வலிமையானதன்று.

இதன்பின் மாணவர் மனுஷன் மனுஷிப் பருவமடைகின்றனர். பிள்ளையின் இளமைச் சீவியமே உபாத்தியாயருக்குத் தேவையானது. உபாத்தியாயர் வழிகாட்டியாயே இருக்கவேண்டும். மாணவன் ஓர் நீர் ஊற்றுக்குச் சரி. நல்வழியாக நீர் பாய்ச்சுவது உபாத்தியாயரின் தொழில்.

மனுஷசீவியம் இயற்கையிலே ஆண்பெண் தன்மையைப் பொறுத்திருப்பதால் இதைப்பற்றிக் கவலையீனமாய் இருத்தல்கூடாது. இத் தன்மை முழுச்சீவியத்தையும் மாற்றுகிறது. அதி வலிமையுடைய இக் காதல் இயற்கையாற்றல் நாங்கள் அறிந்த மற்றைய இயற்கையாற்றல் களைத் தன்வசப்படுத்தக்கூடியது. ஆனபடியால் இதை நன்கு அறிந்து இதன் நல்வழியில் மாணவரை நடாத்துவது ஆசிரியரின் பிரதான தொழில்.

---

"கோவிந்த ஸாமிபுகழ் சிறிது சொன்னேன்
குவலயத்தின் விழிபோன்ற யாழ்ப்பா ணத்தான்
தேவிபத மறவாத தீர ஞானி
சிதம்பரத்து நடராஜ மூர்த்தி யாவான்
பாவியரைக் கரையேற்று ஞானத் தோணி
பரமபத வாயிலெனும் பார்வை யாளன்
காவிவளர் தடங்களிலே மீன்கள் பாயுங்
கழனிகள்சூழ் புதுவையிலே யவனைக் கண்டேன்."

"தங்கத்தாற் பதுமைசெய்து மிரத லிங்கஞ்
சமைத்துமவற் றினிலீசன் தாளைப் போற்றுந்
துங்கமுறு பக்தர்பலர் புவிமீ துள்ளார்
தோழரே யெந்நாளு மெனக்குப் பார்மேல்
மங்களஞ்சேர் திருவிழியா லருளைப் பெய்யும்
வானவர்கோன் யாழ்ப்பாணத் தீசன் றன்னைச்
சங்கரனென் றெப்போது முன்னே கொண்டு
சரணடைந்தா லதுகண்டீர் சர்வ சித்தி."

— பாரதி பாடல்.

# கற்பனைச் செல்வியின் காமரு தோற்றங்கள்

(ச. வேலுப்பிள்ளை)

*காதலன் பித்தன் கவிஞனென் றின்னோர்
ஓதிடு கற்பனா சக்தியி னியன்ற
வேறு பட்ட வெவ்வே றுருவினர் ;
காதலன் தானும் காக்கையிற் கரிய
மாதராள் வயினும் மலர்மகள் வனப்புக்
கண்டுள மகிழ்ந்து களிகூ ருவனே.
பித்தனென் பான்றன் பேதுறு மதியால்
எத்திசை தோறும் இழிந்தபேய்க் கோலமே
நித்தங் கண்டு நிலையழி வோனே.
எண்டிசை மதிக்குநல் விசைநவில் புலவனோ
பரந்த வெளியினும் பாரினும் பரந்த
பொறியறி விகந்த பொருள்களைத் தனது
கற்பனைக் கண்ணால் கருவகப் படுத்தி
ஊரும் பேரும் ஒழிந்த வெறும்பொய்க்
கூடும் பேரும் உய்த்துஞற் றுவனே.

---

* ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் எழுதிய 'நடுவேனிற் கனவு' என்பதி லிருந்து பெயர்க்கப்பட்டது.

# ஒருவர் தேர்ந்தெடுத்த இலக்கத்தைக் கண்டு பிடிக்கும் விதம்

( சு. கந்தசுவாமி )

பிறனொருவன் நினைத்த இலக்கத்தைக் கண்டு பிடிப்பதற்கு அநேக வழிகளுண்டு. பெரும்பாலும் உபயோகிக்கப்படும் சுலபமுறைகளையே கையாளுகின்றேன். அட்சர கணிதத்தோடு ஊசாடிய ஒருவருக்குப் புதிய புதிய முறைகளைக் கண்டு பிடிப்பதில் சிறிய கஷ்டமேனும் ஏற்படாது.

முதலாம் முறை: (i) தெரியப்பட்ட எண்ணை மும்மடங்காக்கச் செய். (ii) பெருக்குத்தொகை ஒற்றையா இரட்டையா வென்பதை யறி. இரட்டையாகில் அரைவாசியை எடுக்கச் செய். ஒற்றையாகில் ஒன்றைக் கூட்டி பின் அரைவாசியை எடுக்கச் செய். (iii) வந்த மறு மொழியை 3 ஆல் பெருக்கச்சொல்லு. (iv) இப் பெருக்குத் தொகையில் எத்தனை முழு 9 இருக்கிறதென்பதை அறி. ($n$ எனக்குறி) (v) ஆகவே நினைத்த எண் $2n$ அல்லது $2n+1$ (முன் 1-ம் படியின்படி வந்த எண் இரட்டையாக அல்லது ஒற்றையாக விருத்தற்குத் தக்கபடி.)

நியாயம் வெளிப்படையாகத் தோற்றுகிறது. ஒவ்வொரு இரட்டை எண்ணும் $2n$ என்னும் உருவமாகவே யிருக்கும். நடாத்தப்பட்ட கிரியைகளினின்றும் பெறப்படுவது (i) $6n$ இது இரட்டை. (ii) $\frac{1}{2}(6n)=3n$ (iii) $3\times 3n=9n$ (iv) $\frac{1}{9}(9n)=n$ (v) $2n$. ஒவ்வொரு ஒற்றை எண்ணும் $2n+1$ என்ற உருவமாகவே யிருக்கும். இதற்குச் செய்யப்பட்ட கிரியைகளிலிருந்து பெறப்படுவது (i) $6n+3$. இஃது ஒற்றையாகும். (ii) $\frac{1}{2}(6n+3+1)=3n+2$ (iii) $3(3n+2)=9n+6$ (iv) $\frac{1}{9}(9n+6)=n+a$ மிச்சம். (v) $2n+1$. இவ் விளக்கத்திலிருந்து முன் கூறிய விதி வந்த விதத்தை யறியலாம்.

இரண்டாவது முறை: அந்த எண்ணைத் தெரிந்தவரைப் பின் காணுங் கிரியைகளைச் செய்யும்படி ஏவுக. (i) எண்ணை 5 ஆல் பெருக்கு. (ii) பெருக்குத் தொகைக்கு 6 ஐக் கூட்டு. (iii) கூட்டுத் தொகையை 4 ஆற் பெருக்கு. (iv) பெருக்குத் தொகைக்கு 9 ஐக்

கூட்டு. (v) கூட்டுத் தொகையை 5 ஆற் பெருக்கு. மறுமொழி என்ன வென்பதை அறி. இந்தப் பெருக்குத் தொகையிலிருந்து 165ஐக் கழித்து எஞ்சியதை 100 ஆல் பிரித்தால் வரும் மறுமொழியே முன் நினைக்கப்பட்ட எண்ணாகும்.

ஏனெனில் தெரிந்தெடுக்கப்பட்ட எண் n என வைத்துக்கொள்க. செய்யப்பட்ட கிரியைகளினின்று பெறப்படுவது, (i) $5n$ (ii) $5n+6$ (iii) $20n+24$ (iv) $20n+33$ (v) $100n+165$. எனவே விதி வந்தவாறு காண்க.

**மூன்றாவது முறை:** அந்த எண்ணை நினைத்தவரைப் பின்காணும் கிரியையைச் செய்யும்படி கேட்கவும். (i) அதை ஒரு எண்ணால் அஃதாவது a ஆல் பெருக்கு. (ii) பெருக்குத்தொகையை வேறோர் எண்ணால் அஃதாவது b ஆல் பிரி. (iii) பிரித்து வந்த மறுமொழியை c ஆல் பெருக்கு. (iv) இப்பெருக்குத் தொகையை d ஆல் பிரி. (v) இப்பொழுது இறுதியாக வந்த மறுமொழியை முதல் நினைத்த எண்ணால் பிரி. (vi) 5 வது கிரியையால் செய்து வந்த விடையுடன் முன் நினைத்த எண்ணைக் கூட்டு. இந்தக் கூட்டல் மறுமொழியில் $ac|bd$ கழிக்கப்படின் எஞ்சியதே முன் நினைத்த எண்ணாகும்.

ஏனெனில், நினைத்த எண் n ஆயின் முதல் நான்கு கிரியையினாலும் பெறப்படுவது $nac|bd$. 5 வது கிரியையால் பெறப்படுவது $ac|bd$. 6 வதில் வருவது $n+(ac|bd)$ இஃதே சொல்லப்பட்டது. ஆனால் $ac|bd$ தெரியும். ஆகவே $ac|bd$ யை சொல்லப்பட்ட மறுமொழியிலிருந்து கழித்தால் n கிடைக்கும். a, b, c, d க்கு விரும்பிய எந்த விலையையுங் கொடுக்கலாம். உதாரணமாக $a=12$, $b=4$, $c=7$, $d=3$ ஆயின் பெறப்படும் மறுமொழியினின்று 7 ஐக் கழிப்பதே முன் நினைத்த எண்ணைப் பெறுவதற்கு வழியாகும்.

**நான்காவது முறை:** 60 க்குட்பட்ட ஓர் தானத்தை நினைக்கும்படி சொல்லுக. கீழ்க்காணும் கிரியைகளைச் செய்யும்படி சொல்லுக. (i) அத்தானத்தை 3 ஆற் பிரித்து மிச்சத்தைச் சொல்லு. அது a என வைத்துக் கொள்வோம். (ii) 4 ஆற் பிரித்து மிச்சத்தைச் சொல்லு. அது b என வைத்துக்கொள்வோம். (iii) 5 ஆற் பிரித்து மிச்சத்தைச் சொல்லு. அது c என வைத்துக் கொள்வோம். அப்பொழுது நினைத்த தானம் $40a+45b+36c$ ஐ 60 ஆற் பிரிக்கும் போது வரும் மிச்சத்துக்குச் சமனாயிருக்கும். இதற்கு நியாயத்தை வாசகர்கள் கண்டு பிடிக்கவும்.

---



250043

# அவதான பூமிசாஸ்திரம்

(க. சுப்பையா)

## அவதான பூமிசாஸ்திரத்தின் தன்மை :-

ஒருவன் தனது சூழலுடன் நேரே சம்பந்தப்படுவதனால் அவன் மனத்தின்கண் மூலாதாரமான பல சிறந்த எண்ணங்கள் பதிய இடமுண்டாம். பூமிசாஸ்திர சாதனங்களுடன் நேரே பழகுவதனாலுண்டாகும் அனுபவங்களெல்லாம் அவதான பூமிசாஸ்திரத்தின் அம்சங்களாகும். குடையுபயோகிப்பது வெயிலையும் மழையையும் தாங்குவதற்கென அவதானத்தினால் ஒரு சிறு பிள்ளை அறிகின்றது. மிகவும் உக்கிரமான காற்று கட்டடங்களுக்குச் சேதம் விளைக்குமெனவும், அதிக மழை அல்லது உறைபனி வீழ்ச்சி போக்குவரவுப் பாதைகளைத் தடைசெய்யுமெனவும் அவதானத்தின் விளைவான அநுபவ வாயிலாக நாமறிவோம். சூழலை ஆழ்ந்த நோக்குடன் அவதானிப்பவனாயினுஞ்சரி, அன்றிப் பொது நோக்காகப் பார்ப்பவனாயினுஞ்சரி அவன் அவதான பூமிசாஸ்திரத்தினால் வரும் பூமிசாஸ்திர அறிவு பதியப் பெறுகின்றான். இவ்வாறு பூமிசாஸ்திர ஞானத்தைச் சூழலிலிருந்து நேரே பெற்றுக்கொள்ளுதல் இளைஞர் முதலிய யாவர்க்கும் ஏற்றபடியமைந்த பொதுவியல்பாகும்.

## அவதான பூமிசாஸ்திரத்துக்கும் உள்ளூர்ப் பூமிசாஸ்திரம், வீட்டுப் பூமிசாஸ்திரம் என்பவற்றிற்கு முள்ள தொடர்பு :-

இவை மூன்றும் பெரும்பாலும் ஒன்றையே குறிப்பனவென்னும் ஓர் கொள்கையுண்டு. ஆனால் உள்ளூர்ப் பூமிசாஸ்திரமென்பது வீட்டின் அண்மையிலுள்ள பகுதிகளின் பூமிசாஸ்திரத்தைக் கூறுவது; வீட்டுப் பூமிசாஸ்திரம் வீட்டிற்றேவைப்படும் பொருள்களையும், பெறும் வழிகளையும் கூறுவது. இதில் உலக பூமிசாஸ்திரம் தொடர்பு படுத்தப் படும். ஆனால் அவதான பூமிசாஸ்திர மென்பது வீட்டிலாயினுஞ்சரி உள்ளூரிலாயினுஞ்சரி உலகத்தில் எந்தப்பகுதியிலாயினுஞ்சரி நேரனுபவத்தினால் பெறும் பூமிசாஸ்திர ஞானத்தைக் குறிக்கின்றது. ஆகவே உள்ளூர்ப் பூமிசாஸ்திரம் முற்றாய் அவதானிப்பிற்குரியதென்னுங் கொள்கை சரியன்று.

## சிறுவர்களினதும் பராய மானவர்களினதும் அவதானம் :-

ஒரு சிறுவன் அவதானிப்பதற்கும் பராயமானவன் அவதானிப்பதற்கும் அதிக வித்தியாசமுண்டு. சிறுவரின் அனுபவங்கள் குறைவானகையால் அவர்கள் பெறும் (ஞானம்) அப்பியாசமும் மட்டாகவே

யிருக்கும். அவ்வபிப்பிராயங்களுள்ளும் பல பூரணமற்றவையாயே இருக்கும். ஏனெனில், அவன் இப்பொழுதுதான் உலக நிலைபரங்களுடன் பரிச்சயமுறவும் அவற்றிற்குத்தக இயங்கவும் தொடங்குகின்றான். ஆனால், ஒரு பராயமானவனோ தன்னுடைய பழைய அனுபவங்களைக் கொண்டுதான் அவதானிப்பதை எளிதில் விளங்குமாற்றலுடையவனாவான். பராயமானவன் ஒருவன் அவதானித்துப் பெற்ற ஞானமோ உண்மையான நிகழ்ச்சிக்குரிய காரணங்களினின்றும் சிறிது வழுவியே யிருப்பினும் அவன் அவதான ஞானம் அதிக விளக்கத்துடன் கூடியதென்பதற் கையமின்று. சுருக்கிக் கூறுமிடத்துச் சிறுவன் ஒன்றை அவதானித்து விளங்குதற்கு முயற்சிக்கிறான்; பராயமானவன் ஒன்றை அவதானித்து அதை விளங்குவதற்கு முயற்சிப்பான் எனலாம்.

## அவதான பூமிசாஸ்திரத்தை வற்புறுத்தல் :–

கீழ் வகுப்புக்களில் பூமிசாஸ்திர பாடம் ஆரம்பிக்கும் பொழுதே அவதானத்தை மிகவுங் கட்டாயமாக வற்புறுத்த வேண்டும். அக்காலங்களிலே அவதான விசாரங்களெல்லாம் கவர்ச்சியைக் கொடுக்கக் கூடியனவாகவும், பிழையின்றி யமைந்தனவாகவும், அவர்களின் விளங்கும் சக்திக் கேற்றனவாகவும் இருக்கவேண்டும். இப்படியான அவதானங்களை மாணவன் ஆதாரமாகக்கொண்டு படிப்படியாக உலகத்தை மட்டிடுவான். அவனுடைய அவதானங்களிலேதேனும் பிழையேற்பட்டிருந்தால் அவன் பிற்காலத்தில் உலகத்தை மட்டிடுவதில் சிறிது கஷ்டமுறுவான். உயர்தர வகுப்புக்களில் ஒரு பூமிசாஸ்திர ஆசிரியர் நல்ல ஜெயமடைதல் கீழ்வகுப்பில் அம்மாணவர் நடாத்திய அவதானத்திற் றங்கியுள்ளது.

மேலும் அவதான பூமிசாஸ்திரம் எல்லா வகுப்புக்களிலும் படிப்பிக்கப்பட வேண்டியதும் இன்றியமையாததுமாகும். ஒருவன் உலகிற் பலரோடு சந்தோஷமாகச் சீவிக்கவேண்டில் அவன் தன்னைச் சூழலுக்கேற்ப அமைத்து அதற்கிசையச் சீவிக்கக் கூடியவனாயிருக்கவேண்டும். இங்ஙனம் சீவிப்பதற்கு மேல்வகுப்புக்களில் நடக்கும் பூமிசாஸ்திர சம்பந்தமான அவதானம் அதிக துணை செய்யும்.

## அவதானங்களின் தன்மை :–

பூமிசாஸ்திர பாடத்தி லடங்கிய அவதான பாடங்கள் மூவகைப்படும். முதலாவது, சூழலோடு சம்பந்தமான சாதாரண பொருட்களை அவதானித்தல். இரண்டாவது, பொருட்களைச் சேகரித்துப் பாடசாலைக்குக் கொணர்தல். மூன்றாவது, சுற்றுப்பிரயாண மூலம் பல பொருட்க

ளிருக்கு மிடங்களுக்குச் சென்று அவதானித்தல். முன்னையவை இரண்டையும் முடித்தற்கும் சுற்றுப்பிரயாணம் இன்றியமையாததாக லான், பூமிசாஸ்திர சுற்றுப் பிரயாணத்தின் அவசியம் இவ்வளவெனக் கூறவேண்டியதில்லை. பூமிசாஸ்திர சம்பந்தமான சுற்றுப் பிரயாணஞ் செய்தல் பின்வருவனவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கும். (1) இயற்கைப் பூமிசாஸ்திரம் என்ற தலைபங்கத்திலடங்கிய இயற்கையமைப்பு, அது காலகதியிலடையும் மாற்றம் முதலியவற்றை யவதானித்தல். (2) வியாபார கைத்தொழிற் பூமிசாஸ்திரமென்ற தலைபங்கத்தைச் சேர்ந்த தாவரம், மிருகம், சுரங்கப் பொருள், கைத்தொழில் முதலியவற்றை அவதானித்தல்.

## சுற்றுப்பிரயாணம்

**வெளிவேலையின் உபயோகம் :-**

1. பாடசாலைக்கு வெளியிலுள்ள விசாரங்களுக்கும் பள்ளிக்கூட வேலைக்குந் தொடர்பை யுண்டாக்கும்.

2. பாடத்திற் கவர்ச்சியைக் கூட்டும்.

3. சூக்குமமாகக் கற்கப்பட்டனவெல்லாம் தூலமாகவும் உண்மையாகவும் தெரியும்.

4. வகுப்பு வேலைக்கு ஆதாரமாக விருக்கும்.

5. மாணவனை, பலதொடர்புகளுள்ள இவ்வுலகுக் கேற்பச் சிஷிக்க உதவி புரியும்.

6. பொருள்கள் ஒன்றிலொன்று தங்கியிருக்கும் உண்மையைக் கற்பிக்கும்.

7. சகல தொழிலாளர்களிடத்தும் அனுதாபத்தை யுண்டுபண்ணும்.

8. பிரயோசனமானவற்றிலும் அழகானவற்றிலும் மதிப்பையும் விருப்பையும் எழுப்பும்.

9. இயற்கை நல்கும் பொருள்கள் மூலமும் அவற்றின் பரிமாற்றங்கள் மூலமும் இவ்வுலகத்தும் புறத்தும் மறைந்து விளங்கும் அற்புத சத்தியின் திருவிளையாடல்களுடன் நெருங்கிய சம்பந்தத்தை வருவிக்கும்.

10. இயற்கை காலாந்தரத்தில் மாறுதலடைகின்றதென்றும் அதற்கேற்ப மனிதன் நடந்துகொள்ள வேண்டுமென்றும் அறிய ஏவும்.

**வெளிவேலை பள்ளிக்கூடங்களிற் குன்றுதற்குரிய காரணங்கள் :-**

மேற்கூறிய பலவித உபயோகங்களை வெளிவேலை கொடுக்குமாயின், அது பூமிசாஸ்திரபாடத்திட்டத்தில் விசேஷமாக வற்புறுத்தப்

படாம லிருப்பதேன்? வெளிவேலையிற் பெரும்பகுதி பெரும்பாலும் பிரயோசனப்படாமற் போவதேன்? ஆசிரியரை இவ்விஷயத்தில் எவ்வளவுதூரங் குறைகூறக்கூடும்? எங்களுடைய பள்ளிக்கூடங்களில் அதிகமான வெளிவேலையைத் தொடங்குதல் சாலுமா? சாலுமாயின் அவை எவ்விதம் தொடங்கப்படவேண்டும்? வெளிவேலை கட்டாயமாக இருக்கவேண்டுமா? அல்லது ஆசிரியருடைய இஷ்டப்படி விடப்படல் வேண்டுமா? உதவி ஆசிரியரும் தலைமை ஆசிரியரும் வெளிவேலையை வற்புறுத்துமிடத்து அடையுங் கஷ்டங்களெவை? அக் கஷ்டங்களை எப்படி நிவிர்த்தி செய்யலாம்? இவற்றை நாம் சிந்திக்கவேண்டிய தவசியம். வெளிவேலை அதிகம் கவனிக்கப்படாமல் விடுபடுவதற்குரிய காரணங்களுட் சில பின்வருவனவாம்.

1. உபாத்தியாயர் அம்முறையிற் பயிற்றப்படாமையால் அவருக்கு வெளிவேலை யென்ற விஷயம் மாணவருக் கிருக்குமாறுபோல் புதிதாக இருத்தல். வெளிவேலையின் உபயோகத்தை ஆசிரியர் உணர்ந்திருந்தாலும் அதில் யத்தனித்தால் தமக்குச் சித்திவராதென் றெண்ணி மனக் கூச்சமுறுவர். இவ்வாறு மனக்கூச்சமுறுதற்குக் காரணம், ஆசிரியர் அவதானித்தலிலும், அவதானித்ததை வகுத்து ஒழுங்கு செய்தலிலும், பள்ளிக்கூட வேலையுடன் வெளி வேலையைச் சம்பந்தமுறச் செய்தலிலும் பயின்றிராமையே.

2. வெளிவேலை நடக்கும்பொழுது பிள்ளைகள் அடக்கமில்லா திருப்பரென ஆசிரிய ரெண்ணுதல். சிட்டாசாரத்தையே தமது கல்வி முறையாகக் கொண்ட ஆசிரியர் வெளிவேலை சம்பந்தமாக உலாப் போவதினால் மாணவரிடத்துள்ள அடக்கம் குறைந்துபோமெனவும் அதனாற் றமக்கு அநாவசியகமான சிரம முண்டாகுமெனவும் எண்ணுவதனால் வெளிவேலை முறையைக் கைக்கொள்ளார். அப்படிப்பட்ட ஆசிரியர் வகுப்பறைத் திட்ட சிட்டாசாரத்திலும் சிறந்த முறையாலான சிட்டாசாரம் பிள்ளைகளவதானிக்கும் பொருள்களின் மேலுள்ள கவற்சியினால் உண்டாகுமென அறிந்துகொள்ள வேண்டும்.

3. பிள்ளைகளின் கவனம் பலவிடத்துஞ் சென்று கற்றலைத் தாக்குமென ஆசிரியரெண்ணுதல். பிள்ளைகள் தமக் கின்பம் பயக்கும் பொருள்களிலேயே மனத்தைச் செலுத்துத லியற்கை. ஆனால், நல்ல கல்விமுறைகளை அறிந்த ஆசிரியர் தாம் ஆயத்தப்படுத்திய திட்டப்படி வெளிவேலையை ஒழுங்காகச் செய்து முடித்தலிலும், அவர்களின் அவதானம் சென்றவழியையே தமக்கு ஆதாரமாகக் கொண்டு தாம் படிப்பிக்க வேண்டியவற்றைப் படிப்பித்தலிலும் கஷ்டமுறார்.

4. பிள்ளைகளின் பெற்றோர் குறைகூறுவரென ஆசிரியர் எண்ணுதல். பெற்றோரும் முகாமைக்காரரும் வெளிவேலை முறையிற் பயிற்றப்படாமையால், அவர்கள், உபாத்தியாயருடைய வேலை வகுப்பறையில் மாத்திரம் நடக்கவேண்டியதென எண்ணுவர். அப்படியான சந்தர்ப்பத்தில் ஆசிரியர், பெற்றோருக்குத் தம்முயற்சியில் நம்பிக்கை யுண்டாகும்படி செய்யவேண்டும். பெற்றோர்தினக் கொண்டாட்டங்களில் இவை போன்ற விஷயங்களைச் சொல்லி அவர்களின் அஞ்ஞானத்தை நீக்குவதனால் அவர்களின் ஒத்துழைப்பை இலகுவிற் பெறுதல் சாலும்.

5. தூரமான பிரயாணங்கட்குப் பிரயாணச் செலவு வேண்டியதாயிருத்தலினால் அநேக சுற்றுப்பிரயாணங்கள் தடைப்படுகின்றன. இதற்கு முகாமைக்காரரும் அரசாட்சியாரும் உதவி புரியினன்றிச் சுற்றுப்பிரயாணம் நிறைவேறாது.

6. வகுப்பு மிகவும் பெரிதா யிருந்தாலும் சுற்றுப்பிரயாணங்களும் வெளிவேலைகளும் திருப்திகரமாக நிறைவேறா. இப்படியான வகுப்புகளுக்கு எல்லா மாணவரையும் ஊக்கப்படுத்தக் கூடியதும், பெருந்தொகையானோர் பல கூட்டமாகத் தொழிற்படற்கு வசதியானதுமான வெளிவேலைக்குரிய விசாரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். இப்படியான சந்தர்ப்பங்களில் மற்றைய ஆசிரியர்களின் ஒத்துழைப்புப் பெரிதும் உபயோகமாயிருக்கும்.

7. பாடசாலையிற் பூமிசாஸ்திரபாடத்திற் செலவழிக்கும் நேரம் வெளிவேலைக்குப் போதியதன்றாயிருத்தல். இக் கஷ்டத்தை நீக்குவதற்குப் பாடசாலை நேரத்திற்குப் புறம்பான நேரத்தையும், சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமைகளையும், விடுமுறைநாட்களையும் உபயோகிக்கலாம்.

**அவதான பூமிசாஸ்திரத்தின் நன்மை :-**

அவதான பூமிசாஸ்திரத்தை வேண்டிய கவனம் செலுத்திக் கற்பித்தால் மாணவன் தன் சூழலுடன் நன்கு பழக்கமுற்று இயற்கையில் நடைபெறும் மாற்றங்களுக்கேற்பத் தன்னை மாற்றிக்கொள்வதிற் றகுதியும் விருப்பு முடையனுவான். அன்றியும் அவன் தன் சாகியத்தாருக் கிடையிலுள்ள தொடர்பையும், ஒருவரிலொருவர் தங்கியிருத்தலையும், தன்னுடைய சாகியத்தாருக்கும் முழு உலகிற்குமுள்ள தொடர்பையும் மிகவும் மதிப்போடும் விளங்கிக் கொள்வான். மேலும், அவன் பெற்ற அறிவென்னும் அளவுகோலால் மற்றைச் சாகியத்தாருடைய பூமிசாஸ்திரத்தை விளங்கு மாற்றலு முடையவனுவான். இவற்றுடன், அவதானபூமிசாஸ்திரம் பள்ளிக்கூடவேலையின் உண்மையையும் உபயோகத்தையும் காட்டுமாகையால் பள்ளிக்கூடவேலையில் முன்னிலும் கரிசனையும் நம்பிக்கையுங் கொள்வான்.

# மோரோஒ மோர்

(சி. செல்லையா)

காளமேகப்புலவர் கையில் அரைக்காசுதானு மின்றி ஓர் தெருவிலே நடந்துகொண்டு போனார். நல்ல நண்பகற் போது. கடும் வெய்யில். அவருடம்பு வெகுவாய் இளைத்துவிட்டது. இனி ஓரடிதானும் எடுத்துவைக்கச் சக்தியில்லை. கண்கள் நாலாபக்கமுஞ் சுழன்றன. நாக்கில் ஈரமில்லை. பொல்லாத வரட்சி. பாவம்! தன்னருளால் இந்த உலகத்தையும் சகல சீவராசிகளையும் காத்தளிக்க வல்ல காளமேகமே என்றிருந்துகொண்டு அவரால் தமது தாகத்திற்குக் கொஞ்சமும் உண்ணீர் பெற முடியவில்லை. தாகம் மேலிட மெல்ல, மெல்ல நடந்து போனார். அப்பால் முடியவில்லை. அவருடைய கால்களுக்கும் மனசிற்குமுள்ள ஒற்றுமை குலைந்தது. காளமேகத்திற்குத் திடீரென்று ஓர் உற்சாகமுண்டானது. ஆனால் விசேடசங்கதி ஒன்றுமில்லை. தூரத்தில் ஓர் குடிசை தோன்றியது. கால்கள்பாடு பெருந் திண்டாட்டம். முடிவில் ஒவ்வொரு கவடு தூரத்தையும் ஒவ்வொரு காதமாக நடந்து தொலைத்தார்.

காளமேகத்தின் வருகையைக் கண்ட ஓர் ஆய்ச்சி மிக்க குதூகலத்தோடு எதிர்கொண்டழைப்பவள் போல் அக் குடிசையின் முகப்பில் நின்றாள். புலவருக்குத் தாகத்தி லொருபாகந் தணிந்தது. ஆயினும் பேச முடியவில்லை. கைப் பயில் செய்துவிட்டு அக்குடிசையில் ஓர் தூணருகிற் சாய்ந்திருந்தார். அந்த ஆயர் மங்கை, குடிசையின் உட்புறஞ் சேர்ந்தாள். மோர்ப்பானையில் சில துளிகளே மீந்திருந்தன. அவளுக்கு என்ன செய்வதென ஒன்றுந் தோன்றவில்லை. நல்ல வேளையாக அவளுக்கு ஒரு செய்யுளில் "மோர்பெருக்கி" என்னும் பகுதி நினைவுக்கு வந்தது. உடனே அவள் நன்றாய் நீரைவிட்டுப் பெருக்கி ஒரு பாத்திரத்தில் நிறைத்துப் புலவர் முன்னிலையில் வைத்தாள். புலவர் முன்பின் யோசியாது முழுவதையும் ஒரேமூச்சில் இழுத்து விட்டார்.

பசித்தவன் வயிறு மண்ணென்றும் கல்லென்றும் பார்க்குமா? ஆயினும் அந்த ஆயர்மாதின் மனம் ஒருநிலையில் இருக்கவில்லை. புலவருக்குத் தானளித்த மோர் திருப்தி யளித்திருக்குமோ வென்று ஏங்கினாள். தன் மோரை இவர் இழித்துப் பேசின் அதற்குச் சங்கையீ

னுள்ள, கிராக்கி குறையுமோவென வஞ்சினாள். உண்மையிலே புலவர் மனசிற்கு மிக வெறுப்பைத் தன்னுடைய மோர் ஆக்கியிருக்குமென அவளறிவாள். ஆயின் ஒருவருக்கு மிகக் கூடாத உணவைத்தானுங் கொடுத்துவிட்டுச் சுவை எப்படி என்று வினாவின் அவ்வளவு பழுதில்லை என்று சொல்லுதல் சகசம். சொல்லளவிலாவது புலவரிடமிருந்து நன் மதிப்பைப் பெற விரும்பினாள். நாவெழவில்லை. ஒரு புறத்திலே ஒதுங்கிநின்று புன்னகை மலர்ந்து மோரின் சுவை எப்படியிருக்குமோ வென்று கேட்கத் தொடங்கினாள். முடியவில்லை. ஆயினும் ஒருவாறு கேட்டுவிட்டாள்.

இதுவரையும் மோர்ப் பாத்திரத்தை வெறுமையாக்கிவிட்டுக் கொடிய சினத்துடன் எரிமலை அக்கினி கால்வதற்குமுன் அமைதியாய் இருக்குமாறுபோல இருந்த புலவர் முகத்தில் ஒருவித முறுவல் தவழ்ந்தது. புலவர்களுக்குக் கோபம் வந்தால் சிரித்துத்தான் தொலைப்பார்கள். அடித்தழும்புகூடத் தெரியாமல் உயிரையும் வாங்கிவிடுவார்கள். தோலிருக்கச் சுளை வாங்குகிறவர்கள் இவர்கள்தாம். அதுகிடக்கப் புலவருக்குக் கவிதாசக்தி உள்ளத்தில் மலர்ந்தது. வாய்க்குள் வந்துவிட்டது. பாட்டுருவமாய் வெளியில் வந்தது.

“காரென்று பேர்படைத்தாய் ககனத் துறும்போது” என்று முதலாமடி முடிந்தது. ஆயர்மாது ஏதும் உபசாரவார்த்தைதான் சொல்லுவார் என்று நினைத்துக்கொண்டிருந்தாள். முதலாமடியைக்கொண்டு ஏதும் நிச்சயிக்க முடியவில்லை. ஆனால் சந்தேகமும் கொள்ளவில்லை. அப்பால்,

“நீரென்று பேர்படைத்தாய் நெடுந்தரையில் வந்ததற்பின்” என இரண்டாமடி வந்தது. ஆயர்மாது இது என்ன என்று கலங்கினாள். காரென்று பேர்படைத்ததாம், நீரென்று பேர்படைத்ததாம். இவையெல்லாம் யார் தலையில் வந்து முடியுமென்று அவளுக்குப் பிரியவில்லை. இனி என்ன செய்வது முழுவதையும் முடிக்கட்டுமென்று கண்களை மிரள மிரள விழித்துக்கொண்டிருந்தாள்.

“வாரொன்று மென்முலையா ராய்ச்சியர்கை வந்ததற்பின், மோரென்று பேர்படைத்தாய் முப்பேரும் படைத்தாயே” எனக் கவியைப் பூரணஞ் செய்தார். ஆய்ச்சிக்கு முகம் வியர்த்தது, உச்சி வெடித்தது. நாணிக் குடிசையி னுட்புறத்தி லொதுங்கினாள். தூங்குகின்ற புலியை யிடறிய குருடன் போலத் துள்ளித் துவண்டாள். ஒரே பொருள்தான் காரென்றும், நீரென்றும், மோரென்றும் மூன்று வேறுவேறான

பெயர்களை இடவிசேஷத்தாற் பெற்றதென்றும், அதுதான் கலப்பற்ற தனிப்பொருளென்றும், அதன் தூய்மையைப் பல சந்ததிகளெல்லாம் ஆராய்ந்து சொல்லிய புலவர் பாடலின் பொருள் அவள் உள்ளத்திற் சிறிது சிறிதாய்ப் புகுந்து வருத்தியது. ஆனாற் பாட்டின் சுவை ஆய்ச்சிக்குத் தெரியுமோ?

"காரென்று பேர்படைத்தாய் ககனத் துறும்போது
நீரென்று பேர்படைத்தாய் நெடுந்தரையில் வந்ததற்பின்
வாரொன்று மென்முலையா ராய்ச்சியர்கை வந்ததற்பின்
மோரென்று பேர்படைத்தாய் முப்பேரும் படைத்தாயே."

---

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்."

"இன்ன காலத்திலே இந்தச்சரீரம் நீங்கும் என்பது நமக்கு விளங்காமையால், நாம் எக்காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்."

"எவ்வளவு அதிக இரகசியமாகச் செய்யப்படும் நன்மைகளையும், முற்றறிவுடைய கடவுள் அறிந்து, பயன் அளிப்பார்; பிறர் அறிந்தென்! அறியாதிருந்தென்!"

"அறிவும் அதனலாகிய நற்குண நற்செய்கைகளும் உள்ள சான்றோர்களாலே நன்கு மதிக்கப்படுதற்கு யோக்கியனாய் இரு."

"நாம் செல்வத்தையும் உபசரிக்கப்படுதலையும் நம்முடைய பிரீதிக்கு மாறாக இழத்தல்கூடும்; நல்லொழுக்கத்தையோ அப்படி இழத்தல் கூடாது."

"நீ பிறர்க்கு ஒன்றை வாக்குத்தத்தம் செய்யுமுன், அது உன்னால் இயலுமோ இயலாதோ என ஆராய்ந்துகொள்."

"நாம் இரகசியமாகக் குற்றம் செய்யும்போது, பிறர் நம்மைக் கண்டியாவண்ணம் தப்பிக்கொள்வோமாயினும், நம்முடைய மனம் நம்மைக் கண்டியாவண்ணம் தப்பிக்கொள்ள மாட்டோமே."

"உள்ளது போதும் என்று அமைந்த மனமே குறைவற்ற களஞ்சியம்."

"வருவாய்க்குத் தக்க வாழ்க்கை இல்லாதபொழுது செல்வராவார் ஒருவரும் இலர்; அது உள்ளபொழுது வறியவராவார் மிக அரியர்."

"நாம் செய்த குற்றங்களை நாமே வெளிப்படுத்திப் பச்சாத்தாபப் படுவோமாயின், அறிவினால் மூத்த பெரியோர்கள் நம்மேல் இரங்கி, அவைகளைப் பொறுத்துக்கொள்வார்கள்."

—நாவலர்.

# ஊக்கமும் பழக்கமும்

(து. ஐயாத்துரை)

ஊக்கச் செயல், பழக்கச் செயல் என ஒருவன் செய்யும் செயல்கள் இருவகைப்படும். இவ்விரு செயல்களுக்கு மிடையி லதிக பேதங் காணமுடியாது. ஊக்கச் செயலினது வரைவிலக்கணங் கூறப் புகுந்த ஆசிரியர் வொயிட் மோகன் என்பார் பின்வருமாறு கூறினர். 'முதல்முதற் றொழிற்படும்போது முன்செய்த தொழில்களோடொரு வித தொடர்புமில்லாததாய், அதிகமாகச் செய்பவனை நன்மைப்படுத்துவதாய், பொதுவாக வத்தொழிலைச் செய்யுஞ் சாகியத்தாரைப் பேணுவதாய், ஒரு சாதியாரால் அல்லது அச்சாதியோடு தொடர்புடைய வேறொரு அங்கத்தவரா லொரேவிதமாகச் செய்யப்படுவதாய், பயிற்சியால் மாற்றப்படக்கூடியதாய்ச் செய்யப்படுந் தொழிலே ஊக்கச் செயலாகும்.'

இவ்வரைவிலக்கணம் மிருகசாஸ்திர வாராய்ச்சியாளரால் ஆக்கப்பட்டது. ஆகவே, இஃது ஓரளவிற்கு உளநூலார்க்குப் பொருத்தமானதன்று. இன்னும் 'அச்சாதியோடு தொடர்புடைய வேறொரு அங்கத்தவராற் செய்யப்படுவது' என்னும் வரைவிலக்கணத்தின் பகுதியால், தனித்த ஒரு பிராணியின் செயல்களில் எது ஊக்கச் செயலென்பதை யறிய முடியாமலிருக்கின்றது. 'செய்பவனை நன்மைப் படுத்துவதாய் பொதுவாகச் சாகியத்தாரைப் பேணுவதாய்' என்ற பகுதியால், நாம் ஊக்கச் செயல்களென்று கூறுஞ்செயல்களை யாராயுமிடத்து இஃது ஒரு பொது அங்கமேயன்றி யெல்லாச் செயல்களுக்கும் பொருத்தமான தொன்றன்று; எவ்வாறெனிற் றீங்கை விளைக்கு மூக்கச் செயல்கள் பலவுள. ஆகவே யிவ்வரைவிலக்கணத்தின் முக்கிய அம்சம் ஊக்கச் செயல்கள் முன்செய்த செயல்களோடு தொடர்புடையனவல்ல என்பதே.

ஆகவே ஊக்கச் செயலென்பது, ஒரு பிராணி ஒரு புதிய சந்தர்ப்பத்திற் செய்துகொள்ளுஞ் செயலாகும். ஒரு பிராணியி னியற்கைச் செயல்கள் வயதுக்குத் தக மாற்றமடையும். இம்மாற்ற மறிவுவளர்ச்சியா லாகாம லியற்கையாகவே நடக்கின்றது. உ—ம்: ஒரு மிருகம் பருவமெய்தியக்கால், தன்னன்பிற்குரியதோடு நடக்குமுறை அதுமுன் அதே மிருகத்தோடே நடந்த நடத்தையினு முற்றும் வேறானது.

இந்நடை விகற்பங் கல்வியறிவால் வந்ததன்று; ஆனு லியற்கைபாற் பருவமெய்தியவுடன் வந்தது. எவ்வாறெனி லம்மிருகம், முன் முன் பழகாத மிருகத்தைச் சந்திக்கினு மிவ்வாறே விகற்பமாக நடப்பதை நாம் காண்கிறேம்.

ஆனுலொருசெயல் முன்னைய அனுபவத்தோடு தொடர்புடைய தாய், அல்லது முன்னைய அனுபவம் போன்றதாயிருப்பி னச்செயல் ஒரு பழக்கச் செயலாகும். பழக்கம் முன்னைய அனுபவத்தால் வருவது. இவ்வரைவிலக்கணத்தி னுண்மையைச் சிதைக்கும் பல சிக்கல்கள் நம் சீவியத்திற் காணமுடியும். அநேக இயற்கைச் செயல் கள் நாளடைவில் முற்றும். அவை முற்ருத (பருவமெய்தாத) காலத்தில் மிருகங்கள் "இவை ஊக்கச் செயலோ பழக்கச் செயலோ" என்று கண்டோ ரையுறும்வண்ணஞ் சிக்கலாகச் செய்துமுடிக்கின்றன. ஆசிரியர் ஜேம்ஸ் என்பார், பிள்ளைகள் நடப்பது ஊக்கச் செயலென் றும், அவர்கள் முதல்முத லலங்கோலமாக நடத்த லியற்கையவா முற்ருமையா லானதென்றுங் கூறுவர். இதனுண்மையை, மனைவியை யிழந்து பிள்ளையைப் பாதுகாக்கவேண்டிய ஒரு சாஸ்திரவறிவுள்ள கணவன் கெதியிற் கண்டுகொள்வானுகுக. இது இவ்வாறிருக்க, இவ் வாசிரியர்தானே, பறவைகள் பழக்கத்தாலன்றி ஊக்கத்தாற்ருன் பறக்கின்றன வென்பதற்கு உதாரணங்களுங் கூறுகின்றனர். இரண் டாவதாக, ஊக்கம் மனிதனெவ்விதம் நடந்துகொள்ளவேண்டு மென் பதையே கூறுமாகையால், ஒரு கருமத்தை நிதானமாகவும் பூர்த்தி யாகவுஞ் செய்துமுடிப்பதற்குப் பழக்கமின்றியமையாதது. மூன்ருவ தாக, உண்மையாகப் பழக்கத்தால் வரும் பேசுதலை நன்கு பழகுவ தற்கு ஊக்கம் மிகவுமின்றியமையாதது. ஈண்டு வேண்டப்படும் ஊக்கம் பார்த்துச் செய்தல் என்பர். ஆனுல், இவ்வூக்கம் தொழிற் படுகிறதோ வென்பது சந்தேகத்துக் கிடமானது.

எனினும் ஊக்கத்துக்கும் பழக்கத்துக்கு மதிக பேதமுண்டென் பது கூறுமலே யமையும். உதாரணமாக, பழகுவதற்கு ஏற்ற சந்தர்ப் பமும் காலமுமில்லாததாகிய சிசுப்பருவத்தில் ஒவ்வொரு மிருகமும் ஊக்கத்தால் உணவருந்துகின்றது. ஆனுல் ஒருவரும் ஊக்கத்தினேவுத லால் துவிச்சக்கரமோட முடியாது. ஆனுல் பழகியபின் ஒவ்வொரு செயலும் ஊக்கத்தால் வந்தனபோன்று ஒன்றன்பின்ஞென்ருக ஆற் ருெழுக்குப்போல் வந்துகொள்ளும்.

பல பழக்கவழக்கங்களை அறிதலாகிய 'கற்றலை' பல மிருகங் களிலும் அவதானித்திருக்கின்றனர். உதாரணமாகப் பூட்டுள்ள ஒரு

பெட்டிக்குள் பசியுள்ள பூனையொன்றை விட்டு வெளியிலுணவை வைத்தால், அப்பூனை வெளியே வருவதற்கு மிகவுமலைந்து திரிவதை நாம் அவதானிக்கலாம். ஈற்றில் நினையாப்பிரகாரமாகத் தாள் திறபட பூனை வெளியே வந்து உணவை யருந்துகின்றது. அடுத்த நாளு மதே விதமாகப் பூனையைப் பூட்டிவைத்தால், பூனை யலைந்து திரிந் தாலும் முன்நாளிலுங் கெதியாய் வெளிவருவதை யவதானிக்கலாம். இப்படியாகப் பழகிப்பழகி வந்து பின்னர் எடுத்தவுடன் றூளைத் திறந்து வெளிவரக்கூடியதாகின்றது. இப்படியாகவே வேறுபல மிருகங்களி லும் அவதானித்து வந்தால் இதனுண்மையை யறியலாம். இதைப் போலவே நாங்கள் பேச்சு, கணிதம், எழுத்து என்னும் சாஸ்திரங் களைக் கற்கிறோம்.

ப்றொபெசர் வாட்சன் என்பார், பழக்கம் ஒரு பிராணியின் ஏகபோகமற்ற செயல்களின் முதிர்ச்சியால் வருவதென்கிறார். இச் சித்தாந்தம் ஒரு நியாயத்துக்குப் பொருந்தாதெனினும், அது ஒரு சிறிதும் உண்மையன்றென்பது பொருந்தாது. உதாரணமாக, ஒரு மிருகம் பத்துப் பாதைகளாற் செல்லக்கூடுமென்றும், அவற்றுள் ஒரு பாதையே குறித்தவிடத்துக்குக் கொண்டுசெல்லக் கூடுமென்றும் வைத் துக்கொள்வோம். ஆகவே, அம்மிருகத்தின் யத்தனத்தாற்றான் உண்மையான பாதை கண்டுபிடிக்கப்படும். ஆனாற் பிழையான பாதை கள் சராசரி யரைவாசிநேர யத்தனத்தால் அம்மிருகத்தாற் கண்டு பிடிக்கப்பட்டுவிடும். ஆகவே முன்செய்த கருமத்தைத் திருப்பிச் செய்யும்படி ஏவுந் தூண்டுகோலானது பிழையான பாதையிலன்றிச் சரியான பாதையிலேயே அம்மிருகத்தைப் போகும்படி யேவுகின்றது. ஆகவே, பயிற்சியால் ஈற்றில் மிருகம் உண்மையான பாதையிலேயே செல்வதைக் காணலாம். இச்சித்தாந்தத்துக்குரிய மறுப்பு:— ஒரு செயல் மூன்றாமுறையிலேயே சரியாகச் செய்யப்படலாம். ஆனல் மேற்படி யுதாரணத்தில் அம் மிருகம் இரண்டாம் முறையிலேயே முன்னரிலும் பார்க்கச் சரியாக நடக்கிறது. ஆகவே, பழக்கம் ஏக போகமற்ற செயல்களிலிருந்து தோற்றுவதற்கும் வேறொரு துணைக் கருவி வேண்டியதாகின்றது. அக்கருவி பகுத்தறிவென்பதற்கு நியா யங் கண்டுகொள்க.

ஆசிரியர் தோண்டைக் என்பார் இவ்வியாக்கியானங்களுக் கிணங்க இரு சித்தாந்தங்களை யாக்கிக்கொண்டார். அவை:—

1. பிரயோசன விதி: (The Law of effects) ஒரு சந்தர்ப் பத்தை யொட்டிப் பலவிதமாக நடிக்கும்பொழுது அவற்றுளொது மிரு

கத்தின் நோக்கத்துக்குத் திருப்தியளிக்கக்கூடியதோ அது அச்சந்தர்ப்பத்தோடு நெருங்கிய தொடர்புளது. அதாவது, அஃதுடைச் செயல்கள் திரும்பச் செய்யப்படும்பொழுது அவற்றுளிதுவே முக்கியஞ் செய்யப்படும். ஆனல், மேற்படி செயல்களுள் எது மிருகத்தின் நோக்கத்துக்கு முரணானதாய், திருப்தியீனத்தைக் கொடுக்கக்கூடிய தாகின்றதோ, அச்செயல் ஏனைய செயல்களோடு தொடர்பற்றதாய்க் காணப்படும். அதாவது, அஃதுடைச் செயல்கள் திரும்ப நடக்கும்பொழுது இது முற்றுக அலட்சியஞ் செய்யப்படும். எனவே, திருப்தி திருப்தியீனத்தின் ஏற்றத்துக்குத்தக செயல்களின் தொடர்பு நெருங்கியும் சுருங்கியுங் காணப்படும்.

2. அப்பியாச விதி: ( The Law of exercise ) ஒரு சந்தர்ப்பத்தில் ஏற்படுஞ் செயல்கள் அவை நிறைவேற்றப்பட்ட எண்தொகைக்கும், அவை பற்றேடு நடத்தப்பட்ட காலஅளவைக்குந் தக நெருங்கிய தொடர்புடையன.

ஊக்கம், பழக்கம், என்பன மிருகங்களிற் காணப்படுவன போன்றே மனிதரிலுங் காணப்படுகின்றன. பிறப்பின் மேற்படியை அடையவடைய கற்குமாற்றலுங் கூடுகின்றது. இன்னும் வளர்ந்த பருவத்தில் ஊக்கம் காலத்துக்கேற்க மாற்றப்படாமற் ருெழிற்படுஞ் சந்தர்ப்பங்களும் மிகக் குறைவே. இவ்வுண்மை மனிதனுக்கே மிகவும் பொருத்தமானதாகையால், ஊக்கம் மிருகத்துக்கேயன்றி மனிதனுக்குப் பொருத்தமானதன்றென்று கூறுவர். இது மிகப் பிழையானதொரு கூற்று. ஏனெனிற் கற்றல் ஊக்கத்தினேவுதலால் உண்டாவது. கூட்டிலடைபட்ட மிருகம் ஊக்கத்தினேவுதலாற்றன் அங்கு மிங்கு மலேந்து திரிகிறது. இப்படியாக அலேந்து திரியாவிட்டால் ஈற்றில் உண்மையான பாதையைக் கண்டுபிடித்தல் முடியாத காரியமாகும். இதைப்போலவே பிள்ளைகள் பேசப்பழகுகின்றனர். ஆரம்பகாலத்தில் பலவித சத்தத்தையும் பொருளின்றிப் பேசி ஈற்றிற் பேசப் பழகுகின்றனர். ஆகவே பலவித சத்தஞ் செய்தல் என்னும் ஊக்கத்தின் தொழிற்பாடின்றிப் பிள்ளைகள் பேசப் பழக முடியாதென்பது புலனும். இதைப்போலவே நாங்கள் எல்லாவித பழக்கங்களையுங் கற்கிறேம். பழக்கங்களெல்லாவற்றிலும் ஏதோ ஒருவித ஊக்கந் தொழிற்பட்டிருப்பதை யவதானிக்க முடியும். இவ்வூக்கம் முதலிற் சரியற்ற செயல்களைச் செய்ய ஏவி, ஆனல் விடாவூக்கத்தைக் கொடுத்து, ஈற்றில் உண்மையான விஷயங்களைக் கண்டுகொள்ள ஏவுகின்றது.

சாதாரணமாக யாவரும் ஊக்கமென்பது பிழையற்றதென்றும், இயற்கையான புத்திநுட்பமுள்ளதென்றும், மாற்றமுடியாததென்றும் பிழையாக எண்ணுவர். இது உண்மையிற் பிழையான நம்பிக்கையென்க. ஊக்கமென்பது சீர்திருந்திய நிலையில்லாதது; ஆனால், உடன்றொழிற்படக்கூடியது. சாதாரண சந்தர்ப்பங்களில் அதன் பயனைப் பெறலாம். ஆனால் இயற்கைக்கு விரோதமான செயல்களைச் செய்யும்போது பிழைப்படுத்திவிடக் கூடும். குஞ்சுகள் தாயோடு ஊக்கத்தாற் பின்செல்லும். தாயைப்போன்று இயங்கும் வேறெப்பொருளோடும் முன்னைய சுறுசுறுப்போடு பின் செல்லுவதை யவதானிக்கலாம்.

ஊக்கம் பிழையாகவுந் தொழிற்படுஞ் சர்தர்ப்பங்களுண்டு. உதாரணமாக, லொமெசுசா என்னும் பூச்சியின் உடன் பொரித்த புழுக்கள் தங்களை வளர்க்கும் எறும்புகளின் புழுக்களை உண்டு வளர்கின்றன. எனினும் லொமெசுசா புழுக்கள் அவ்வெறும்புகளால் அன்பாதரவோடு வளர்க்கப்படுகின்றன. இன்னும் தாங்கள் அப்புழுக்களை வளர்க்கும் முறை ஏற்றதன்றெனக்கண்டு அம்முறையையும் வசதிக்கேற்க மாற்றுகின்றன.

ஆசிரியர் செமன் என்பார், ஊக்கம் அநுபவத்தால் மாறுகின்றதென்பதைக் காட்ட ஒரு உதாரணங் கூறுகின்றனர். அதாவது வேட்டையாளர் மானைப்போற் சத்தஞ் செய்து அம்மிருகங்களைச் சுலபமாக வேட்டையாடுகின்றனர். அவர்கள் தங்களனுபவத்தில், மிருகங்களின் வயது ஏற ஏய்படுந்தன்மை குறைகிறதெனக் கண்டுள்ளனராம். இன்னும் வயது சென்ற மானை ஏய்க்கவேண்டின் மாற்றொலியின் தொனி மிகப் பொருத்தமாயிருக்கவேண்டுமாம்.

ஊக்கத்தின் இலட்சணங்கள் மிகப் பலவென்பதை உதாரண மூலங் காட்டலாம். ஆனால் அவற்றைப்பற்றிப் பொதுவாக யாவருமெண்ணு மெண்ணங்களுக்கு மாறாக ஐந்து காரியங்களை வற்புறுத்த வேண்டியதாகின்றது. அவை:—

1. ஊக்கத் தொழிலில், அதனாலெய்தும் சீவனப்பயனைப் பற்றிய பூர்வதரிசனம் வேண்டப்படுவதில்லை.

2. குறித்த பிராணியின் சாதாரண நிலையிலேயே மாத்திரம் இந்நோக்கத்தை நிறைவேற்றுதற்கு ஊக்கம் அமைவுடையது. பொதுவாகச் சித்திக்கு வேண்டிய அளவுக்குமேலே இது திட்டமாயிருப்பதுமில்லை.

3. ஊக்கத்தினாலே ஆரம்பிக்கப்படுந் தொழில்கள் அநுபவத்தினால் திறமை பெறுவது பெரும்பான்மை.

4. கற்கும் முறையிலே வேண்டப்படும் பரீட்சார்த்த யத்தனங்களுக்கு வேண்டிய தூண்டுதலை ஊக்கம் அளிக்குந் தன்மையது.

5. அரும்பும் பருவ ஊக்கங்கள் இலேசாக மாற்றியமைக்கப் படத்தக்கவை. பலவித சந்தர்ப்பங்களோடு இவை தொடர்புபடுத்தப் படத்தக்கனவாம்.

மேற்கூறிய இலட்சணங்களுள் முதலாவதொழிந்த ஏனையன புற அவதானத்தால் நிரூபிக்கப்படத்தக்கன. முதலாம் இலட்சணம் அப்படி நிரூபிக்கப்படத்தக்கதன்றெனினும், சாதாரண சந்தர்ப்பங்களில் அதனுண்மை யறியப்படுதலினால், அதனையும் உண்மையென எடுத்தாளலாம். உடன்பிறந்த பிள்ளைக்குத் தன் சீவனோபாயத்துக்கு உணவு வேண்டுமென்னும் அறிவு உண்டென்று எவர் கூறமுடியும். இன்னும் பட்சிகளுக்கு, ‘தாம் முட்டையிடுவது தம் இனத்தைப் பெருக்க’ என்ற அறிவுண்டென்று எவர் கூறுவர். ஆகவே, பெரும்பாலும் ஒருவருக்குச் சீவனப்பயனைக் கொடுக்கும் செயலை, முன்னறிவின்றிச் செய்யும்படி ஏவுங் கருவியே ஊக்கமென்று கூறலாம்.

---

“நம்முடைய குற்றங்கள் இவைகள் என்று நமக்குத் தெரிவித்து அவைகளை நீக்கி நடக்கும் நெறியை நமக்குப் போதிக்கின்றவர்களே நமக்கு உத்தம சிநேகிதர்கள்.”

“தரித்திரனாய் இருக்கும்போது திருத்தியடையாதவன், செல்வனாய போதும், திருத்தியடையான்; திருத்தியடையாமை மனக்குற்றமே அன்றிப் பொருட்குற்றம் அன்று.”

“உன்னால் உன் தாய்தந்தையருக்குக் கிடைத்த உபகாரமே, அதுகண்ட உன் பிள்ளைகளால், உனக்கும் கிடைக்கும்.”

“பாவம் செய்பவர்களை நன்கு மதிப்பவர்கள் இல்லையாயின், பாவம் செய்பவர்களும் இலர்; ஆதலால் பாவம் செய்பவர்களினும், அவர்களை நன்குமதிப்பவர்களே பெரும் பாவிகள்.”

“பகைவர், அயலோர், நட்பினர் என்னும் மூவகையோரிடத்தும், தருமத்தின் வழுவாமல், ஒப்ப நிற்றல் நடுவுநிலைமை எனப்படும்.”

—நாவலர்.

# திருவனந்தபுரம் சுந்தரம்பிள்ளையவர்கள் மொழிபெயர்ப்பின் சிறப்பு

(சோ. நடராசா)

பிற பாஷைகளில் எழுதப்பட்ட நூல்கள் பல தமிழ்ப்பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவைகளுள் ஒரு சிலவே சிறந்த நூல்களெனக் கற்றோரின் நன்கு மதிப்பைப் பெற்றிருக்கின்றன. ஏனெனில் ஒரு பாஷையில் எழுதப்பட்ட நூலை மற்றொருபாஷையில் மொழிபெயர்ப்பது ஓர் இலகுவான காரியமன்று. ஓர் தேசத்திலுள்ள காட்சியையாவது ஓர் இயற்கை வர்ணனையை யாவது ஓர் புலவன் ஒரு பாஷையில் கூறியபடி மற்றொரு பாஷையில் கூறுவது மிகவுங் கஷ்டம். மொழி பெயர்க்கப்பட்டவைகள் அப்பாஷையாளருக்கு விளங்கும்படியும் அவர்களால் புகழப்படும்படியுங் கூறுதல் அதனிலும் மகா கஷ்டம். இக்காரணம்பற்றியே மொழிபெயர்க்கப்பட்ட நூல்களிற் பல முதல் நூல்களுக்கு என்றும் அழியா வசையைத் தருகின்றன. வசன நூல்களையே மொழிபெயர்ப்பது மகா கஷ்டத்தைக் கொடுக்குமாயின் செய்யுள் நூல்களைச் செய்யுளில் மொழிபெயர்ப்பதைப்பற்றிப் பேசவும் வேண்டுமோ.

இப்பொழுது மொழிபெயர்க்கப்பட்ட நூல்களுள் தமிழ் உலகத்தின்கண் நிலைபெற்று முன்னிற்பது சுந்தரம்பிள்ளையவர்களின் சிவகாமி சரிதை. இஃது ஆங்கில மெய்ப்புலவரான 'ஒலிவர் கோல்ட்சிமித்' (Oliver Goldsmith) என்பவரால் தம்முடைய சிறந்த நூலாகிய 'வேக் பீல்ட் பாதிரியார்' (Vicar of Wakefield) என்னும் நூலின்கண் பொதியப்பெற்றுள்ள ஓர் செய்யுட்பகுதியின் மொழிபெயர்ப்பு. இதை ஆங்கிலப்புலவரான 'கோல்ட்சிமித்' எவ்வளவழகாகத் தம் நாவலின்கண் புகுத்தியிருக்கின்றாரோ அவ்வளவழகாகச் சுந்தரம்பிள்ளையவர்களும் தம்முடைய ஆங்கிலரீதியிலெழுதப்பட்ட 'மனோன்மணீயம்' என்னும் நாடகநூலின்கண் புகுத்தியிருக்கின்றார்.

சிவகாமி சரிதையின் சிறப்புக்குக் காரணமென்னவென்பதைச் சற்று ஆராய்வாம். இதிற் சில பகுதிகளை அப்படியே சொல்லுக்குச் சொல்லாக சந்தங் கொஞ்சமேனுங் குறையாதபடியும் ஆங்கிலப் புலவரது கருத்துச் சற்றும் மாறாதபடியும் தமிழ் நடைக்கும் பிறழாமலும் மொழிபெயர்த்திருக்கின்றனர். சில பகுதிகளின் கருத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு அக்கருத்தைத் தமிழ்நடையி லமைத்திருக்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் ஆங்கிலக் கவி சில இயற்கைக் குணங்களை யமைக்காத விடத்தும் சுந்தரம்பிள்ளையவர்கள் தம் புலமையின் வாயிலாகச் சில வியற்கைக் குணங்களை வருவித்து மிருக்கின்றனர். இன்னோரன்ன சிறப்புக்கள் இன்னும் பலவுள.

கீழ்க்காணும் பகுதிகள் சொல்லுக்குச் சொல்லாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன.

" Alas! the joys that fortune brings
Are trifling and decay;
And those who prize the paltry things
More trifling still than they."

ஐயோவிவ் வையகத்தி லமைந்தசுக மனைத்தும்
அழலாலிங் கெழுந்தடங்கு நிழலாக நினையாய்
கையாரும் பொருளென்னக் கருதிமணல் வகையைக்
காப்பதெலா மிலவுகிளி காத்தலினும் வறிதே.

" The bashful look, the rising breast
Alternate spread alarms
The lovely stranger stands confess'd
A maid in all her charms "

கூசுமுக நாணமொடு கோணியெழில் வீச
குழற்பாரஞ் சரிந்துசடைக் கோலமஃ தொழிக்கும்
வீசுலையின் மூக்கெனவே விம்மியவெய் துயிர்ப்பு
வீங்கவெழு கொங்கைபுனை வேடமுழு தழிக்கும்

And, " Ah! forgive a stranger rude —
A wretch forlorn," she cried:
" Whose feet unhallow'd thus intrude
Where heaven and you reside."

இவ்விதந்தன் மெய்விளங்க இருந்தமக ளெழுந்தே
யிருடிபதந் தலைவணங்கி யிம்மொழியங் கியம்பும்
தெய்வமொடு நீவசிக்குந் திருக்கோயில் புகுந்த
தீவினையேன் செய்தபிழை செமித்தருள்வை முனியே!

கீழ்க்காணும் பகுதிகளின் கருத்தை மாத்திரம் எடுத்து அக்கருத்தைத் தமிழ்நடையில் அமைத்திருக்கின்றார்.

“ Turn, gentle Hermit of the dale,
And guide my lonely way
To where yon taper cheers the vale
With hospitable ray.”

வாழியநின் மலரடிகள்! மௌனதவ முனிவ!
மனமிரங்கி யருள்புரிந்தோர் வார்த்தையெனக் கீயிற்
பாழடவி யதிற்சுழன்று பாதைவிடுத் தலையும்
பாவியொரு வினையளித்த பலனுறுவை பெரிதே.

“ And what is friendship but a name,
A charm that lulls to sleep;
A shade that follows wealth or fame,
But leaves the wretch to weep?”

“ And love is still an emptier sound
The modern fair one's jest;
On earth unseen, or only tound
To warm t'he turtle's nest.”

நண்பருற வினர்கள்நமை நாடியுற வாடல்
நறுநெயுறு குடத்தெறும்பு நண்ணலென எண்ணாய்!
பெண்களகக் காதலெல்லாம் பேசுமுயற் கொம்பே!
பெருகபட மிடுகலன்றே பிறங்குமவ ருடலம்!

இனிச் சில பகுதிகளைச் சுந்தரம்பிள்ளையவர்கள் வருவித்திருக்கின்றார்கள். சிவகாமி தன் சரிதையைச் சிதம்பரனுக்குச் சொல்லுகின்றாள். சிதம்பரனுக்கு இவள்தான் தன் காதலி என்று தெரிகின்றது. உடனே சிதம்பரனுக்குக் கண்ணீர்வடியுமல்லவா? ஆனால் அதைச் சிதம்பரன் மறைக்க முயல்வான். இப்பகுதியை ஆங்கிலக்கவி அலட்சியம் செய்திருந்தபோதிலும் சுந்தரம்பிள்ளையவர்கள் இப்பகுதியை நன்கு பின்காணும் பாட்டால் அமைத்திருக்கின்றார்.

உரைத்தமொழி கேட்டிருடி யுடல்புளக மூடி
யூறிவிழி நீர்வதன மொழுகவஃ தொளிக்க
எரிக்கவிற கெடுப்பவன்போ லெழுந்துநடந் திருந்தான்
இளம்பிடியுந் தன்கதையை யெடுத்தனள்முன் தொடுத்தே.

இதைவிடச் சுந்தரம்பிள்ளையவர்கள் தமிழ்நடைக்கேற்ப ஓர் வாழ்த்துப்பாவும் பாடியிருக்கின்றனர்.

சுந்தரம்பிள்ளையவர்களின் மொழிபெயர்ப்பின் சிறப்பான அம்சங்கள் வேறும் பலவுண்டு. அவர் ஆங்கில நாமங்களையெல்லாம் தமிழ் நாமங்களாக மாற்றியிருக்கின்றார். முதல் நூலிற் காணப்படும் Tyne என்பதைக் காவிரிப்பூம்பட்டின மென்றும் Edwin என்பதைச் சிதம்பரன் என்றும் Angelina என்பதைச் சிவகாமி என்றும் மொழிபெயர்த்திருக்கின்றார்.

இதைவிட ஆங்கில பழக்க வழக்கங்களைத் தமிழ்ப் பழக்க வழக்கங்களாக மாற்றியிருக்கின்றார். ஆங்கிலப் பெண் ஒருத்தி தனது நாயகனுடைய நாமத்தைக் கூறச் சற்றுங் கூசாள். ஆனால் ஒரு தமிழ்ப் பெண்ணோ ஒருபோதும் தன்னுடைய நாயகனுடைய நாமத்தைக் கூறமாட்டாள். ஆகவே,

'Amongst the rest young Edwin bowed' என்பதை அவருடைய திருநாமம் அறைவேனோ அடிகாள்? என்று மொழிபெயர்த்திருக்கின்றனர்.

இப்படியான அரும்பெரும் பெருமையுடையது சுந்தரம்பிள்ளையவர்களின் மொழிபெயர்ப்பு. அது வாசித்துச் சுவைக்கத்தக்கதேயன்றி வாயாற் பெருமைபாராட்டத் தக்கதன்று. தாங்கள் மாத்திரம் பிறபாஷையில் எழுதப்பட்ட இலக்கியங்களைச் சுவைத்தலோடு நில்லாது எல்லோருக்கும் பயன்படச் செய்வதே ஆங்கிலமும் தமிழுங் கற்றவர்களுடைய கடனாகும்.

---

"சரீர வருத்தத்துக்கு அஞ்சிப் பிற தொழில்களைச் செய்து பொருள் பெற்றும் உணவின்பொருட்டு வேளாளரிடத்துச் செல்லல் வேண்டுதலாலும், பொய் முதலிய பாவம் கலவாமையாலும், வேளாண்மைக்கு நிகராவது ஒன்றும் இல்லை."

"செல்வம் முதலியவற்றினாலே செருக்கடைந்து முன் உன்னோடு பயின்ற சிநேகிதரை மறந்துவிடாதே."

"பிறர் பொருளானது, உடல் உயிர் இரண்டற்கும் ஊறு செய்தலால், உடல் ஒன்றிற்கே ஊறு செய்யும் விஷத்தினும், கொடிதாம்."

"உண்ணும் வகையறிந்து உண்ணுதலும், உண்டபின் நூறடி உலாவுதலும், பகலிலே நித்திரை செய்யாமையும், வாரந்தோறும் எண்ணெய் இட்டுத் தலை முழுகுதலும் உளவாயின், உடம்பிலே நோய் உண்டாகாது"

—நாவலர்.

# டோல்ரன் முறை

(க. வைரமுத்து)

சாதாரணமாக நாம் கையாண்டுவரும் வகுப்புமுறைக்கு முற்றிலும் மாறான ஓர் நவீனமுறை சிறிதுகாலத்திற்குமுன் முதன்முதல் அமெரிக்காவில் கையாளப்பட்டது. இந்நவீனமுறையே டோல்ரன் முறை எனப்படும். ஆங்கு இம்முறை உயர்தரப் பாடசாலைகளிலும், சில பிரதம பாடசாலைகளிலும் கையாளப்பட்டுவந்ததன் பலனாகப் பல நன்மைகள் விளைந்திருக்கின்றன என்பது அநேக கல்வி நிபுணர் துணிபு. கல்விமுறைகள் காலத்துக்குக்காலம் தோன்றி மறைதல் இயல்பு. எம்முறைதானும் நெடுங்காலத்திற் கொருமாற்றமுமின்றி அங்கீகாரம் பெற்றதில்லை. “பழையன கழிதலும் புதியன புகுதலும்” என்ற விதிப்படி ஒருமுறை ஒரு சிறிதுகாலத்திற் காதிக்கம்பெற்று விளங்கும். பின் அது பிசகென விலக்கப்பட்டு வேறுமுறை கையாளப்படும். ஆனால் இவ் டோல்ரன்முறை ஏனைய முறைகள்போலல்லாமல் அதிககாலமாக மாற்றமின்றி அங்கீகாரம்பெற்றுவருகிறது. இது ஒவ்வோர் மாணவனையும் தன் முன்னேற்றத்திற்கும் வேலைக்கும் தானே பொறுப்பேற்றுக்கொள்ளச் செய்வதாகிய கல்வியின் முடிந்த நோக்கை நிறைவேற்றுவதினாற்போலும்.

ஓர் வகுப்பிலுள்ள ஒவ்வோர் மாணவனும் ஏறக்குறைய ஒரே அளவான வேலை செய்தல்கூடும். அதனால் ஒவ்வொருவரும் ஒரே அளவான பயனையே யடைகின்றனர் என்பது பொது அபிப்பிராயம். ஆனால் இக்கொள்கை தவறானதென்பது அநுபவ சிந்தாந்தம். சாதாரணமாகக் கையாளப்பட்டுவரும் வகுப்புமுறையில் உண்மையில் நடப்பதென்னெனில் விசேட வல்லபமுடைய மாணவர், கற்றலில் ஓர் குறித்த படியை அடைய ஏனைய மந்தர்கள் அப்படியை அடையுமாற்றல் போதாதிடர்ப்படுகிறார்கள். இன்னும் ஒருவகுப்பிலுள்ள எல்லா மாணவரும் ஒரு குறித்த பாடத்தைப் படிப்பதில் ஒரே அளவான நேரத்தைச் செலவழித்தால் அவர்கள் சுமார் ஒரே அளவான தேர்ச்சியையே பெறுகிறார்கள் என்றும் அவர்களெல்லாருக்கும் அப்பாடத்தில் ஒரே அளவான கஷ்டமே ஏற்படுமென்றும் பொது அபிப்பிராயம். உண்மையிலிது தவறு. கணித பாடத்தில் விசேட தேர்ச்சிகாட்டும் ஓர் மாணவன் இலக்கிய பாடத்தில் மிகக் குறைவாகக் காணப்படலாம். உண்மையைக் கூறுமிடத்து ஒவ்வோர் பாடத்திலும் விசேட ஆற்ற

லுடையவர்களும் மந்தர்களுமுண்டு. எனவே ஓர் குறித்த பாடத்தில் குறித்த பகுதியைக் கற்றற்கு எல்லா மாணவருக்கும் ஒரே அளவு நேரம் போதியதன்று. நேரம் அவரவர் ஆற்றலுக்கும் விஷய ஞானத் திற்கும் தக வேறுபடும். இனிச் சாதாரண வகுப்புமுறையில் பாட சாலைக் கொழுங்காக வரத்தவறும் மாணவர் ஏனையோரளவு தேர்ச்சி பெறுதல் முடியாது வகுப்பின் பின்னணியில் நிற்க நேரிடுவது சகசமே. வகுப்பேற்றம் பெறுதற் கேற்றளவு தேர்ச்சியடைந்த மாணவர்கள் ஏனையோருக்காக, முன்செய்த வேலையையே திருப்பியுஞ் செய்வதினல் வீண்காலம் கழிக்க நேரிடும்.

இப்போதைய வகுப்பு முறைகளைப்பற்றி யாராய்ச்சி செய்ததி லிருந்து வரவர மாணவர் தங்கள் பிற்கால அபிவிருத்தியின் பொறுப்பு முழுவதையும் ஆசிரியர் தலைமேற் சுமத்திவிட்டு ஊட்டல் முறையிற் கல்வி கற்பதையே பெரிதும் நாடி நிற்கிறுர்கள் என்பது பல கல்வி நிபுணரது துணிபு. பாடசாலையில் மாணவர் தங்கள் முன்னேற்றத் திற்குத் தாங்களே உத்தரவாதிகள் என்னும் உணர்ச்சியையும் பொறுப் பேற்கும் தன்மையையும் இழக்க நேர்ந்ததே இதன்பலன்.

இதுகாறுங் கூறிய குறைகளை நிவிர்த்திக்கும் நோக்கமாகவே டோல்ரன்முறை எழுந்தது. இம்முறை தன் நோக்கத்தை நிறைவேற்று கின்றதா? "ஆம் நிறைவேற்றுகின்றது" என இதை அங்கீகரிக்கும் கட்சியார் கூறுவர். இது சாதாரண வழக்கிலிருக்கும் முறையில் எத் துணை சிறந்தது; எவ்வகையிற் சிறந்ததென்பது காலகதியில் அனு பவ வாயிலாகவும் பரிசோதனை மூலமாகவுமே அறியப்படலாம். அஃதெவ்வாறாயினும் மாணவனையே அவன் தேர்ச்சிக்குப் பொறுப் பாளியாகவிடின், அவன் தன்னுடைய வேலையைத் தெரிந்துகொள்ளு வதற்கும் அதை நிறைவேற்றுவதற்கு வேண்டிய உபகரணங்களைச் சேகரித்துக் கையாடுதற்கும், அதைச் செய்துமுடிக்கத் தனக்குத் தேவையெனக் காணும் காலத்தை வரையறுத்தற்கும் தன்னுடைய வேலை முடித்தற்கு அத்தியாவசியமென்று காணப்படுஞ் சந்தர்ப்பங் களில் பிறநூல்களிலிருந்தேனும் ஆசிரியன் மூலமேனும் வேண்டிய உதவியைப் பெறுதற்கும் அவனுக்குப் பூரண சுயாதீனம் கொடு படல்வேண்டும்.

பழைய ஆசிரியர்கட்கு இம்முறை முற்றிலும் புரட்சியான ஓர் முறையாகவே காணப்படும். ஆனுற் பாலர் வகுப்புகளில் கையாண்டு வரப்பெறும் தனிமுறையையே மேல் வகுப்புகளிலுங் கையாளுவதே யொழிய இதுவோர் நூதன முறையன்றெனஅவர்கட்குச் சமாதா

னம் கூறிவிடலாம். தனிமுறையைக் கையாடுவதினால் சிட்டாசார சம்பந்தமாகவோ, மாணவரை வேலையிற் கவர்ச்சிகொள்ளச் செய்வதிலோ, ஒருவிதமான கஷ்டமும் ஏற்படப்போவதில்லை. மாணவர் பிரத்தியேகமான முறையிற் படித்துவருதல்போல இம்முறையிலும் படித்துப் பழகிவிடுவர்.

## இம்முறையின் இலாபம் :—

I. ஒவ்வோர் மாணவனும் தன் வல்லபங்கட்குஞ் சக்திக்கு மேற்க, தன் சுபாவ கதியிற் கற்றுத் தேறுகின்றான்.

II. அவன் தேர்ச்சி தன் வேலையைத் தானே செய்வதினாலும் கற்கவேண்டியவற்றைத் தானாகவே கற்கவேண்டுவதனாலும், தன் சொந்த அனுபவத்தினாலும் பெற்ற பேறாகிறது. எனவே அவன் கல்வி நிலையிலெழுத்து.

III. மாணவன் தன் வேலைகளையும் பரிசோதனைகளையும் தானாகவே செய்யவேண்டுமென்றும், எடுத்துக்கொண்ட விடயசம்பந்தமாக, பிறநூல்களிற் பெறவேண்டியவற்றைத் தானே தேடிப் பெறவேண்டுமென்றும் இம்முறை வற்புறுத்தி நிற்றலின் மாணவன் தனக்கேற்படும் முட்டைத் தானாகவே யறுத்து அதன்பயனாகப் பெற்ற அநுபவமூலம் பக்குவமடைகிறான்.

IV. மாணவன் தனக்குக் கஷ்டமெனத் தோன்றும் பாடங்கட்கு அதிக நேரமும் ஏனைய பாடங்கட்குக் குறைந்த நேரமுமாகத் தன் வல்லபங்கட்கேற்ப நேரத்தைப் பங்கிட்டு வேலைசெய்தல் கூடும்.

V. மாணவன் ஓர் குறித்த வேலையைக் குறித்த காலத்திற்றான் செய்துமுடிப்பதாக ஒப்பந்தஞ் செய்துகொள்வதினால் சுவையுள்ள பகுதியும் சுவையற்ற பகுதியுமாகக் கலந்து கிடக்கும் தன்வேலையை விருப்பு வெறுப்பு நோக்காது செய்து முடிக்கவேண்டியவனாகிறான்.

VI. இதனால் மாணவன் பொறுப்பேற்கவும் தன்னுடைய இயற்கையாற்றல்களைச் சித்திபெய்தும் வழிகளில் உபயோகிக்கவும், வேலையின் கருத்து, அதன் கௌரவம், தன்னைத்தான் கற்பிப்பதனாலாம் சந்தோஷம் ஆதியவற்றை யறியவும் பயிற்றப்படுகின்றான்.

VII. பாடசாலைக்குச் சிறிது காலம் வராதிருந்த மாணவன் திரும்பி வந்ததும் தான் முன்பு விட்டபகுதியிலிருந்து தொடங்கி தன் ஒப்பந்தத்தை நிறைவேற்றுகிறான். பாடசாலைக்குப் புதிதாக வந்த மாணவன் ஒவ்வொரு பாடத்திலும், தன் முன்னறிவுக்கேற்ற பகுதியிலிருந்து தொடங்கிப் படிக்கிறான்.

VIII. இம்முறை பாடவிதானத்திற்கு ஒரு பரந்த நோக்கைக் கொடுக்கிறது. அத்துடன் சாதாரண முறையிலும் பார்க்க, இம்முறையில் உபகரணச் செலவும் சுருக்கம்.

IX. கட்டாய வீட்டுவேலை தேவையற்றதாகின்றது. அப்படி வீட்டுவேலை கொடுக்கவுங்கூடாது. ஏனெனில் மாணவன் தனக்குக் கஷ்டமென்று காணும் பாடங்கட் கந்நேரத்தை யுபயோகிக்கலாம்.

X. மாணவனுக்குப் பாடசாலைச் சீவியத்தைப்பற்றிய அபிப்பிராயம் முற்றிலும் வேறுபடுகிறது. எனவே சிட்டாசார விசாரம் அறவே நீங்கும். அவரவர் சிறப்பான நாட்டங்களையும் ஆற்றல்களையும் பொருட்படுத்தாது எல்லாரையும் ஓர் நியதியான பாடவிதானத்திற் கமைந்து கற்கச் செய்வது கொடுங்கோன்மை யன்றோ! இப்பொழுது நடத்தப்பட்டு வரும் பரீட்சைகள் ஒருவன் ஆற்றலை உள்ளபடி எடுத்துக்காட்டக் கூடியன என்பது ஐயத்திற் கிடனாகும். பாடசாலைகளில் முன்னையிலும் மாணவர் தொகை வரவர அதிகரிப்பதினால் பண்டைக் கல்விமுறைகள் தம் நோக்கத்தை நிறைவேற்றாமற் போகின்றன. இப்போது மாத்திரமல்ல எப்போதும் இம்முறைகளில் இக்குற்றம் இருந்துதான் வருகின்றதென்று சில கல்வி நிபுணர் அபிப்பிராயப் படுகின்றனர். இம்முறைகள், பெரும்பகுதியான மாணவரை உலகவாழ்க்கைக் காயத்தஞ் செய்யத், தவறிவிடுகின்றன. இவர்கள் பாடசாலையிலிருந்து வெளியேறும்போது சம்பாதித்துச் செல்லுமறிவு, திருப்தியாகக் காணப்படாமையாலன்றோ வாழ்க்கையில் இவர்களோடு சம்பந்தப்படும் பெரும் பகுதியினர் இப்போதைய கல்வி முறைகளைக் கண்டிக்க நேருகின்றது. ஆனால் இந்நவீன முறையைக் கையாண்டு கல்வி கற்பிப்பதால் மேற்கூறிய குறைகள் நிவிர்த்தியாதல் கூடும். இம்முறையைத் தொடங்கிய அமெரிக்க வாசியாகிய பாக் ஹேஸ்ற் (Park hurst) அம்மாள் கூறியாங்கு, "இது ஒரு படி முன்னேற்றம்;" இனி இதற்கப்பாற் செல்வது ஏனைய பரிசோதகர்கள் கடன்.

இம்முறையில் நடத்தப்படும் பாடசாலைகளிற் குறைந்தது வகுப்பிற்கோர் அறையாவது வகுக்கவேண்டும். இவற்றுடன் பிரயோக வேலைக்கென ஓர் பிரத்தியேக அறையும் இருத்தல் நன்று. வகுப்பறைகள் பரிசோதனைச் சாலைகளாயும் ஒவ்வோர் அறையிலும் ஒவ்வோர் பாடமே நடப்பதாயும் இருத்தல் நலம். வேண்டுமானால் இலக்கியம் போன்ற பாடங்களானாற் கூடியது இரண்டு பாடங்கள்

ஓர் வகுப்பறையில் நடைபெறலாம். அவ்வப்பாட அறையில் அதற்குத் தேவையான உபகரணங்கள் எல்லாமிருக்கவேண்டும்.

ஒவ்வோர் பாடத்திலும், ஒருவாரத்திற்குள்ளேனும், இருவாரத்திற்குள்ளேனும், அன்றேல் ஒருமாதத்திற்குள்ளேனும் செய்து முடிக்க வேண்டிய வேலை இவ்வளவெனக் கடுதாசி அட்டைகளிலோ கடுதாசியிலோ பாடத்திட்டமெழுதி, அவ்வப் பாடவறையிற் றொங்க விடவேண்டும். இதில், எம்முறையில் அப்பாடத்தைப் படிப்பிக்கலாம், பாடப் புத்தகங்களில் எவ்வளவு வாசிக்கப்படவேண்டும், அப்பாட சம்பந்தமாக வாசிக்கவேண்டிய பிறநூல்கள் இவை என்ற விபரங்களும், மாணவ னதிற் றுனடைந்த தேர்ச்சியைக் காட்டுதற்கேற்ற பரீக்ஷை வினுக்களும் குறிக்கப்பட்டிருக்கும். இப்படி ஓர் குறித்த காலத்திற்குக் குறித்துவிடும் வேலை ஒப்பந்த வேலை எனப்படும்.

வழமையான முறையில் நடத்தப்படும் பாடசாலை நேரசூசிக்கும் இம்முறையில் நடத்தப்படும் பாடசாலை நேரசூசிக்கும் அதிக பேத முண்டு. காலையிலொரு பாடநேரந்தவிர எஞ்சிய நேரமுழுவதும் நேரசூசியில் வெறுமனே விடப்படும். இவ்வொரு பாடநேரங் கலந்து யோசனை செய்ய விடுபடும். எஞ்சிய நேரத்தில் மாணவர், தாந்தாம் விரும்பிய பாடங்களை அவ்வவற்றிற்கென நியமிக்கப்பட்ட பாட அறைகளிற் படிப்பர். ஓர் கூட்டம் மாணவர் வேலை செய்யப்புகும் ஓர் பாட அறையில் முன்னதாகவே வேறு கூட்டம் சென்று வேலை செய்து கொண்டிருப்பின் இவர் வேறோர் பாட அறையை நாடுவர். அக்காலைப் பாடத்திட்டம் அதற்கேற்ப மாற்றப்படும். மாணவர் குறிக்கப்பட்ட வேலையைச் செய்வர். ஒருபாட அறையிலுள்ள ஒவ்வொரு மாணவனுந் தனக்கெனக் குறிக்கப்பட்ட வேலையி னோர்பாகத்தைச் செய்து முடித்ததும் பாட ஆசிரியருக் கறிவிப்பன். ஆசிரியர் அதற்கென ஆக்கப்பட்ட ஓர் கணனரேகைப் படத்தைக் காட்டி அவன் அதிற் றன்றேர்ச்சியை எவ்வாறு குறிக்கவேண்டு மென்பதையுங் காட்டுவர். இவ்வாறு படத்திற் குறித்ததும், மாணவன் வேறுபாடவறையில் வேறு பாடம் படித்தற்குச் சுயாதீனமுடையனுகின்றுன். இங்கும் முன் நிகழ்ந்தவாறே நிகழும். பாடங்களிலேற்படுங் கஷ்டங்களைப்பற்றி ஆசிரியரும் மாணவருங் கலந்து தர்க்கிக்கும் போதும் வேலையின் றேர்ச்சியைக் காட்டும் கணனரேகா படங்கள் பரிசோதிக்கப்படும்போதும் பாடவறைகள் வகுப்பறைகளாக மாறும். பின்னேரம் படிப்பதற்கென நேரசூசியிற் பாடநேரங்கள் வகுக்கப்பட்டிருக்கும். ஒவ்வோர் மாணவனுங் குறிக்கப்பட்ட காலத்திற்குட் டன்

ஒப்பந்தத்தைப் பூரணமாக நிறைவேற்றக் கடமைப்பட்டவனுகிறுன். ஒவ்வோர் பாட ஆசிரியரும், அவ்வப்பாடத்திற் றனித்தனி, ஒவ்வொரு மாணவனுங் குறித்த ஒருகாலத்தில் அடைந்திருக்குந் தேர்ச்சியைக் காட்டுங் கணனரேகாபடம் வைத்திருப்பர். இதுவே இம்முறையிற் பிரதானஞ் செய்யப்படவேண்டியது.

இம்முறையைக் கையாளுவதினுல் ஆசிரியரது உத்தியோகத்தின் கௌரவத்திற்கேனும், அவர் அதிகாரத்திற்கேனும் எவ்வித பங்கமும் ஏற்படாது. ஆனுல் மாணவன் சித்தத்திற்குக் குறுக்கிட்டு நின்று அவனைத் தொழிற்படுத்துவதற்குப் பதிலாக அதற்குப் பின்னின்று தொழிற்படுத்தியும் மாணவன் ஒத்துழைப்பை வேண்டிநின்று அவனுக்கவன் வேலையில் ஒழுங்கான நாட்டத்தை யுண்டுபண்ணியும் அவனை நடத்துகிறுர். வேலையை அவரவர் தராதரத்திற்குத் தக, ஒழுங்கு படுத்திக் குறித்து விடுவதும், அவர்களடைந்த தேர்ச்சியை அட்டவணைப்படுத்திக் குறித்துக்கொள்வதுமே, இவர் பிரதானவேலை. ஒரு பாடசாலையி லிம்முறையைப் பூரண அநுசரணைக்குக் கொண்டுவர விரும்பின் அப்பாடசாலையின் இப்போதைய ஏற்பாடுகள் எல்லாம், முற்றுய் வேறுபட அமைபடல்வேண்டும். ஏனெனிற் பழைய முறையில் வகுப்பே பிரதான அம்சமாக இடம்பெற்று விளங்க இம்முறையிற் பாடமே பிரதான இடம் பெறுகிறது. ஒவ்வோர் பாடத்துக்கும் தனித்தனி ஒவ்வோர் அறை யுபயோகிக்கக்கூடிய கட்டட வசதியும் பாடமொவ்வொன்றிற்கும் அததில் விசேட ஆற்றல்பெற்ற ஆசிரியரு மிருப்பின் இம்முறையிற் பாடசாலையை எவ்வாறு நடாத்தலாம் என்ற பிரச்சினையே இல்லை. இருபாடங்கட்கென ஒரு அறைவிடப் படக்கூடியதான கட்டடவசதி யிருத்தலே போதுமானது. இம்முறை அனுசரிக்கப்பட்ட சில பிரதம பாடசாலைகளில் மேல்வகுப்புகளில் மாத்திரம் கையாளப்பட்டது. கீழ்வகுப்புகளிலு மேனிதைக் கையாள லாகாது? அவற்றிற்கே இது சிறந்தது. அதனினும் ஒரு ஆசிரியர், அல்லது இருவர் முழுப்பாடசாலையையும், நடத்தும் பாடசாலைகட்கு வெகு பொருத்தமானது. இங்கிலாந்தில் மேலே குறிக்கப்பட்ட பாடசாலைகள்போன்ற சில பாடசாலைகளி லிம்முறையைப் பின்பற்றியதாலதிக தேர்ச்சிகாணப்பட்டது. மேற்கூறிய பாடசாலைகளில் ஒன்றில், பாலர்வகுப்பு மாணவர் தொடக்கம், உயர்தர கனிஷ்ட சிரேஷ்ட மாணவ ரீறுகப் படித்தனர். பாலர்வகுப்புகளிற் றனிமுறையிற் கல்வி கற்பித்ததனுல் அவ்வகுப்புகள் வெகு தேர்ச்சி காட்டின. மேல் வகுப்புகளில் வழக்கமான முறையிற் கல்வி கற்பிக்கப்பட்டது. கல்விமுறையிலேற்பட்ட வித்தியாசத்தின் பயனுக இரு பிரிவினர்க்குமிடையே

அதிக வித்தியாசங் காணப்பட்டது. இவ்வித்தியாசத்தை ஒழித்தற் பொருட்டு டோல்ரன் முறையைத் தழுவிய வோர்முறை பின்பற்றப் பட்டது. அம்முறை பின்வருமாறு படிமுறையாக வெகு கவன மெடுத்து ஒழுங்குசெய்யப்பட்ட பாடத்திட்டமும், அவற்றைப்பற்றிய குறிப்புகளும் கடுதாசியட்டைகளி லெழுதப்பட்டிருக்கும். அவை பெட்டிகளிலேனுஞ் சுவரில் அதற்கென அமைக்கப்பட்டிருக்குந் தட்டு களிலேனும் மாணவருக் கெட்டக்கூடியதாக வைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு பாடத்தின் திட்டமும், ஒவ்வோர் நிற அட்டைகளில் எழுதப்பட்டிருக்கும். உதாரணமாகச் சிவப்புநிற வட்டைகள் கணிதத் திற்கும் ; பச்சை சரித்திரத்திற்குமென வைத்துக்கொளளலாம். எனவே மாணவர் இன்னின்ன பாடத்திற்குரிய அட்டைகள் இவையிவை யென எளிதிற் கண்டுகொள்வர். அட்டைகளிற் குறிக்கப்பட்ட வேலை நிர்ணயமாக இருக்கும். அதாவது இன்னின்ன பாடப்புத்தகங்களி லித்தனை யித்தனை பக்கங்கள்; இன்னின்ன உபகரணங்கள் உப யோகிக்கப்படவேண்டும்; விடய சம்பந்தமாக வாசிக்கப்பட வேண்டிய நூல்க ளிவை; மூளையை யுபயோகித்து விடைஇறுக்கவேண் டிய வினுக்க ளிவை; என்று எல்லாம் குறிக்கப்பட்டிருக்கும். பாடப் புத்தகங்களை யுபயோகிப்பதிலும், இவ் அட்டைகளை யுபயோகிப்பதனு லதிக லாபமுண்டு. செலவு சுருக்கம். நீடித்தகாலம் உபயோகத்தி லிருக்கும். சேமித்து வைத்தற்குக் குறைந்த இடம் போதும். ஆசிரி யர் இவற்றைத் தன்தேவை நோக்கி வெவ்வேறு வகுப்புகட் கேற்பத் திருத்தி யமைத்துக் கொளளலாம். இம்முறையில் மாணவர் மாட்டுத் தேவையான ஒத்துழைப்பையும் ஐக்கியத்தையும் பெறுதற்கும் எப் போதும் சமரசமாகவும் ஏகசித்தத்துடனும் மாணவர் வேலைசெய்தற் கும் பாடங்கள் மாறிமாறி வருந் நேரசூசி ( Rotatory time table ) உபயோகிக்கப்படும். இன்னும் இவ்வித நேரசூசியை உபயோகிப்பத ஞற் பல மாணவர்கட்கும் ஏககாலத்தில் ஒரு பாட அட்டைகள் தேவைப்படுதற்கும் மாணவன் ஒரேபாடத்தில் மிதமிஞ்சிய நேரத் தைச் செலவழித்தற்கும், சந்தர்ப்பம் ஏற்படாது. ஒரு வகுப்பு 6 பிரிவுகளாகப் பிரிக்கப்படும், ஒவ்வொரு பிரிவு மோர் குறித்த நேரத் தில் வெவ்வேறு பாடங்களில் ஈடுபடக்கூடியதாகவும் ஒருவாரத்தில் ஓர் குறித்த அளவான மணித்தியாலங்களே ஈடுபடக்கூடியதாகவும் முறைமாறி வரக்கூடியதாக, நேரசூசி அமைக்கப்படும். ஒவ்வொரு நாளும் இரு பாடநேரங்கள் எல்லோரும் ஒருங்கு சேர்ந்து படித்தற் கென விடப்படும். இப்பாடநேரங்களி லெழுத்துவேலை நடைபெறுவ தில்லை. முன்னேரத்திற் றனிவேலைமுறையிற் படித்த பாடங்களை

ஒட்டிய சில மேலதிகமான விஷயங்களை ஆசிரியர் கற்பிப்பர். இது பொதுப்படப் பிரசங்கமுறையாகவே நடைபெறும். இரண்டு பாட நேரங்களிற் சங்கீதம், சித்திரம், சிரமப்பயிற்சி, கைப்பணி முதலிய பாடங்கள் நடக்கும். இவைகளுங் கூட்டுமுறையிலேயே நடைபெறும். ஒருவாரத்திற் பத்து மணித்தியாலம் தனிவேலைக்கும் ஒன்பது மணித்தியாலம் கூட்டுவேலைக்கும் எழு மணித்தியாலஞ் சமயபாடத்துக்கும், ஓய்வுநேரத்துக்குமாகப் பங்கிடப்படும்.

இங்கு கவனிக்கப்படவேண்டிய தென்னவெனில், பிரதம பாடசாலைகளில் டோல்ரன் முறையைத் தழுவிக் கல்விபயிற்றற்குக் கையாளப்பட்டுவரும், முறைகள் நியதியானவையல்ல. பரிசோதனைகளாகவே கணிக்கப்படவேண்டும். காலகதியில் அநுபவத்தின் பயனாக ஓர் நியதியானமுறை உண்டாக்கத்தக்கதாக இருக்கும்.

---

" ஒரு பொய் சொன்னவன், அதைத் தாபிக்கப்புகின், ஒன்பது பொய் சொல்லவேண்டும். "

" நீ உன்னிலும் மெலியாரை வருத்தச் செல்லுமிடத்து, உன்னின் வலியவர் உன்னை வருத்த வரும்போது அவர் முன் அஞ்சி நிற்கும் உனது நிலையை நினை. "

" நீ பிறனொருவனது பழியை அவன் புறத்திலே சொல்லுவையாயின், அவன் உன் பல பழிகளுள்ளும், நீ மிக வருந்தும்படி, அதிகமாகிய பழிகளை ஆராய்ந்து உன் எதிரே சொல்லுவான்."

" நீ வருந்திக் கற்றநூலை மறக்கவிட்டு வேறு நூலைக் கற்றல், கையிலே கிடைத்த பொருளை எறிந்துவிட்டு வேறு பொருள் அபகரித்துத் தேடல் போலும்."

"சபைக்கு அஞ்சி நடுங்கும் வித்துவான்களிடத்தில் கல்வியும், சபைக்கு அஞ்சாத மூடர்களிடத்தில் ஆரவாரச் சொற்களும், உண்டாதலினும் உண்டாகாமையே நன்று."

" உன்னை யாவரும் வியக்கக் கருதி நீயே உன்னைப் புகழ்தல், விளக்கைப் பிரகாசிப்பிக்கக் கருதி அதனது தகழியில் நீரை வார்த்தால் போலும்."

—நாவலர்.

# இது பொருந்துமா?

## [சிலப்பதிகார ஆராய்ச்சி]

(நா. கந்தையா)

கண்ணகி பாண்டியன் நெடுஞ்செழியனிடம் சென்று தன்னுடைய கணவன் கள்வன் அல்லனெனத் தன் சிலம்பை உடைத்துக்காட்டி நிறுவினள். அப்போது தானே கள்வனெனச் சொல்லிக்கொண்டு நெடுஞ்செழியன் மயங்கி வீழ்ந்தான். அதன்மேல் நடந்த சம்பவத்தைக் குறிப்பிடும் சிலப்பதிகாரப் பாகம் பின்வருமாறு:—

"..........................தென்னவன்
கோப்பெருந் தேவி குலைந்தன ணடுங்கிக்
கணவனை யிழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்
றிணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி."

இப்பாகத்திற்குப் பதிப்பாசிரியர் பின்வருமாறு கதை யெழுதுகிறார். "அதனை அறியாத அவன் மனைவி பாதுகாத்தருள வேண்டுமென்று கண்ணகியின் பாதத்தில் வீழ்ந்தாள்."

ஆகவே, பதிப்பாசிரியர் கோப்பெரும் பெண்டு கண்ணகியின் பாதங்களில் வீழ்ந்தாளெனக் கூறுகிறார். "இது பொருந்துமா?" என்பது வினா.

சுப்பிரமணியக் கடவுளினது வேற்படைக்கலத்தாற் றுக்குண்டு சூரபன்மன் இறந்தான். அச்செய்தி செவிக்கெட்டியதும், அவனுடைய பட்டத்துத் தேவியாகிய பத்மகோமளை உடனே உயிர் நீத்தாள். இதுவே அறக்கற்பின் வழிநிற்கும் பெண்டிரின் விழுமிய செயல். கோப்பெருந் தேவியும் தன் கணவனது இணையடிகளைத் தொழுது வீழ்ந்தாளென்பதே தமிழ் இலக்கிய ரீதிக்கும் பொருத்தமாகும்.

இன்னும் இதே பாகம் நூலாசிரியரால் வேறோரிடத்திற் கூறப்பட்டிருப்பதும் சிந்திக்கற்பாலது. வஞ்சிக்காண்டத்திலே காட்சிக்காதையிற் சேரன் செங்குட்டுவனுக்குக் கண்ணகியின் வரலாற்றைக் கூறவந்த சாத்தனர் பின்வருமாறு கூறுகிறார்:

"திருவீழ் மார்பிற் றென்னர் கோமான்
றயங்கிணர்க் கோதை தன்றுயர் பொறாஅன்
மயங்கினன் கொல்லென மலரடி வருடித்
தலைத்தா ணெடுமொழி தன்செவி கேளாள்
கலக்கங் கொள்ளாள் கடுந்துயர் பொறாஅண்
மன்னவன் செல்வுழிச் செல்க யானெனத்
தன்னுயிர் கொண்டவ னுயிர்தே டினள்போற்
பெருங்கோப் பெண்டு மொருங்குடன் மாய்ந்தனள்."

இப்பாகம் "கோப்பெருந் தேவி கண்ணகி பாதத்தில் விழுந்து பாது காத்தருள வேண்டும்" எனக் கோடற்குச் சற்றேனும் இடங்கொடாது. ஈண்டுப் பெருங்கோப் பெண்டு வருடிய மலரடி பாண்டியனதே. ஆகவே "இணையடி தொழுது வீழ்ந்தனளே" என்புழிக் கோப்பெருந் தேவி தொழுத "இணையடி"யும் பாண்டியனதே. இதனை அறிஞர்கள் ஆராய்வார்களாக.

---

சிறையாரு மடக்கிளியே யிங்கேவா தேனொடுபால்
முறையாலே யுணத்தருவன் மொய்பவளத் தொடுதரளந்
துறையாருங் கடற்றோணி புரத்தீசன் றுளங்குமிளம்
பிறையாளன் றிருநாம மெனக்கொருகாற் பேசாயே.

பாறுற மலாச்சூதப் பல்லவங்க ளவைகோதி
ஏனோர்க்கு மினிதாக மொழியுமெழி லிளங்குயிலே
தேனாரும் பொழில்புடைசூழ் திருத்தோணி புரத்தமரர்
கோனாரை யென்னிடைக்கே வரவொருகாற் கூவாயே.

நற்பதங்கண் மிகவறிவாய் நானுன்னை வேண்டுகின்றேன்
பொற்பமைந்த வாயலகிற் பூவைநல்லாய் போற்றுகின்றேன்
சொற்பதஞ்சேர் மறையாளர் திருத்தோணி புரத்துறையும்
விற்பொலிதோள் விகிர்தனுக்கென் மெய்ப்பயலை விளம்பாயே.

முன்றில்வாய் மடற்பெண்ணைக் குரம்பைவாழ் முயங்குசிறை
அன்றில்காள் பிரிவுறுநோ யறியாதீர் மிகவல்லீர்
தென்றலார் புகுந்துலவுந் திருத்தோணி புரத்துறையுங்
கொன்றைவார் சடையார்க்கென் கூர்பயலை கூறீரே.

—சம்பந்தர்.

# நிரை கோடல்

( ஐ. நாகநாதன் )

மக்கட்குரிய ஒழுக்கங்களை யெல்லாம் அகம் புறமென விரு பகுப்புக்களாக வகுப்பர் தமிழாசிரியர். அகமாவது உருவுந் திருவு நலனுங் குலனும் பிறவுந் தம்முளொத்த தலைவனுந் தலைவியும்பால் வரை தெய்வம் இடைநின்று புணர்க்க, உள்ளம் வேறுபட்டுப் புல்லுமொழுக்கமாம். இவ்வொழுக்கம் அதனை யுடையார் தாமே இவ்வாறிருந்ததென அதனைப் பிறர்க்குரைக்கவும் பிறர்தாம் உணரவுங் கூடாவியல்பிற்றாய், யாண்டு முள்ளத்தானே நுகர்ந்து இன்புறு மொழுக்கமாதலின் அகமெனப்பட்டது. ஏனைப்புறமாவது அறனும் பொருளும் பற்றிப் புறத்தே நிகழு மொழுக்கமாம். இஃ திவ்வா றிருந்ததெனப் பிறர்க்கு உரைக்கவும், உணரவும் படுமியல்பினதாதலின் புறமெனப்பட்டது.

அகத்திற்கும் புறத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. அகத்தே நிகழும் ஒழுக்கங்களுக்கேற்பப் புறத்தே நம் செய்கைகள் அமையும். இன்னும் புறத்தாக்கங்களால் எம்மகத்துணர்வு பேதப்படுதலும் யாமறிந்த உண்மைகளாம். தமிழ்நாட்டில் வழங்கிய புறநிகழ்ச்சிகள் வரம் பிகந்துபடாவண்ணம் பல இலக்கண வரம்புகளைத் தொல்காப்பியராதியோர் செய்திட்டனர். இவர்கள் புறமென வகுத்துக் கொண்டவற்றுட் கூறப்படுவன பெரும்பான்மையும் போர்நிகழ்ச்சிகளாம். தமிழ்நாட்டில் வழங்கிவந்த புறநிகழ்ச்சிகள் மிகவும் சீரிய தன்மைகள் வாய்ந்தவையாதலால், புலவர்களாற் புலனெறி வழக்கஞ் செய்யப்பட்டன. இப்புறச்செய்திகளுக்குரிய இலக்கணங்களைத் தொல்காப்பியமும் ஐயனாரிதனாரியற்றிய வெண்பாமாலையும் பிறநூல்களுங் கூறும். இந்நூல்களிலிருந்து யாங்கள் தமிழரது அறநெறிப்பட்ட போர் முறைகளையும் அரசியல்நிலை கொடை வீர மாதியவற்றைப் பற்றிய அரிய செய்திகளையு மறியலாகும்.

இப் புறவொழுக்கத்தை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என எழு திணைகளாக வகுப்பர் தொல்காப்பியர். திணையெனினும் ஒழுக்கமெனினு மொக்கும். வெண்பாமாலையுடையார் இவற்றைப் பன்னிரு திணைகளாக வகுப்பர். ஆயின் இவையெல்லாம் தொல்காப்பியர் கூறிய எழு திணைகளுள்ளும் அடங்குமென்க. பாடாண் ஒழிந்த வெட்சி முதலான திணைகள் அவ் வொழுக

லாறுகளின் போது சூடும் பூக்களின் பெயரினால் அவ்வப் பெயரை அடைந்தன. வெட்சி என்பது செந்நிறமும், மிக்க பிரபையும் கொண்டவோர் பூவாகும்.

வெட்சியென்பது நிரைகோடல். அஃதாவது வேந்தனாணையாற் பகைப்புலங் காத்திருந்த தண்டத்தலைவர் பகைவர் ஆனிரையைக் களவினாற் கொணர்ந்து பாதுகாத்தலாம். இதனை,

> "வேந்துவிடு முனைஞர் வேற்றுப் புலக்களவின்
> ஆதந் தோம்பன்மே வற்றாகும்."

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தானறிக. வேந்தனாணையின்றித் தண்டத் தலைவரும், குறுநில மன்னருஞ் சென்று நிரைகோடலாகிய வேத்தியலொழிந்த பொதுவியற் பகுதியுமுண்டு. இரு பெருவேந்தர் பொருவது கருதியக்கால் ஒருவர்நாட்டு வாழும் அந்தணரும் ஆவும் முதலாகிய தீங்கு செய்யத்தகாத சாதிகளை ஆண்டுநின்றும் 'புறம் போக', எனப் புகலலும், அங்ஙனம் போதற்கு அறிவில்லாத ஆவைத் தாமே களவினாற் கொண்டு காத்தலும், வேந்தருக்குரிய அறச் செயல்களாகும். இதனால் மறத்துறையிலும் மன்னர்க்கு அறமே நிகழ்ந்தமை அறியப்படுகின்றது. விராட நகரத்திற் பாண்டவர் மறைந்துறையுங் காலத்துத் துரியோதனனாதியோர் ஆனிரையைக் கவர்ந்ததும், விராடநகர் மன்னன் பாண்டவர் துணைகொண்டு, அந் நிரைகளை மீட்டதுமாகிய செய்திகளால், இந்த நிரைகோடலாகிய ஒழுக்கம்; பரதகண்ட மெங்கணும் நிகழ்ந்தமை யறியப்படும். அந்தணராதியோரின் ஏமத்தை விரும்பி அவர்க்கெல்லாம் அறிக்கை விடுத்த பின்பே போர் மேற்கொள்ளும் பெருந்தகை நீயென ஓர் புலவர் தமதரசனைப் பாடுகிறார்.

> "ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்
> பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
> தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
> பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரு
> மெம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மினென
> வறத்தாறு நுவலும் பூட்கை மறத்தின்" (புறம்–9)

எனக் காண்க. மதுரைமாநகரை யழித்தஞான்று கண்ணகி தேவியும்,

> "பார்ப்பார், அறவோர், பசுப்பத் தினிப்பெண்டிர்
> மூத்தோர் குழவியெனு மிவரைக் கைவிட்டுத்
> தீத்திறத்தார் பக்கமே சேர்க"

என அக்கினி தேவனுக்குக் கட்டளையிட்டாள்.

தற்காலமே மிக்க நாகரிக காலமென்று கொள்ளுகின்றவர்க ளநேக ரிருக்கின்றார்கள். அவர்கள் எம் தமிழ் மக்களது ஒழுங்குகளை அறியாதவர்களே. இற்றைநாட்களிலே மேலைநாட்டார், வான வூர்திகளினின்றும், குண்டுமாரிகளை வீசிப் பெண்டிரென்றுங் குழந்தைகளென்றும் பிணியுடையாரென்றும் பாராது இல்லங்களையும் வைத்தியசாலைகளையும் நசித்துவிடுகின்றார்களே. தம்மின் எளியார்மேற் சென்று அவர்கள் நாட்டைக் கொள்ளைகொள்ளுகின்றனர். இவ்வரலாறுகளையும், அறிக்கை விடுத்தல்லாது மேற்செல்லாது தமிழ் மன்னர் வரலாறுகளையும், ஒப்ப நோக்கும்போது எம் தமிழர் எத்துணை யுயரிய நாகரிகப் படியை அடைந்திருந்தனரென்பது தெள்ளிதிற் பெறப்படும்.

தொல்காப்பியர் நிரையைக் களவினுற் கொள்ளலும், அங்ஙனம் கொள்ளப்பட்ட நிரையை இழந்தோர் மீட்டலுமாகிய, ஒழுகலாறுகளை யெல்லாம் வெட்சியென்று வேண்டுவர். வெண்பாமாலை யுடையார் நிரைகோடலை வெட்சியென்றும், மீட்டலைக் கரந்தையென்றும் கொண்டனர். தொல்காப்பியர் நிரையை அடித்துக்கோடலும் மீட்டுக்கோடலுமாகிய இருபகுதிக்கும் பொதுவாகப் பதினான்கு துறை கூறுகின்றார்.

“படையியங் கரவம் பாக்கத்து விரிச்சி
புடைகெடப் போகிய செலவே புடைகெட
வொற்றி னாகிய வேயே வேய்ப்புற
முற்றி னாகிய புறத்திறை முற்றிய
வூர்கொலை யாகோள் பூசன் மாற்றே
நோயின் றுய்த்த நுவலுழித் தோற்றந்
தந்துநிறை பாதீ டுண்டாட்டுக் கொடையென
வந்த வீரேழ் வகையிற் றாகும்”

என அவற்றைக் காண்க.

நிரைகோடற்கெழுந்தோர் பாடிப் புறத்துப் பொருந்து மரவமும், நிரைமீட்டற்கெழுந்தோர் விரைந்துசெல்லுமரவமும், இங்கு “படையியங் கரவ” மெனப்பட்டது. அங்ஙனம் நிரைகொள்ள வெழுந்தனான்று கங்குலில் நல்வாய்ப்புட் கேட்டலும், நிரைமீட்கச்சென்றோர் இடைப்புலம்போந்தார் கூறியவற்றைக் கேட்டலும் விரிச்சி எனப்படும். விரிச்சி—நற்சொல். பின் நிரைகோடற்கெழுந்தார் பகைவரறியாது அவர் காவற் புறங்களை ஒற்றிவருவர். மீட்டற்குச் சென்றோர், அங்கு ஒற்றப்படாவகை செல்வர். இருவகை வினையாளரும், இவ்வகை தாம் ஒற்றிவந்த செய்திகளைத் தம் தலைவர்க்குரைப்பர். அங்ஙன மரிய செய்திகளை ஒற்றித் தந்தார்க்குச் செய்யும் சிறப்புகள் ஒழிந்தபின்றை

இருபகுதியாரும் தம் செலவொழிந்திருப்பர். பின் நிரைகோடற்கெழுந்தார், புறஞ்சேரியை வளைத்து ஆங்கு நிற்குங் காவலரைக் கொல்வர். இதுவே "ஊர்கொலை" என்பது. இங்ஙனம் பொருதார் ஆவினைக் கொள்ளுதலும் மீட்டலும் "ஆகோள்" எனும் பகுதியாகும். அங்ஙனம் நிரைகொணரும்போது மீட்டும் தம் பின்றொடர்ந்து எதிர்ந்தாரை மாளும்வண்ணம் பொருவர். பின் நிரையினை இன்புறுத்திக்கொண்டே போவர். நிரையைக் களவிற் கொணர்ந்த வீரர் செயல்கேட்டு மகிழ்தலும், நிரைமீட்டாரை ஊரார் ஏத்தலுமாகிய பகுதிகளெல்லாம் "நுவலுழித்தோற்ற"மெனப்படும். இந்த நிரையினை ஊர்ப்புறத்தே கொணர்ந்து நிறுத்தித் தமக்குட் பங்கிடுவர். இங்ஙனமாய வெற்றிச் செயல்களால், அவர்கள் மகிழ்ந்து, உண்டு, ஏற்பார்க்கு வேண்டுவ வீந்து இன்புறுவர்.

இங்கு படையியங்கரவம் முதலாயினவற்றைத் துறைகளெனக் குறிப்பிட்டாலும், இவற்றிற்குக் காரணமாகிய செய்திகளு மிவற்றுள்ளே யடங்கும்.

இன்னும் மறவரது வீரத்தைக் கூட்டிய துடிநிலையும், கொற்றவை நிலையும் இவ்விருவெட்சிக்கும் புறனடையாம். இதனை,

"மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த
கொற்றவை நிலையு மத்திணைப் புறனே"

என்பதனாலறிக.

இவ்வெட்சித்திணை அகத்திணையாகிய குறிஞ்சிக்குப் புறன். கங்குலிற் சேறலும், காவலர் கடுகுமுன் தம்வினை முடித்து மீளலுமாகிய ஒழுகலாறுகள், இவ்விரண்டு திணைக்கும் பொதுத்தன்மைகளாகும்.

---

பாராரே யெனையொருகாற் றொழுகின்றேன் பாங்கமைந்த
காராருஞ் செழுநிறத்துப் பவளக்காற் கபோதகங்காள்
தேராரு நெடுவீதித் திருத்தோணி புரத்துறையும்
நீராருஞ் சடையாருக் கென்னிலைமை நிகழ்த்தீரே.

பண்பழனக் கோட்டகத்து வாட்டமிலாச் செஞ்சூட்டுக்
கண்பகத்தின் வாரணமே கடுவினையே னுறுபயலை
செண்பகஞ்சேர் பொழில்புடைசூழ் திருத்தோணி புரத்துறையும்
பண்பனுக்கென் பரிசுரைத்தாற் பழியாமோ மொழியாயே.

—சம்பந்தர்

# காதலின் கோலம்

(சு. செல்லையா, பழையமாணவர்)

### குறள்வெண்செந்துறை

1. நாயன்மார் கட்டிருந்து நாவற் குழிநோக்கி
நண்பனொடு நானடந்து போனவொரு நாளில்
நேயமுடை யாரொருவர்த் தேடியவோர் நங்கை
நெடுந்தூரந் தானலைந்து வருவதனைக் கண்டோம்

2. நம்முடைய கருத்தெல்லாம் நங்கையிடஞ் செல்ல
நண்பனிவள் கருத்தைமெல்ல நாடுவோ மென்றான்
கண்களிமை கூடுமுனங் கடுகிமிக நடந்து
காரிகையா ளெமையணுகிக் கால்பெயர்க்கும் போது

3. சந்திரனுந் தாமரையைக் குவித்துவரத் தென்றல்
தவழ்ந்துலவுந் தருணமிதிற் தக்கதுணை யின்றி
இந்தவிதஞ் செல்லுவதென் னேதுகுறை யார்நீ
எந்தவிடம் படருகின்றா யென்றவுட னவளும்

4. நண்புடையீர் போல்வருவீர் நாவற்குழி யென்னூர்
நாயன்மார் கட்டினுக்கு நடந்துசெல்லு கின்றேன்
நண்புடையா ளொருத்தியங்கு நண்ணுகின்றா ளவளை
நான்காண வேண்டுமிதோ நாங்களிரு பேரும்

5. மற்றிக்கிற் படிக்கின்றோம் மருதனார் மடத்தில்
மற்றவள்தான் யாரென்று மனமலைய வேண்டாம்
பற்றிக்கிற் படிக்கின்றா ரவளுடைய வண்ணார்
பரிகாரஞ் செய்கின்றா ரவளருமைத் தந்தை

6. என்றலுமென் நண்பனெனைப் பார்த்துநகை செய்தான்
என்னிதய மவளிதய மென்றிரண்டங் கின்றி
நின்றநிலை வென்றறிதில் நேயனறி யாமல்
நேயமுடன் நானவளைக் கிட்டியுற வாடி

7. அம்மணியே யிப்பொல்லாச் செம்மணியி னூடே
யஞ்சாது வருதலுக்குன் நெஞ்சமெனைத் தென்றேன்
அம்மகள்தான் கூறுமுனம் அவன்சிறிது முந்தி
யன்பினுக்கு நாணமட மச்சமிலை யென்றான்

8. அன்பின்வலி யெவ்வளவென் றின்றறிந்தேன் மானே
அல்வந்து மூடுதன்முன் செல்லுதியென் றேனே
தன்பிறகே யெம்முள்ளந் தாவியெழுந் தோடத்
தாண்டினளத் தாக்கணங்கு தமிக்கவெமை விடுத்து

9. சென்றவழி செல்லுதற்குச் சிறிதுமன மின்றிச்
செய்தியொன்றும் பேசாமற் றிரும்பியவள் பிறகே
என்றுமிலா வுணர்ச்சியுடன் யாங்களிரு வேமும்
இணைபிரியே மாயிடினுந் துணைசிறிது மின்றி

10. சென்றமகள் சென்றவிடம் சேர்ந்தனம்யா மங்கே
சேயிழையென் நேரிளையாள் செய்ததவப் பேறு
சென்றமகள் செங்கையினைச் செங்கைகொடு சேர்த்திச்
செம்பதும மாளிகையுட் சென்றுபுகுந் திட்டார்

11. தெருவோரங் கதவருகே சிந்தனைவே றின்றிச்
சென்றமகள் வரவெதிர்ந்து சிறிதுபொழு திருந்தோம்
திருவெளியே வரமாட்டாள் சென்றுவெகு நேரம்
செல்லும்வழிச் செல்லுவம்யா மென்றெழுந்து சென்றேன்

12. அவசரமேன் நேரமின்னு மாகவிலை யயலார்
அநந்தலிடைச் செல்லவில்லை அமர்கசிறு பொழுது
நவமான கதையொன்று நவிலுவனென் றெடுத்தான்
நஞ்சமென வதைவெறுத்து நாளைநவில் கென்றேன்

13. அவன்பிரிந்த பாடுமிலை ஐயோவென் னாசை
அலைபுரண்டு வருவதனை அறிந்துநெகிழ் வார்யார்
இவன்பிரிவுக் கென்புரிவ தென்றிரங்கும் போழ்து
யாரங்கே யெனவினவி யெந்தையவண் வந்தார்

14. என்னண்பன் யாதுமியம் பாதகன்று சென்றான்
எந்தைபிற கேயானு மெய்தியிரு வேமும்
எங்கைசிறு மாளிகையுள் யாரதுவென் றிட்டோம்
ஏந்திழையா ரிருவோரும் எழுந்துமொழி குளறி

15. இவளெனது சகபாடி யான்கடந்த தவணை
இருமல்வந்து காய்ச்சலினா லிடர்ப்பட்ட போழ்தங்
கவமொன்றும் வாராதென் றாறுதல்கள் கூறி
அருமருந்து முணவுகளு மருகிலிருந் துதவி

16. செய்தநன்றிக் களவில்லைத் தேரினது நிற்க;
திருந்திழையின் தந்தைசில வாண்டுகளின் முன்னம்
தைவகதி சார்ந்தனராண் சந்ததிமற் றில்லைத்
தையலுக்குப் பின்னிளைய தங்கையர்கள் நால்வர்

17. சிறுமியர்கள் அவர்களொன்று செய்யவறி யார்கள்
சேர்ந்தவுற வோர்களுமங் கில்லையொன்று செய்ய
வறுமைபிணி தெரியாமல் வாழ்ந்தவிவள் மாதா
வானுலகிற் றன்கணவன் வாழமனம் மாறி

18. ஊணுறக்க மில்லாம லொடுங்கவிவ ளன்னை
உயிர்துறக்கு மினியென்றங் குற்றவர்கள் சொன்னார்
நாணொழித்து நங்கையிவள் நாவற்குழி நீங்கி
நல்லமருத் துவர்நாடி நடந்துதனி வந்தாள்

19. இந்தமொழி யுருகும்வகை யேந்திழையா ளியம்பி
இதுபொழுதி லெழுகமென இறைஞ்சியெதிர் நின்றாள்
வந்தமக ளும்மதனை வழிமொழிந்து நின்றாள்
வருவதனுக் கஞ்சலென மருவுமகள் தேற

20. வாழ்த்தினரென் தந்தைநனி வாழ்த்தியபின் யானும்
வழியில்வந்த கதைகுளறி வசமிழந்து நின்றேன்
தாழ்த்துவதென் னென்றெந்தை சாற்றுமுனங் காறில்
சாரதியின் பாங்கரிடைச் சார்ந்திருந்து கொண்டேன்

21. பெய்வளைக ளிருவருடன் பின்னணியி லெந்தை
பெரியமன வருத்தமொடு பேச்சில்லை யிருந்தார்
ஒய்யென்று சொல்லமுனம் ஒருசுடலை தாண்டி
உப்பளமுங் கடந்துவிட்டோம் ஒருசிறிய பொழுதில்

22. என்னிருத யத்துடிப்பை யென்னவெனச் சொல்வேன்
ஏதேதோ சொல்லமுயன் றெட்டிமுகந் திருமி
என்பிடரி நரம்புகளுக் கிப்பொழுதும் வலியே
யிதுகிடக்க வென்னாசைக் கடல்கடந்தப் பாலோர்

23. தெங்கினிளந் தோட்டமதில் திகழுமொரு வீடு
திக்குகளென் றாற்குடிகள் சிறிதுமிலாக் காடு
அங்குபல வாலிபர்க ளணைந்தனரப் போழ்து
அணங்கனையா ரொன்றுமறைந் திலர்களிரு பேரும்

24. அதிவிரைந்து மாளிகையு ளடியெடுத்து வைத்தார்
அவர்வருகைக் குளமுருகி யங்கொருசார் நின்றோம்
எதுவோவங் குள்ளவர்கள் இரககியம் பேச
இறந்துவிட்டாள் போலுமெனு வெண்ணியுள மிரங்கி

25. என்னென்று சொல்லுவன்யான் எய்தியிரு பேரும்
ஏந்திழையிர் என்றழைத்தங் கெட்டியடி வைத்தோம்
நின்மினிதோ வென்றுபலர் நெருங்கியெமைச் சூழ்ந்தார்
நிகழ்வொன்று மறியாமல் நிமிர்ந்துமிக விழித்தோம்

26. வந்தமகள் சொந்தமகள் † வதுவரர்க ளாகி
வருணிக்க முடியாத வகையிலிருந் திட்டார்
இந்தவகை கண்டெந்தை யிடர்க்கடலு ளாழ்ந்தார்
யான்பட்ட பாடுரைக்க யாருமிலை யங்கே

27. என்னிருத யத்தெழுந்த மாளிகைக ளெங்கே
எடுத்தகொடி மாடங்கள் கோபுரங்கள் யாவும்
மின்னிமறைந் திட்டனஇம் மேதினியும் வாழ்வும்
மித்தைவெறும் மித்தையிது மெய்ம்மையெனல் பித்தே.

---

† வது + வரன் = வதுவரர். வது—மணமகள்; வரன்—மணமகன். சொந்த மகள் வது; வந்தமகள் வரன் என எதிர் நிரனிறைப் பொருள்கோள்.

---

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட் டைம்மே லுந்தி
அலமந்து போதாக வஞ்சேலென் றருள்செய்வா னமருங் கோயில்
வலம்வந்த மடவார்க ணடமாட முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்குந் திருவை யாறே.

விடலேறு படநாக மரைக்கசைத்து வெற்பரையன் பாவை யோடும்
அடலேறொன் றதுவேறி யஞ்சொலீர் பலியென்னு மடிகள் கோயில்
கடலேறித் திரைமோதிக் காவிரியி னுடன்வந்து கங்குல் வைகித்
திடலேறிச் சுரிசங்கஞ் செழுமுத்தங் கீன்றலைக்குந் திருவை யாறே.

ஊன்பாயு முடைதலைகொண் டூரின் பலிக்குழல்வா ருமையாள் பங்கர்
தான்பாயும் விடையேறுஞ் சங்கரனூர் தழலுருவர் தங்குங் கோயில்
மான்பாய வயலருகே மரமேறி மந்திபாய் மடுக்க டோறும்
தேன்பாய மீன்பாயச் செழுங்கமல மொட்டலருந் திருவை யாறே.

—சம்பந்தர்

# நாவலன் வருகை

(வி. பொன்னுத்துரை)

மண்ணுஞ் சிறுக வளர்புகழால்
மதிபோன் றுயர்ந்தே யொளிமணியாய்
வயங்கும் தமிழின் வளனெல்லாம்
வடித்துத் திரட்டிக் கொடுபோந்து
கண்ணுள் மணியென் றேயெவரும்
களிக்குஞ் சைவா சிரியர்களின்
கழகத் தமர்ந்தோர் கருதுசுவைக்
கனியே வருக வொழிவின்றி
எண்ணெண் கலையின் றிறமெல்லாம்
எழுதிக் கற்ற வுயர்புலவோர்
ஏத்திப் போற்றி முடிமீதே
ஏற்றுஞ் சூளா மணிவருக
பண்ணும் பணிகள் பலவியற்றிப்
பணிந்தோ முன்றன் பாதமலர்
பால்தோய் மணியே நாவலவெம்
பதியே வருக வருகவே. (க)

தெய்வத் தமிழின் சுவையெல்லாம்
சேர வடித்தே யிளையசிறூர்
தெளிய விரிக்குஞ் செந்நெறிகள்
தெருட்ட வெழுந்தே திரைகடலிற்
செய்வெங் கதிரோன் திகழ்ந்தாங்குத்
திண்ணென் னிருணீங் கியவாபோற்
சிறியே முள்ளம் சேர்ந்தவிருள்
சிதைத்திங் கொளிகால் செஞ்சுடரே
மெய்ம்மைச் சமய மீதெனவே
மேனாட் சைவம் விளக்குநல்லூர்
மேவுந் தமிழ்நா வலர்பெருமான்
விளங்கும் புகழி னுருவுடம்பாய்

உய்வைத் தரவீங் குதயஞ்செய்
　　உயர்தீந் தமிழே வருககனி
உவந்தே வருக வடியேங்கள்
　　உச்சி மணியே வருகவே. (உ)

வருக தெய்வத் தமிழன்னை
　　வருந்தித் தவத்திற் பெற்றெடுத்து
வாரி ஞானத் தீம்பாலை
　　மடுப்ப வுண்டு மகிழ்ந்தோயே
வருக திருநெல் வேலியிதில்
　　வாய்த்த மணியே வருகவுயர்
வளஞ்சால் சைவத் திருநெறியை
　　வளர்க்குங் கருணை வாரிதியே
வருக தோலா மொழியாய்நின்
　　வருகை யுணர்ந்தே களியெய்தி
வருக வருக வென்றென்றே
　　வாழ்த்தி யடியேங் கரங்குவிக்க
வருக அச்சு வாகனத்தில்
　　வளருந் தெய்வப் புதுவடிவே
வருக எங்கள் நாவலனே
　　வாழ்வே வருக வருகவே. (௩)

---

மேலோடி விசும்பணவி வியனிவத்தை மிகவகழ்ந்து மிக்கு நாடும்
மாலோடு நான்முகனு மறியாத வகைநின்றான் மன்னுங் கோயில்
கோலோடக் கோல்வளையார் கூத்தாடக் குவிமுலையார் முகத்தி னின்று
சேலோடச் சிலையாடச் சேயிழையார் நடமாடுந் திருவை யாறே.

எழுந்துலகை நலிந்துழலு மவுணர்கடம் புரமூன்று மெழிற்க ணாடி
உழுந்துருளு மளவையினொள் ளெரிகொளவெஞ் சிலைவளைத்தோ னுறையுங் கோயில்
கொழுந்தரள நகைகாட்டக் கோகநத முகங்காட்டக் குதித்து நீர்மேல்
விழுந்தகயல் விழிகாட்ட விற்பவளம் வாய்காட்டு மிழலை யாமே.

—சம்பந்தர்

# பத்திரிகாசிரியர் குறிப்புக்கள்

**புதியகட்டடம் :-** மலாய்நாட் டன்பர்களின் பேருதவியால் ஆரம்பிக்கப்பட்ட எங்கள் கலாசாலைப் புதிய கட்டடம் முற்றுப் பெற்று, சென்ற ஜனவரி மாதம் 18-ந் திகதி தொடக்கம் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இவ்வன்பர்களின் சமயப் பற்றும் மொழிப் பற்றும், சைவர்களாலும், தமிழர்களாலும் பெரிதும் போற்றற்பாலன.

**கிருஷிகபாடசாலை :-** இவ்வருடம் முதலாம் வருட மாணவர் சனிக்கிழமை தோறுங் கிருஷிக பாடசாலைக்குச் சென்று நாட்டுச்சீவன சாஸ்திரத்தில் விசேட கல்வி கற்று வருகின்றனர். இதற்காக அப் பாடசாலை அதிபர் திரு. குணரத்தினம் அவர்களுக்கு எமது நன்றி யுரித்தாகுக.

**விரிவுரைகள் :-** I. பாடசாலை வைத்திய அதிகாரி டக்டர் கனகரத்தினம் அவர்கள் தொற்றுநோய்களைப் பற்றித் தொடர்ச்சியாகப் பல அரிய விரிவுரைகள் நிகழ்த்தினர். இதற்காக எங்கள் சங்கம் அவர்மாட்டு விசேட நன்றி செலுத்துகின்றது.

II. வழக்கறிஞர் திரு. பாலசுந்தரமவர்கள், "ஜோர்ஜ் பேணட்ஷோ" என்னும் புலவரைப்பற்றி ஒரு சிறந்த சொற்பொழி வாற்றினர். சொற்பொழிவாளர், அவ்வாங்கிலப் புலவருடன் நெருங்கிப் பழகினவராதலின், அவரது நல்லியல்புகளையும், ஆற்றல்களையும் கேட்டோர் இன்புறும் வண்ணம் உயர்ந்த பாஷை நடையில் நகைச்சுவை ததும்பப் பேசினர். அப்பெரியாருக்கு எங்கள் நன்றி யுரித்தாகுக.

III. அரசாங்கசபை அங்கத்தவர்களான திரு. S. O. கனகரத்தினம் அவர்களும், ஸ்ரீ பால சமரக்கொடி அவர்களும், கௌரவ. S. W. R. D. பண்டாரநாயகா அவர்களும் எங்கள் கலாசாலையைத் தரிசித்தார்கள். அவ்வமையம் கௌரவ. பண்டாரநாயகா அவர்கள் ஆசிரியமாணவர்க்குப் பயன்படத்தக்க, அறிவுரைகள் செறிந்த ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். அப்பெரியார்கள் மாட்டு எங்கள் சங்கம் விசேட நன்றி பாராட்டுகின்றது.

**நூல்நிலையம் :-** சைவாசிரிய கலாசாலை ஆசிரியர், மாணவர் முதலியோரினுபயோகத்துக்காக இக்கலாசாலையில்எண்ணூற்றுக்கு அதிகமான புஸ்தகங்களுண்டு. அவை :


DIÂTÉ LTD
PLÂTÉ

மலாய் நாட்டுச் சகோதரர் கட்டி உபகரித்த
ஆசிரிய கலாசாலைக் கட்டடம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | இலக்கிய நூல்கள் | | .... | .... | 288 |
| 2. | கல்வி பயிற்றல் நூல்கள் | | .... | .... | 112 |
| 3. | மானத சம்பந்தமான நூல்கள் | | | .... | 23 |
| 4. | சுகாதார தேகப்பயிற்சி நூல்கள் | | | .... | 16 |
| 5. | கணித நூல்கள் | | .... | .... | 36 |
| 6. | சாஸ்திர நூல்கள் | | .... | .... | 68 |
| 7. | பூமிசாஸ்திரம் | | .... | .... | 85 |
| 8. | சரித்திரம் | | .... | .... | 50 |
| 9. | வரைதல் | .... | .... | .... | 6 |
| 10. | கைவேலை | .... | .... | .... | 2 |
| 11. | சமயம் | .... | .... | .... | 45 |
| 12. | அகராதி | .... | .... | .... | 4 |
| 13. | Encyclopaedia Brittanica (தொகுதிகள்) | | | | 35 |
| 14. | சமயசஞ்சிகைகளும், வேறுசஞ்சிகைகளும் | | | | 120 |

இவைகளேயன்றி எங்கள் வாசிகசாலையில் விலையுயர்ந்த சரித்திர சம்பந்தமான படங்களும், சுகாதார சம்பந்தமான படங்களும் இருக்கின்றன.

ஆசிரியமாணவர் வாசித்துப் பயனடைதற் பொருட்டு ஆங்கில, தமிழ்த் தினசரிப்பத்திரிகைகளும், வாரவெளியீடுகளும், மாத சஞ்சிகைகளும் ஒழுங்காக எங்கள் வாசிகசாலைக்கு வருகின்றன.

**கலாசாலை மாணவர் :-** எங்கள் ஆசிரிய கலாசாலையில் இரண்டாம் வருடத்தில் 36 பேரும், முதலாம் வருடத்தில் 15 பேரும் பயிற்றப்பட்டு வருகின்றனர். இரண்டாம் வருட ஆசிரிய மாணவருளொருவரான திரு. சி. வன்னித்தம்பி யென்பவர் சென்ற பங்குனி மாதத்தில் வைத்திய பகுதியிற் கடமையாற்றுவதற்காகக் கலாசாலையை விட்டு விலகினர். அவர் கலாசாலையிலிருக்கும் காலத்தில் மிகவு மூக்கமுடையராயுங் கைப்பந்தாட்டம் முதலிய விளையாட்டுக்களில் மிகவும் திறமையுடையராயும் விளங்கினர். அவர் தமது புதிய உத்தியோகத்தில் சிறப்புற்று விளங்குவாராக. முதலாம் வருஷ ஆசிரிய மாணவருளொருவரான திரு. வை. சோமசுந்தரமவர்கள் சென்ற ஐப்பசிமீ நடந்த எழுத்தாளர் பரீக்ஷையிற் சித்தியடைந்து, யாழ்ப்பாணம் கச்சேரியிற் தற்போது கடமை பார்க்கிறார். அவர் தமது உத்தியோகத்தில் உயர்வும் சிறப்பும் பெறுவாராக.

12

மகுடாபிஷேகப் பட்டங்கள் :-

I. அரசாங்கசபைத் தலைவரும் முன் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் முகாமைக்காரராகக் கடமை யாற்றியவருமாகிய திரு. வைத்தியலிங்கம் – துரைசுவாமி அவர்களுக்கு மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் "சேர்" பட்டமளித்ததுபற்றி நாம் பெருமகிழ் வெய்து கின்றோம். அப்பெரியார் தமிழுக்கும், சைவத்திற்கும், இலங்கை மக்கட்கும் ஆற்றிய தொண்டுக்கு இத்தகைய கௌரவப் பட்டம் தகுமென்பதே எங்கள் தாழ்மையான அபிப்பிராயம்.

II. மாகாண வைத்திய அதிகாரியாக இருந்து தற்போது இளைப்பாறற் சம்பளம் பெறுபவரும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவருமான டக்டர் சுப்பிரமணியம் அவர்களுக்கு மன்னர் மகுடாபிஷேகப்போது "சமாதான நீதிபதி" என்னும் பட்டம் அளித்ததை யறிந்து அளவிலா மகிழ்ச்சி அடைகின்றோம். அப்பெரியார் பல்லாண்டு இருந்து ஏழை மக்களுக்கு உதவிபுரிய இறைவன் துணைபுரிவானாக.

---

ஆரூடு சடைமுடிய னனலாடு மலர்க்கைய னிமயப் பாவை
கூரூடு திருவுருவன் கூத்தாடுங் குணமுடையோன் குளிருங் கோயில்
சேரூடு செங்கழுநீர்த் தாதாடி மதுவுண்டு சிவந்த வண்டு
வேரூப வுருவாகிச் செவ்வழிநற் பண்பாடு மிழலை யாமே.

—சம்பந்தர்



DIÂTÉ 129

ஆசிரியரும் ஆசிரிய (விடுகைவகுப்பு) மாணவரும்

1935 - 1937

| தேதி | அக்கிராசனர் | பேச்சாளர் | விஷயசூசிகை |
|---|---|---|---|
| 29- 6-36 | மானேஜர் | திரு. S. W. R. D. பண்டாரநாயக | "ஆசிரிய கலாசாலை" |
| 17- 9-36 | அதிபர் | | "உத்தியோகத் தெரிவு" |
| 24- 9-36 | T. விநாயகமூர்த்தி | மு. ஆறுமுகம் | "திரு. ரவீந்திரநாத் தாகூர்" |
| 1-10-36 | A. V. சுப்பிரமணியம் | V. பொன்னுத்துரை | "அகத்திணைச் சிறப்பு" |
| | | S. வேலுப்பிள்ளை | 'சிலப்பதிகாரமும் இளங்கோவடிகளும்' |
| 13-10-36 | அதிபர் | Dr. கனகரெத்தினம் | "தொற்றுநோய்கள்" |
| 15-10-36 | உபஅதிபர் | திரு. M. பாலசுந்தரம் M. A., B. SC., | "பேணட் ஷோ" |
| 20-10-36 | அதிபர் | Dr. கனகரெத்தினம் | "தொற்றுநோய்கள்" |
| 27-10-36 | அதிபர் | Dr. கனகரெத்தினம் | "தொற்றுநோய்கள்" |
| 3-11-37 | அதிபர் | Dr கனகரெத்தினம் | "தொற்றுநோய்கள்" |
| 5-11-36 | சு. கந்தசுவாமி | V. ஐயாத்துரை | "சின்னத்தம்பிப்புலவர்" |
| | | S. கந்தையா | "திணையும் பாகுபாடும்" |
| 26-11-36 | K. அருணாசலம் | க. செந்திநாயகம் | "சகோதரவாஞ்சை" |
| 21- 1-37 | M. பொன்னம்பலம் | N. கந்தையா | "சிலப்பதிகாரம்" |
| | | S. நாகநாதர் | "18-ம் நூற்றுண்டு ஆங்கிலப் புலவர்" |
| 18- 2-37 | சு. கந்தசுவாமி | A. V. சுப்பிரமணியம் | "ஷேக்ஸ்பியர்" |
| 11- 3-37 | K. வைரமுத்து | V. கணபதிப்பிள்ளை | "அலெக்சாந்தர் போப்" |
| 18- 3-37 | E. ஐயாத்துரை | வாதிகள் : K. நாராயணபிள்ளை<br>K. அருணாசலம்<br>பிரதிவாதிகள் : T. விநாயகமூர்த்தி<br>M. பொன்னம்பலம் | தர்க்கம் : "எட்டாம் எட்வேட் இராச்சியம் துறந்தது நியாயந்தான்" |

மு. ஆறுமுகம்
க. இராசையா
(செயலாளர்)

# திருநெல்வேலி, சைவாசிரிய கலாசாலை
# மாணவர்சங்க அறிக்கை
## 1936 - 1937

இச்சங்கம் சென்ற ஆண்டுகளைப்போலவே இவ்வாண்டும் உழைத்துவருகின்றது. கலாசாலை மாணவர் 51 ஆகக் குறைக்கப்பட்டபடியால் சங்கத்தின் அங்கத்தவர் தொகையும் 51 ஆகக் குறைந்தது. இருவகுப்பு மாணவரும் ஒத்து உழைத்தபடியாற் கூட்டங்கள் இனிது நடைபெற்றன. அனேக அங்கத்தவர்கள் தமிழிலும்பார்க்க ஆங்கிலத்திற் கூடிய பயிற்சியுடையவர்களானபடியால் அனேக விஷயங்கள் ஆங்கிலப் புலவர்களைப்பற்றியே பேசப்பட்டன. இக்கூட்ட நன்மையால் அனேகர் தங்கள் எண்ணங்களைத் தாய்ப்பாஷையாகிய தமிழ்ப்பாஷையிலும் நன்கு வெளிப்படுத்தப் பழகிவிட்டனர்.

இக்கூட்டத்தின் நன்மையைக் கருதியும் மற்றும் வருஷங்களைப் போலல்லாமல் இவ்வருஷம் அனேகர் ஆங்கிலந் தெரிந்தவர்களாயிருந்தபடியாலும் மானேச்சர் அவர்கள் திரு. S. W. R. D. பண்டாரநாயக, ஸ்ரீ பாலசமரக்கொடி, திரு. S. O. கனகரத்தினம் என்னும் அரசாங்க சபை அங்கத்தவர்களைக் கொணர்ந்து ஓர் கூட்டம் நிகழ்த்தினர். நியாயதுரந்தரர் திரு. M. பாலசுந்தரம் M. A., B. SC., அவர்களும், "பேணாட் ஷோ" (Bernard Shaw) என்பவரைப்பற்றி எங்கள் வேண்டுகோட்கிணங்கி ஒரு சிறந்த சொற்பொழிவு நடாத்தினர். அதிபர் அவர்களின் தலைமையின்கீழ் வட இலங்கைப் பாடசாலைச் சுகாதார பரிசோதகர் டாக்டர் கனகரத்தினம் அவர்களாலே "தொற்றுவியாதிகள்" என்னும் விஷயமாகச் சிறந்த உபநியாசங்கள் செய்யப்பட்டன. இப்பெரியார்கட்கு இச்சங்கத்தாரின் நன்றியறிதல் எக்காலத்தும் உரியதாகுக.

மு. ஆறுமுகம்
க. இராசையா
(செயலாளர்)

# கற்றுத்தேர்ந்த மாணவர்கள்

## 1936

| | பெயர். | இடம். |
|---|---|---|
| 1. | வ. நடராசா | நாவற்குழி |
| 2. | அ. முருகேசு | அராலி |
| 3. | க. விசுவலிங்கம் | சங்கானை |
| 4. | செ. ஐயாத்துரை | நயினாதீவு |
| 5. | பொ. சின்னத்துரை | புலோலி |
| 6. | மு. இராசதுரை | வதிரி |
| 7. | வி. சுப்பிரமணியம் | உசன் |
| 8. | வே. கணபதிப்பிள்ளை | மட்டுவில் |
| 9. | க. சிவலிங்கம் | ஊர்காவற்றுறை |
| 10. | வீ. மார்க்கண்டு | கோப்பாய் |
| 11. | ஐ. சிவலிங்கபிள்ளை | காரைநகர் |
| 12. | க. நவரத்தினம் | வயாவிளான் |
| 13. | த. பாலசுப்பிரமணியம் | கெருடாவில் |
| 14. | இ. கைலாயர் | கோப்பாய் |
| 15. | கா. கதிரிப்பிள்ளை | புன்னாலைக்கட்டுவன் |
| 16. | த. சுப்பிரமணியம் | உசன் |
| 17. | அ. குமாரசாமி | மீசாலை |
| 18. | சு. முருகேசு | சங்கத்தானை |
| 19. | வே. தம்பு | வரணி |
| 20. | க. ஐயாத்துரை | நுணாவில் |
| 21. | செ. சரவணமுத்து | அளவெட்டி |
| 22. | இ. சரவணமுத்து | மட்டுவில் |
| 23. | இ. கந்தையா | காரைநகர் |
| 24. | கா. தம்பிப்பிள்ளை | திருநெல்வேலி |

## 1937

| | | |
|---|---|---|
| 1. | சி. ஆறுமுகம் | மட்டுவில் |
| 2. | நா. கந்தையா | நாரந்தனை |
| 3. | ச. வினாசித்தம்பி | வட்டுக்கோட்டை |
| 4. | த. வினாயகமூர்த்தி | வட்டுக்கோட்டை |
| 5. | சி. கந்தையா | நாரந்தனை |

UNIVERSITY OF JAFFNA LIBRARY
250043

| | | |
|---|---|---|
| 6. | க. வைரமுத்து | புலோலி |
| 7. | தா. வேலுப்பிள்ளை | கரவெட்டி |
| 8. | மு. ஆறுமுகம் | மாதகல் |
| 9. | வே. சிவபாதசுந்தரம்பிள்ளை | சரசாலை |
| 10. | ஆ. கந்தசுவாமி | சங்கானை |
| 11. | மு. பொன்னுத்துரை | அராலி |
| 12. | சி. தியாகராசா | மண்டைதீவு |
| 13. | ஆ. சிதம்பரப்பிள்ளை | காரைநகர் |
| 14. | க. பொன்னையா | வதிரி |
| 15. | சு. கந்தசுவாமி | சுளிபுரம் |
| 16. | சு. சரவணமுத்து | சாவகச்சேரி |
| 17. | வே. கணபதிப்பிள்ளை | புலோலி |
| 18. | இ. ஐயாத்துரை | கட்டுவன் |
| 19. | வை. சுப்பிரமணியம் | அராலி தெற்கு |
| 20. | வே. ஐயாத்துரை | அராலி தெற்கு |
| 21. | சி. இராசரத்தினம் | வட்டுக்கோட்டை |
| 22. | ச. வேலுப்பிள்ளை | காரைநகர் |
| 23. | பொ. செல்வத்துரை | அச்சுவேலி |
| 24. | த. பசுபதி | புலோலி |
| 25. | து. ஐயாத்துரை | அளவெட்டி |
| 26. | ச. நாகநாதர் | அளவெட்டி |
| 27. | சி. சிவசுப்பிரமணியம் | வண்ணார்பண்ணை |
| 28. | ஆ. கனகசபை | கரவெட்டி |
| 29. | வே. செல்லையா | வட்டுக்கோட்டை |
| 30. | கி. நாராயணபிள்ளை | பருத்தித்துறை |
| 31. | மு. பொன்னம்பலம் | கெருடாவில் |
| 32. | க. பூபாலசிங்கம் | சாவகச்சேரி |
| 33. | சு. குமாரசாமி | கோப்பாய் |
| 34. | க. அருணாசலம் | மயிலிட்டிதெற்கு |
| 35. | க. சுப்பையா | வட்டுக்கோட்டை |
| 36. | சு. சிவஞானம் | கரணவாய் |

University of Jaffna
250043
Library

ARCHIVES

0614